பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 சித்திரை 02 சனிக்கிழமை (15.04.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :139

## திருமலையில் மீண்டும் வன்செயல் வெடித்தது வீடுகள், கோயில் மீது தாக்குதல்! ஊரடங்கு!!

திருகோணமலை,ஏப்.15

திருகோணமலை நகரிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் நேற்றுப் பிற்பகலில் மீண்டும் தமிழர்களுக்கு எதிரான இனக் கலவரங்கள் வெடித்தன. இதில் பல வீடுகள் தாக்கப்பட்டு தீ வைக்கப்பட்டது. இந்துக் கோயில் ஒன்றின்மீதும் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது.

சிங்களக் குண்டர்களின் தாக்குதல்கள் பரவ ஆரம்பித்ததையடுத்து திருமலை நகரிலும் அதனை அண்டிய உப்புவெளி, சேனன் கோட்டை உட்பட்ட பகுதிகளிலும் உள்ளூர் ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

தமிழர்களுக்கு எதிரான பெரும் வன்செயல்கள் நேற்றுமாலை மஹிந்தபுர பகுதியிலும் இடம்பெற்றிருக்கின்றன.

திருகோணமலை - அனுராதபுரம் வீதியில் கும்பல் ஒன்று தமிழர்களின் வீடுகள் மீது கண்டபடி தாக்குதல் நடத்தியிருக்கின்றது.

நேற்றுமுன்தினம் முதல் அப்பகுதியில் காணாமற்போயிருந்த சிங்கள இளைஞர் ஒருவர் நேற்று வெட்டுக்காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டார். இதனையடுத்தே அங்கு தமிழர்களுக்கு எதிரான வன்செயல் வெடித்தது.

அடையாளம் தெரியாத கும்பல்கள் தமிழர்களின் வீடுகளுக்கு தீ வைத்தன. அப்பகுதியில் உள்ள நடேசர் ஆலயம் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டதாக ஒரு தகவல் தெரிவித்தது.

திருகோணமலை மாவட்ட இளைஞர்

(16ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ வாகனம் மீது கிளைமோர் தாக்குதல்!

### திருமலை அலஸ்தோட்டத்தில் சம்பவம்

திருகோணமலை,ஏப்.15

திருகோணமலையில் நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் இராணுவத்தினர் பயணம் செய்த பஸ் வண்டி ஒன்றின் மீது கிளைமோர் கண்ணித் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது. இதில் இரண்டு இராணுவத்தினர் உட்பட ஐவர் படுகாயமடைந்தனர்.

திருமலை நகருக்கு வடக்கே மூன்று கிலோமீற்றர் தொலைவில் உள்ள அலஸ்

(16ஆம் பக்கம் பார்க்க)

## மக்களைப் பாதுகாக்க நேரிடும் விடுதலைப் புலிகள் எச்சரிக்கை!

திருகோணமலை,ஏப்.15

திருகோணமலையில் இன அழிப்பு நடவடிக்கைகள் தொடருமானால் தமிழ் மக்களைப் பாதுகாப்பதற்கான செயற்பாடுகளில் நேரடியாக இறங்க நேரிடும் என்று விடுதலைப் புலிகள் எச்சரித்துள்ளனர்.

சிங்களக் குண்டர்கள் இராணுவத்தின் உதவியுடன் திருகோணமலையில் மேற்கொண்டுவரும் இன அழிப்புத் தாக்குதல்கள் தொடருமானால் தமிழ்மக்களையும் அவர்களது உடைமைகளையும் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளில் இறங்க விடுதலைப் புலிகள் நிர்ப்பந்திக்கப்படுவர். அவ்வாறான

(16ஆம் பக்கம் பார்க்க)

# பேச்சுக்குப் புதிய திகதி நிர்ணயம்; நடக்குமா என்பது உறுதியில்லை!

## கலவரங்கள், கொலைகள் நிறுத்தப்பட்டு களநிலைமை சீரடைந்தாலேயே சாத்தியம்

ஒஸ்லோ,ஏப்ரல்15

**விடுதலைப் புலிகளுக்கும் அரசுத் தரப்புக்கும் இடையிலான இரண்டாவது கட்டப் பேச்சுகள் நடைபெறும் புதிய திகதிகளை நோர்வே அரசு நேற்று அறிவித்திருக்கின்றது.**

**முன்னைய ஏற்பாடுகளின் படி எதிர்வரும் 19ஆம் திகதி ஜெனீவாவில் ஆரம்பமாக விருந்த இரண்டாம் கட்டப் பேச்சுகளை குறுகிய நாள்கள் ஒத்திவைத்து எதிர்வரும் 24ஆம் 25ஆம் திகதிகளில் நடத்துவதற்கு இரண்டு தரப்புகளும் இணக்கம் கண்டுள்ளன என்று நோர்வே வெளிவிவகார அமைச்சு விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் பேச்சுக்கான புதிய திகதிகள் நிர்ணயிக்கப்பட்டுவிட்டபோதிலும் தமிழர் தாயகப் பகுதிகளில் கள நிலைமையில் மாற்றம் ஏற்படாதவிடத்து பேச்சு நடப்பது பெரும்பாலும் சாத்தியமில்லை என்று புலிகள் தரப்பு வட்டாரங்கள் கூறியிருக்கின்றன.**

விடுதலைப் புலிகளின் கிழக்குத் தளபதிகள் வன்னி வந்து திரும்பிய பின்னரே அடுத்து சுற்றுப்பேச்சு இடம்பெறமுடியும் என்ற நிலைமை காரணமாக ஜெனீவா பேச்சுக்களை ஒத்திவைக்குமாறு விடுதலைப் புலிகள் நோர்வேத்தரப்பிடம் கோரி இருந்தனர்.

-புலிகளின் இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட நோர்வே அனுசரணைத் தரப்பினர் அரசுத் தரப்புடன் பேசி ஏற்படுத்திய இணக்கத்தை அடுத்தே புதிய திகதிகள் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன.

நோர்வே அனுசரணைக்குழு லண்டனில் விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்துடனும் கொழும்பு அரசுத் தலைவர்களுடனும் தொடர்புகொண்டு ஆலோசித்து பேச்சுக்கான புதிய திகதிகளை நிர்ணயித்திருக்கின்றது.

(16ஆம் பக்கம் பார்க்க)

## நகரப் பகுதியில் நேற்றிரவு கிரனேட் வீச்சு!

யாழ்ப்பாணம்,ஏப்.15

யாழ்.நகரில் காங்கேசன்துறை வீதியில் வண்ணை சிவன் ஆலயத்துக்குப் பக்கத்தில் அமைந்திருக்கும் இராணுவ நிலை மீது நேற்றிரவு 7.30 மணியளவில் கிரனேட் தாக்குதல் நடத்தப்பட்டது.

பெரும் சத்தத்துடன் கிரனேட் வெடித்தது. அதனையடுத்து படையினர் வேட்டுக்களைத் தீர்த்தனர். இதனால் நகரப் பகுதியில் பதற்றம் ஏற்பட்டது.

மோட்டார் சைக்கிளில் வந்தவர்களே படை நிலை மீது கிரனேட்டை வீசி விட்டுத் தப்பிச் சென்றனர் என்று பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

சம்பவத்தை அடுத்துப் படையினர் அந்தப் பகுதியில் தேடுதலில் ஈடுபட்டனர். எனினும் எவரும் கைதுசெய்யப்பட்டதாகத் தெரியவில்லை.

(ஐ-7)(22)

## நல்லூரில் நேற்று மாலை விபத்தில் இளைஞன் பலி!

யாழ்ப்பாணம்,ஏப்.15

நல்லூரில் நேற்று மாலை இடம்பெற்ற வீதி விபத்தொன்றில் மோட்டார் சைக்கிளைச் செலுத்திச்சென்ற இளைஞர் ஒருவர் உயிரிழந்தார். அவரோடு கூடப் பயணம் செய்த மற்றோர் இளைஞர் காயமடைந்தார்.

கச்சேரி - நல்லூர் வீதியில் வான் ஒன்றும் மோட்டார் சைக்கிளும் மோதிக்கொண்டதில் இந்த விபத்து நேர்ந்தது.

உயிரிழந்த இளைஞர் செலுத்திவந்த மோட்டார் சைக்கிள் முத்திரைச் சந்திப் பக்கம் இருந்து கச்சேரி - நல்லூர் வீதியில் வந்து கொண்டிருந்தபோது எதிர்த் திசையில் வந்த சிறிய வான் ஒன்றுடன் மோதுண்டது என்று கூறப்படுகிறது.

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஜெனீவா செல்லும் புலிகள் குழுவுக்கு சர்வதேச பாதுகாப்பு உத்தரவாதம்

### நோர்வே ஊடாகப் பெறுவதற்கு புலிகளின் தலைமை முடிவு

கிளிநொச்சி,ஏப்.15

ஜெனீவாவில் நடைபெறவிருக்கும் அடுத்த சுற்றுப் பேச்சுகளில் கலந்துகொள்ள இருக்கும் விடுதலைப் புலிகளின் உயர் நிலைப் பிரதிநிதிகள் குழுவுக்கு சர்வதேச பாதுகாப்பு உத்தரவாதத்தை விடுதலைப் புலிகளின் தலைமை கோரியிருக்கின்றது.

அனுசரணைத் தரப்பான நோர்வேயிடம் புலிகளின் தலைமை இந்த உத்தரவாதத்தை கோரியிருக்கின்றது என்று புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் உதயனுக்குத் தெரிவித்தார்.

பேச்சுகளில் பங்குபற்றுவதற்காக ஜெனீவா செல்லும் தமது தலைவர்கள் கட்டுநாயக்க விமானத் தளம் ஊடாக பயணம் செய்வதற்கான பாதுகாப்பு உத்தரவாதத்தை இலங்கை அரசும் ஜனாதிபதியும் நோர்வே தரப்பும் வழங்கவேண்டும் என்று விடுதலைப் புலிகள் ஏற்கனவே கோரியிருந்தனர்.

அவ்வாறு உத்தரவாதம் தரப்படாவிட்டால் கட்டுநாயக்க விமான நிலையத்தைத் தவிர்த்து வன்னியில் இருந்து நேரடியாக கடல் விமானம் மூலம் பயணிக்கும் திட்டம் பற்றி பரிசீலிக்குமாறும் புலிகள் கேட்டிருந்தனர்.

இதனையடுத்து புலிகளின் உயர் மட்டக்

(16ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



யாழ்.நகரில் நேற்று நண்பகல் சுட்டுக்கொல்லப்பட்ட முஸ்லிம் இளைஞனின் சடலத்தையும் அவர் கொல்லப்பட்ட இடத்தில் பொலீஸார் விசாரணை நடத்தி தடயங்களைப் பார்வையிடுவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள் : பிரபா)

## ஏழாலையில் விபத்தில் குழந்தை காயம்

ஏழாலை தெற்கு, களபாவோடை மயிலங்காடு முச்சந்தியில் நேற்றுக்காலை 7.30 மணியளவில் இடம்பெற்ற வீதி விபத்தில் ஒன்றரை வயது ஆண் குழந்தையும் தந்தையும் காயமடைந்தனர். இவர்கள் இருவரும் பயணம் செய்த மோட்டார் சைக்கிள் போக்குவரத்துச் சபை பஸ் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானது.

மோட்டார் சைக்கிளின் முன்பாக இருந்து பயணம் செய்த குழந்தை தூக்கி வீசப்பட்டு காயமடைந்தது.

கண்ணன் சந்தோஸ் எனப்படும் அந்தக் குழந்தையும் தந்தையும் காயங்களுடன் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர். (ஐ-45)

# இளம் முஸ்லிம் வர்த்தகர் யாழ்.நகரில் சுட்டுக்கொலை!

யாழ்ப்பாணம்,ஏப்.15

யாழ்.நகரப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் இளம் முஸ்லிம் வர்த்தகர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

ஒஸ்மானியாக் கல்லூரி வீதியில் வசித்து வந்த முகமட் நிஸ்மி(வயது 25) என்ற இளைஞரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார். இவர் கொழும்பில் இருந்து வந்து இங்கு தங்கி இருந்தார்.

நடைபாதைக் கடைகள் அமைந்துள்ள முனீஸ்வரன் வீதியில் கந்தப்பர் லேன் சந்திக்கும் இடத்தில் வைத்து பிற்பகல் ஒரு மணியளவில் இனந்தெரியாத நபர் ஒருவ ரால் இவர் சுடப்பட்டார்.

சுடப்பட்டு வீழ்ந்த இளைஞரை உடனடியாக வைத்தியசாலைக்குக் கொண்டுசென்ற போது அவர் இடைவழியில் உயிரிழந்தார்.

சித்திரைப் புத்தாண்டு தினமான நேற்று நகரில் முனீஸ்வரன் வீதியில் அமைந்துள்ள நடைபாதைக் கடைகளில் சனக்கூட்டம் நிரம்பி வழிந்தது. அச்சமயம் உயிரிழந்த இளம் வர்த்தகர் நடைபாதைக் கடைகள் சிலவற்றில் தனக்கு வரவேண்டிய பணத்தை வசூலித்துக் கொண்டிருந்தார் என்று கூறப்படுகிறது. அப்போது சன நெருக்கடிக்கு மத்தியில் அவரை நெருங்கி வந்த இனந்தெரியாத நபர் ஒருவர் பிஸ்டலால் சுட்டுவிட்டு தப்பிச் சென்றார் என்று தெரிவிக்கப்பட்டது.

இவர் சுடப்பட்ட இடத்துக்கு உடனடியாக இராணுவத்தினர் விரைந்து வந்தனர். அப்பகுதியில் நடைபாதைக் கடைகள் அனைத்தும் இழுத்து மூடப்பட்டன. கூடியிருந்த மக்கள் பாதுகாப்புத் தேடி ஓடத் தொடங்கினார்கள். மினிபஸ் தரிப்பிடத்தில் நிறுத்தப்பட்டிருந்த மினிபஸ்கள் அனைத்தும் அவ்விடத்தில் இருந்து பறந்தன. இதனால் சில மணி நேரம் நகரப் பகுதி வெறிச்சோடிக் காணப்பட்டது. பின்னர் நிலைமை வழமைக்குத் திரும்பியது.

உயிரிழந்த முஸ்லிம் இளைஞரின் சடலத்தைப் பார்வையிடுவதற்கு முஸ்லிம்கள் பலர் யாழ்.ஆஸ்பத்திரியில் கூடினர்.

சூட்டுச் சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு விரைந்த பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

(ஐ-8-7-15)(22)

# முஸ்லிம் இளைஞரின் கொலையை கண்டிக்கிறது விழிப்புணர்வுக் கழகம்

யாழ்ப்பாணம்,ஏப்.15

இளம் வர்த்தகரான முஸ்லிம் இளைஞர் ஒருவர் யாழ்.நகரில் சுட்டுக்கொலை செய்யப்பட்ட சம்பவத்தைக் கண்டித்திருக்கும் தமிழ்த்தேசிய விழிப்புணர்வுக் கழகம் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களிடையிலான நல்லுறவைச் சீர்குலைக்கும் முயற்சி இது என்றும் தெரிவித்திருக்கிறது.

குடாநாட்டில் அதிகரித்து வரும் படுகொலைகள் தொடர்பாக தமிழ்த்தேசிய விழிப்புணர்வுக் கழகம் நேற்று அறிக்கை ஒன்றை விடுத்தது.

தமிழர் தாயகப் பிரதேசங்களில் சிறிலங்கா இராணுத்தினராலும் அவர்களோடு இணைந்து இயங்கும் ஒட்டுக் குழுக்களாலும் நாளுக்கு நாள் படுகொலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கடந்த சில நாள்களாக குடாநாட்டிலும் கொலைகள் இடம்பெற்று வருகின்றன. அந்த வகையில் இரு தினங்களில் இரண்டு இளைஞர்களும் மறுநாள் நான்குபேரும் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். அதன் தொடர்ச்சியாக யாழ். நகரப் பகுதியில் வைத்து முஸ்லிம் சகோதரன் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். இது தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக் கும் உள்ள உறவை சீர்குலைக்கும் நோக்கத்துடன் செய்யப்பட்டிருக்கிறது.

சிங்களப் படையினதும் ஒட்டுக்குழுவினதும் இவ்வாறான செயற்பாடுகள் அவர்களை விரைவில் இந்த மண்ணில் இருந்து ஓடவைக்கும் என்பது தெளிவாகிறது. இவ்வாறன செயற்பாடுகளை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். - என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)(22)

## ஜமுனா ஏரியில் தவறி வீழ்ந்தவர் மரணம்!

யாழ்ப்பாணம்,ஏப்.15

நீரில் மூழ்கி உயிரிழந்தார் எனத் தெரிவித்து சடலம் ஒன்று நேற்று யாழ்.போதனா வைத் தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

நேற்றுக் காலை நல்லூர் ஜமுனா ஏரியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அப்பகுதியைச் சேர்ந்த எஸ்.இலட்சுமணன் (வயது 41) என்பவரே ஏரியில் வீழ்ந்து மரணமானார்.

சடலம் மரண விசாரணையின் பொருட்டு வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (ஐ-15)(22)

# படுகொலைகள், இனக்கலவரங்கள் யுத்த சூழலையே தோற்றுவிக்கும்

## யாழ்.மாவட்ட அரசியல்துறை அறிக்கை

பளை,ஏப்.15

தமிழர் தாயகப் பிரதேசத்தில் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டுவரும் படுகொலைகளும் இனக்கலவரங்களும் போர்ச்சூழலையே உருவாக்கிவிடும் என்று விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்துறை தெரிவித்திருக்கிறது.

கிழக்கில் இடம்பெற்றுவரும் இனக்கலவரங்கள் மற்றும் யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் படுகொலைகள் தொடர்பாக அரசியல்துறை நேற்று விடுத்த அறிக்கை ஒன்றிலேயே இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறுபான்மை இனங்களை அழிப்பதும் அவர்களின் வாழ்வியலை சிதைப்பதும் இனங்களிடையே மோதல்களை உருவாக்குவதுமே சிங்கள ஆட்சியாளர்களின் கடந்த கால வரலாறு. இதை எமது மக்கள் வரலாற்று ரீதியாக அறிந்துள்ளனர். இது இவ்வாறு இருக்க கடந்த சில வாரங்களாக திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் குடாநாடு போன்ற பகுதிகளில் எமது மக்கள் மீது மிகக் கொடூரமான வன்முறைகளையும் படுகொலைகளையும் மேற்கொண்ட அரச பயங்கரவாதம் இன்று யாழ்ப்பாணத்தில் முஸ்லிம் சகோதரர் ஒருவரையும் சுட்டுப் படுகொலை செய்துள்ளது.

இவ்வறான சம்பவங்கள் அரசு சமாதானத்தின் மீது பற்றுறுதி கொண்டு செயற்படவில்லை என்பதையே வெளிப்படுத்தி நிற்கின்றது.

இது மிக விரைவில் யுத்த சூழலையே தோற்றுவிக்கும் என்பதையே சுட்டிக்காட்ட விரும்புகிறோம் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-7)(22)

## உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம்,ஏப்.15

இளவாலை யங்ஹென்றீஸ் கல்லூரியின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்றும் நாளையும் பிற்பகல் 4 மணிக்கு இளவாலை ஹென்றீஸ் விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்கேற்கும் அணிகளின் விவரம் வருமாறு:-

**இன்று**

மயிலங்கூடல் ஞானமுருகன் வி.க. எதிர் அரியாலை ஐக்கிய வி.க.

**நாளை**

ஊரெழு றோயல் வி.க. எதிர் வல்வெட்டி ஆதிசக்தி வி.க. (202)(22)

## லயன்ஸ் கழக பிராந்திய மாநாடு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.15

சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306 பி-1 பிராந்தியம் 5,6 என்பன இணைந்து ஏற்பாடு செய்திருந்த பிராந்திய மாநாடு (2005-2006) ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

இந்தமாநாடு நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு மருதனார்மடத்தில் உள்ள யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனத்தில் நடைபெற இருந்தது. மாநாட்டில் கலந்து கொள்ள இருந்த மாவட்ட ஆளுநர் 306 பி-1 லயன்ஸ் சரத் குணசேகரவும் விசேட விருந்தினர் உப ஆளுநர் லயன் லலித் பெர்னாண்டோவும் தவிர்க்கமுடியாத காரணத்தால் வருகைதராததை அடுத்து மாநாடு அடுத்த மாதம் 12ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. (ஐ)(22)

# படுகொலைகள் மற்றும் ஆயுத நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளியிடக் கோருகிறது இணைத் தலைமை

கொழும்பு,ஏப்.15

இலங்கையில் மீண்டும் வன்செயல்கள் தலையெடுத்திருப்பது குறித்து கண்டனத்தை வெளியிட்டிருக்கும் இணைத் தலைமை நாடுகள் படுகொலைகள், ஆயுத நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படவேண்டும் என்று வற்புறுத்தியுள்ளன.

ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான், நோர்வே மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளை உள்ளடக்கிய - இலங்கைக்கு உதவி வழங்கும் - இணைத்தலைமை நாடுகளின் கூட்டு அறிக்கை ஒன்று நேற்று வெளியிடப்பட்டது.

ஜெனீவாவில் பெப்ரவரி பேச்சுகளுக்கமைய அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் வன்முறைகள், படுககொலைகள் மற்றும் ஆயுத நடவடிக்கைகளுக்கு முடிவு ஏற்படுத்த வேண்டும் என்றும் இணைத் தலைமை நாடுகள் வலியுறுத்தியுள்ளன.

இருதரப்பினரும் நம்பிக்கையையும் அமைதி நீடிப்பதற்கு ஏதுவான சூழ்நிலையையும் உருவாக்கவேண்டும் என்றும் இணைத் தலைமை நாடுகளின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டோக்கியோவில் எதிர்வரும் 24ஆம் திகதி இலங்கை அமைதி முயற்சிகள் தொடர்பாக இணைத் தலைமை நாடுகளின் கூட்டம் நடைபெறவுள்ளது என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)(22)

# சம்பூரில் ஷெல் வீச்சில் இருவர் காயம்!

திருகோணமலை,ஏப்.15

திருகோணமலை, சம்பூரில் கடற்படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில்இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

சம்பூர் மேற்குக் கரைப் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலை 6.05 மணியளவில் இத்தாக்குதல் இடம்பெற்றது.

சம்பூர் கடற்கரைப் பிரதேசத்தினை அண்மித்த பகுதியில் தரித்து நின்ற கடற்படைக்கலங்கள் தமிழ் மக்களின் குடியிருப்புக்களை இலக்கு வைத்து எறிகணைத் தாக்குதலைத் தொடர்ந்து நடத்தின.

இதில் சம்பூர் பகுதியைச் சேர்ந்த தவராசா,கோணலிங்கம் சாவித்திரி ஆகிய இருவரும் படுகாயம் அடைந்துள்ளனர்.

இச்சம்பவம் குறித்து இலங்கைப் போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவின் திருகோணமலை மாவட்ட தலைவரிடம் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் முறைப்பாடு செய்துள்ளார். (ஐ)(22)

## மாணவருக்கு சைக்கிள் வழங்கும் வைபவம்

யாழ்ப்பாணம்,ஏப்.15

சமூக அபிவிருத்தி மன்றத்தினரால் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் மாணவர்களுக்கான துவிச்சக்கரவண்டிகள் வழங்கும் திட்டத்தில் 150 ஆவது துவிச்சக்கர வண்டி வழங்கும் வைபவம் இன்று மன்றத்தில் நடைபெறவுள்ளது.

சமூக அபிவிருத்தி மன்றத்தின் தலைவி திருமதி நவநீதம் ஜெகதீசன் தலைமையில் இந்த வைபவம் நடைபெறவுள்ளது.

இதேவேளை-

கணக்கியல் கருத்தரங்கு ஒன்றை நடத்த சமூக அபிவிருத்தி மன்றம் ஒழுங்கு செய்துள்ளது. இளைப்பாறிய கூட்டுறவுப் பரிசோதகர் திருமதி ருக்மணி ஆனந்தவேல் இந்தக் கருத்தரங்கில் விரிவுரையாளராகக் கலந்துகொள்ளவுள்ளார்.

மன்ற அங்கத்தவர்கள், அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் உட்படப் பலர் இந் நிகழ்வில கலந்துகொள்ளவுள்ளனர். (ஐ-203)(22)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

## திருகோணமலை இனக்கலவரத்தை மூடிமறைக்கும் அரசின் முயற்சி

கடந்த வருடம் லண்டனில் மாவீரர் தின நிகழ்வில் உரையாற்றிய விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் வேடிக்கையாகவும் - அதேசமயம் அர்த்தம் பொதிந்ததாகவும் - குறிப்பிட்ட ஓர் அம்சம் இப்போது நினைவு கூரத்தக்கது. அந்த உரையில் அவர் ''சிங்களவர்களுக்கு மேல்மாடி இல்லை'' - என்றார்.

அது உண்மைதான் போலும். அதை நிரூபிக்குமாற் போல சிங்களம் நடந்து கொள்ள முயற்சிக்கின்றது.

தமது நியாயமான உரிமைகளுக்காக மூன்று தசாப்த காலம் அஹிம்சை வழியில் - காந்தீய நெறியில் - ஜனநாயக முறையில் - நடத்திய போராட்டங்கள் ஆயுத முனையில், பலாத்கார முறையில், வல்வந்தமாக அடக்கப்பட்டபோது தமது போராட்டத்தை வன்முறை வழிக்கு எழுபதுகளின் பிற்பகுதியில் திருப்பினர் தமிழர்கள்.

எண்பதுகளின் ஆரம்பத்தில் மெல்ல முகிழத் தொடங்கிய இந்த ஆயுதப் போராட்டத்துக்கு பெரும் பாய்ச்சல் கொடுக்கும் உந்து சக்தியாக அமைந்தது எது? 1983 இல் தமிழர்களுக்கு எதிராக பௌத்த-சிங்களப் பேரினவாதம் கட்டவிழ்த்துவிட்ட பெரும் இனக்கலவரமே தமிழர்களின் ஆயுதப் போராட்டத்துக்கு புத்தெழுச்சியையும் புத்துணர்ச்சியையும் ஊட்டி, அதை இன்றைய நிலைக்கு விஸ்வரூபம் எடுக்க வைத்தது என்பது இலங்கையின் அரசியலில் அரிச்சுவடிகூடப் படிக்காதவர்களுக்கும் தெரிந்த விடயம்.

1983 ஆடிக் கலவரத்தின்போது தாங்கள் விதைத்த வினையின் பெறுபேற்றைத்தான் இன்று பெரும் போராக - போரழிவாக - சுமக்க முடியாமல் சுமந்து கொண்டிருக்கிறது சிங்களம்.

அந்தப் பட்டறிவுப் பாடத்தை மறந்து மீண்டும் அதே போன்ற செயல்களைத் தொடர்ந்து, அதன் விளைவாக ஏற்படக் கூடிய மோசமான வினைகளைச் சுமப்பதற்கு தென்னிலங்கை தயாராவதைப் பார்த்தால் சிங்களத்துக்கு மேல்மாடி இல்லை என்று மதியுரைஞர் பாலசிங்கம் கூறியது கனகச்சிதமாகப் பொருந்துகின்றது என்றே படுகின்றது.

1983 ஆடிக் கலவர நிலைமை வேறு. இப்போதைய நிலைவரம் வேறு.

இப்போது தமிழர் தாயகம், தனக்கென ஒரு நிழல் அரசை நிறுவி, தனக்குப் பாதுகாப்பாக ஒரு மரவு வழிப் படையணியை இராணுவம், கடற்படை, விமானப்படை என்ற ஒழுங்கமைப்போடு ஸ்தாபித்து, தனக்கென சுய ஒழுங்கமைப்பாக சட்டம், நீதி, காவல்துறைக் கட்டமைப்புகளை ஏற்படுத்தி, ஒரு தனியான தேசத்தைத் தனது பூர்வீகத் தாயகப் பூமியில் பிரகடனப்படுத்தும் தயார் நிலையை நெருங்கிக் கொண்டிருக்கின்றது.

இந்தச் சமயத்தில் 1983 ஆடிக் கலவரம் போன்ற ஒன்றைத் தமிழர்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடும் சிங்களத்தின் எத்தனத்தைப் பார்க்கும்போது மேல்மாடி இல்லை என்றகூற்றை நம்புவதைத் தவிர வேறு வழியில்லை அன்றோ?

ஈழத் தமிழர்கள் இன்று தனிநாடு என்ற தமது கனவை எட்டுவதற்குத் தடையாக இருப்பது சர்வதேச அங்கீகாரம் ஒன்றே. அதுவும் கிடைக்குமானால் தனித் தமிழீழம் சாத்தியமாவதில் சந்தேகம் இருக்காது.

ஈழத் தமிழர்களின் தேசிய இனப் பிரச்சினைக்கு, அவர்களின் நியாயமானஅபிலாஷைகளை நிறைவுசெய்யும் அதிகாரப் பகிர்வுத் திட்டம் ஒன்றை முன்வைப்பதன் மூலம், இந்தப் பிணக்குக்கு இணக்கத் தீர்வு ஒன்றைக் காண முயற்சிப்பதை விடுத்து -

தமிழர்களின் தாயக மண்ணில் - தமது தலைநகராக அவர்கள் மதித்துப் போற்றும் திருகோணமலை நகரின் மத்தியில் - தமிழர்களுக்கு எதிரான இனக்கலவரம் ஒன்றைக் கட்டவிழ்த்துவிட்டு, அவர்களை அச்சுறுத்தி அடக்குகிறோம் என்ற தீவிர வெறியில் அவர்களின் உடைமைகளை எரித்து, அவர்களை சுட்டும், வெட்டியும், எரித்தும், கொன்றும் பெரும் கொடூரம் புரிந்து -

அதன் மூலம் ஈழத் தமிழர்களின்பால் சர்வதேசத்தின் பரிவையும், சிரத்தையையும், அனுதாபத்தையும் திருப்பச் செய்து, தனிநாடு காண்பதற்கான தமிழர்களின் உறுதியான தீர்மானத்துக்குச் சர்வதேச ரீதியில் நியாயத்தையும், அங்கீகாரத்தையும் பெற்றுக்கொடுக்க சிங்களம் கங்கணம் கட்டி நிற்கின்றது.

தமிழர்களுக்கு எதிராக 'அரச பயங்கரவாதத்தின்' துணையோடு சிங்களத்தின் கொடூரத்தையும், பௌத்தத்தின் பெயரால் மிலேச்சத்தனத்தையும் கட்டவிழ்த்துவிடும் திட்டம் எவ்வளவு மோசமான பின் விளைவுகளை - சர்வதேச சிக்கல்களையும் தலையீடுகளையும் - தரும் என்பதை, திருகோணமலை நகரில்கடந்த புதன்கிழமை மாலையில் இனக்கலவரத்தைக் கட்டவிழ்த்துவிட்டு இரண்டு மணி நேரத்துக்குள் புதுடில்லியில் பிரதமர் அலுவலகத்தில் இருந்து, கொழும்பில் ஜனாதிபதியின் அலரிமாளிகைக்கு அவசர அவசரமாக வந்த தொலைபேசி அழைப்பு மூலம் கொழும்பு அரசு நன்கு உணர்ந்திருக்கும்; புரிந்திருக்கும்.

ஒரு நாள் மாலை முழுவதும் சிங்களப் படைகள் பார்த்திருக்க - அதற்கும் மேலே போய் பெரும்பான்மையினக் காடையர்களுக்கு அவர்களின் படைகள் ஊக்குவித்து, உற்சாகமளித்து, பாதுகாப்பு அளித்துத் தூண்டிவிட - இனக்கலவரம் என்ற பேயாட்டமும் ஊழிக் கூத்தும் அரங்கேறிய பின்னர் -

இனக்கலவரம் என்ற எதுவுமே திருமலையில் இடம் பெறவே இல்லை என்ற சாரப்பட இலங்கை அரசுத் தலைமை 'முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைக்கும்' முயற்சியில் முனைப்புடன் ஈடுபட்டமைக்கு, மேற்படி சர்வதேச கருத்து உருவாக்கத்தின் விளைவுகளை அது தாமதித்தேனும் உணர்ந்ததுதான் காரணம்.

என்றாலும், உச்சத்துக்கு வளர்த்திருக்கும் நவீன தொடர்பாடல் வசதிகளுக்கு மத்தியில் இத்தகைய 'உண்மையை, குழிதோண்டி வெட்டிப் புதைக்கும்' முயற்சியில் இலங்கை அரசு வெற்றிபெறுவது துர்லபமே.

# திருமலையில் தமிழருக்கு எதிரான இனக்கலவரம்: கடற்படையே காரணம் என்கின்றது கூட்டமைப்பு

கொழும்பு, ஏப்.15

கடந்த புதனன்று திருகோணமலை நகரில் தமிழர்களுக்கு எதிரான இனக்கலவரம் ஒன்று கட்டவிழ்த்து விடப்பட்டமைக்கு இலங்கைக் கடற்படையினரே சூத்திரதாரிகள் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குற்றம் சாட்டியிருக்கின்றது.

இது தொடர்பாக கூட்டமைப்பு நேற்று முன்தினம் விடுத்த பத்திரிகை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு வடக்கு - கிழக்கில் இன்று எழுந்துள்ள சூழ்நிலை தொடர்பாக - விசேடமாக திருமலையில் ஏற்பட்டுள்ள பதற்றச் சூழ்நிலை தொடர்பாக - கொழும்பில் அவசரமாகக் கூடி ஆராய்ந்தது.

கடந்த ஜெனீவாப் பேச்சுகளின் பின்னர் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் ஏற்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் ஸ்ரீலங்கா ஆயுதப்படைகளுடன் இணைந்து பணிபுரியும் துணைப்படைகளை நிராயுதபாணிகளாக்குவது என்ற விடயம் ஏற்கப்பட்டிருந்தும்கூட அது தொடர்பாக எதுவித நடவடிக்கைகளும் அரச தரப்பினால் நடைமுறைப் படுத்தப்படவில்லை. மாறாக, திருமலை மக்கள் பேரவைத் தலைவர் விக்னேஸ்வரன் உட்பட வடக்கு-கிழக்கில் பல்வேறுபட்ட தமிழ் பொதுமக்கள் தொடர்ச்சியாக துணைப்படைகளால் கொலை செய்யப்பட்டு வருகிறார்கள். இராணுவப் புலனாய்வுப் பிரிவினரும் இத்தகைய தமிழ் மக்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு துணையாக இருந்து செயற்பட்டு வருகின்றார்கள் என்பது வெளிப்படை. இத்தகைய தொடர் நடவடிக்கைகள் திருமலையில் இன்று ஏற்பட்டுள்ள பதற்றமான சூழ்நிலைகளுக்கு அடிப்படைக்காரணமாகும்.

1983 ஆடி இனக்கலவரம் போலவே திருமலையிலும் ஸ்ரீலங்கா கடற்படையினரின் முழுமையான ஒத்துழைப்புடனும் - பங்களிப்புடனும் புதனன்று தமிழ் பேசும் மக்களுக்கு எதிரான வன்முறைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டன. கடற்படையினர் தமது ட்ரக் வண்டிகளில் சிங்களக் காடையர்களை திருமலை நகருக்கு அழைத்து வந்து அங்குவாழும் தமிழ்பேசும் மக்களைக் கொன்று, அவர்களுக்குச் சொந்தமான வர்த்தக நிலையங்களை கண்மூடித்தனமாகத் தாக்கி அழிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர். இதில் பல தமிழ் பேசும் மக்கள் கொல்லப்பட்டும் இன்னும் பலர் கடுமையான காயங்களுக்கு உள்ளாகி சிகிச்சைபெற்றும் வருகின்றனர். அதேபோல இருபதுக்கும் மேற்பட்ட தமிழ் பேசும் மக்களது வர்த்தக நிலையங்கள் சூறையாடப்பட்டு எரிக்கப்பட்டுள்ளன. இவையாவும் கடற்படையினரின் ஒத்துழைப்புடனும் அவர்களின் முன்னிலையிலேயே நடைபெற்றுள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் கடந்த 11ஆம் திகதி மாலை 5.30 மணியளவில் திருகோணமலை அபயபுர பகுதியில் கடற்படையினரின் முன்னிலையில் சிங்களக் காடையர்களினால் தாக்கப்பட்டு அவரது வாகனமும் நொறுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அரச படைகளின் இவ்வாறான பயங்கரவாத நடவடிக்கைகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வன்மையாகக் கண்டிக்கிறது.

இத்தகைய நடவடிக்கைகள் திருமலைவாழ் தமிழ்பேசும் மக்களை அச்சுறுத்தலுக்குள்ளாக்கி அவர்களை திருமலை மண்ணைவிட்டு வெளியேற்றி திருகோணமலையை சிங்கள மயமாக்கும் சிங்கள இனவாத சக்திகளின் தொடர்ச்சியான இன ஒழிப்பு நடவடிக்கைகளின் ஓர் அங்கமாகவே நாங்கள் கருதுகின்றோம்.

அரசினதும், இனவாத சக்திகளினதும் இவ்வாறான நடவடிக்கைகள் ஜெனீவா சமாதான பேச்சுகளை நிச்சயமாக சீர்குலைத்துவிடும் என நாம் அச்சமடைகின்றோம்.

இத்தகைய தமிழ்பேசும் எமது மக்களுக்கு எதிரான அரச பயங்கரவாத இன ஒழிப்பு நடவடிக்கைகளை சர்தேச சமூகம் கண்டிக்க வேண்டும். இலங்கை அரசாங்கம் தமிழ்பேசும் பொதுமக்களுக்கு எதிரான அரச பயங்கரவாத நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்த வேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வற்புறுத்துகின்றது.

இந்த வன்முறைச் சம்பவங்களினால் பாதிக்கப்பட்டு உயிரிழந்த அப்பாவிப்பொதுமக்களின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ள பொதுமக்கள் கூடிய விரைவில் குணமடைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றோம். - என்று உள்ளது.

(க)

# புலிகள் மீது குற்றஞ் சுமத்துகிறது அரசு

கொழும்பு,ஏப்.15

''திருகோணமலைநகரில்புதன்கிழமை இடம்பெற்ற பாரிய குண்டுவெடிப்புச் சம்பவத்திற்கு தமிழீழ விடுதலைப் புலிகளே கரரணம். இச்சம்பவம் மாத்திரமன்றி இதற்கு முன்பு இடம்பெற்ற கிளைமோர் தாக்குதல்களுக்கும் புலிகளே காரணம்.

''சமாதானத்தை விரும்பாத புலிகள் இம்முறை ஜெனீவாவில் இடம்பெறவுள்ள அமைதிப் பேச்சைக் குழுப்புவதற்கும் இனக்கலவரத்தை ஏற்படுத்துவதற்கும் முயலுகின்றனர். இருப்பினும் அரசு இதற்கு இடம் கொடாது. அமைதிப் பேச்சை முன்னெடுத்துச் செல்வதில் அரசு உறுதியாகவுள்ளது.''

- இவ்வாறு ஊடகத்துறை அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்தார். நேற்றுமுன்தினம் கொழும்பில் தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது -

புதன்கிழமை திருமலை நகரில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல் புலிகளின் நன்கு திட்டமிடப்பட்டதொன்றாகும். இத்தாக்குதல் அப்பாவிப் பொதுமக்கள்மீது நடத்தப்பட்டுள்ளதால் தமிழ் - சிங்கள மக்களிடையே இனக்கலவரத்தை ஏற்படுத்தி அதன்மூலம் லாபம் பெறுவதே புலிகளின் திட்டம்.

சமாதான முன்னெடுப்புகளில் புலிகளுக்கு துளிஅளவேனும் விருப்பமில்லையென்பதை இத்தாக்குதல் நடவடிக்கைகள் புலப்படுத்துகின்றன. இம்மாதம் ஜெனீவாவில் இடம்பெறவுள்ள அமைதிப் பேச்சில் கலந்துகொள்ளாது, அதைத் தவிர்த்து இனக்கலவரங்களைத் தூண்டி, அவைமூலம் லாபம் அடைவதே புலிகளின் திட்டமாகவுள்ளது.

ஆனால் திட்டமிட்டபடி பேச்சு நடக்கும்.

திருமலை சம்பவத்தையிட்டு அரசு மிகவும் கவலையடைகின்றது. பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அரசு தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறது. இந்த நேரத்தில் பொறுமை காக்க வேண்டும் என நாம் அனைத்து மக்களையும் கேட்டுக்கொள்கிறோம்.

திருமலைக் குண்டுச் சம்பவம் நிகழ்ந்தவுடன் அமைச்சர்கள் ரோஹித்த போகல்லாகம, கெஹெலிய ரம்புக்வெல்ல, பேட்டி பிரேமலால் மற்றும் பொலீஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ ஆகியோர் ஜனாதிபதியின் அவசரப் பணிப்பின்படி திருமலைக்கு நேரில் சென்று நிலைமையை அவதானித்தனர்.

அசம்பாவிதங்கள் ஏதும் ஏற்பாடாவண்ணம் ஊரடங்குச் சட்டத்தைப் பிறப்பித்து நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டனர்.

இப்போது திருமலை நகரம் முழுமையாக வழமைக்குத் திரும்பிவிட்டது. மேலும் அசம்பாவிதங்கள் ஏதும் ஏற்படாவண்ணம் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது. தமிழ் - சிங்களப் புதுவருடத்தைக கொண்டாடுவதற்கு ஏதுவாக திருமலையில் ஊரடங்கு உத்தரவு நீக்கப்பட்டுள்ளது.

மக்கள் அஞ்சத் தேவையில்லையென்றும் புலிகளின் சதித்திட்டம் வெற்றியளிக்கும் வகையில் மக்கள் அசம்பாவிதங்களில் ஈடுபடக்கூடாது என்றும், நாம் மக்களை வேண்டிக் கொள்கிறோம். மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த அத்தனை நடவடிக்கைகளையும் நாம் மேற்கொண்டுள்ளோம். -என்றார்.

(க)

# தமிழீழத் தொலைத் தொடர்பகம் கிராஞ்சியில் நேற்றுத் திறப்பு

வெள்ளாங்குளம்,ஏப்.15

பூநகரிப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கிராஞ்சியில் தமிழீழ தொலைத் தொடர்பு நிலையத் திறப்பு விழா புதுவருடப் பிறப்புத் தினமான நேற்று நடைபெற்றது.

பூநகரிப் பிரதேச தொலைத் தொடர்பு நிலைய மேலாளர் கி.ரவி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பொதுச்சுடரை தமிழீழ தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தல் பிரிவுப் பணிப்பாளர் அ.அருணன் ஏற்றினார்.

தேசியக் கொடியை முழங்காவில் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழரசன் ஏற்றினார்.

மாவீரர்களின் திருவுருவப் படங்களுக்கு மாவீரர் பெற்றோர் மலர் மாலை அணிவித்து ஈகச் சுடர் ஏற்றினர்.

அகவணக்கத்துடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின. தமிழீழ தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தல் பிரிவுப் பணிப்பாளர், அருணன் நாடாவெட்டி நிலையத்தைத் திறந்துவைத்தார்.

தொடர்ந்து மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு, கருத்துரைகள் என்பன இடம்பெற்றன. பிற்பகல் கட்டுநாயக்க விமான நிலையத் தாக்குதலில் காவியமான மாவீரர்களின் நினைவுக் கேடயத்துக்கான உதைபந்தாட்டப் போட்டிகள் இடம் பெற்றன.

கிராஞ்சியில் தொலைத் தொடர்பு நிலையம் நிறுவப்பட்டமை இப்பிரதேச மக்களின் தொடர்பாடலை இலகுபடுத்தியுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-415-204)

## நாளை

சித்திரை 03
ஞாயிற்றுக்கிழமை
16.04.2006
திதி: திருதியை
பின்னிரவு : 12.01 வரை
நட்சத்திரம் : விசாகம்
பிற்பகல் : 2.03 வரை
சுபநேரம் : 09.04 - 10.34
ராகுகாலம் : 04.34 - 06.04
உயிர்ப்பு ஞாயிறு பெருவிழா
(யாவும் புழைய நோப்படி)

## உதயவாக்கு

*பாவச் செயல் இன்பத்தைத் தராது; புண்ணியச் செயல் துன்பத்தைக் கொடுக்காது.*

- வ.உ.சி.

## திரைப்படக் காட்சி

யாழ்ப்பாணம்,ஏப்.15

யாழ்.பல்கலைக்கழகத் திரைப்பட வட்டத்தினரின் ஏற்பாட்டில் நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4 மணிக்கு ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தில் 'அம்பெர்டோ - டி' என்ற இத்தாலியத் திரைப்படம் ஆங்கிலத் துணைத் தலைப்புகளுடன் காண்பிக்கப்படவுள்ளது.

புகழ்பெற்ற இத்தாலிய யதார்த்தவாத இயக்குநர் விற்றோலியோ - டீ-சீக்காவினது நெறியாள்கையில் இத்திரைப்படம் உருவாக்கப்பட்டுள்ளது.

படக்காட்சியின் இறுதியில் கலந்துரையாடலும் இடம்பெறவுள்ளது. (ஒ-203)

## வெப்ப நோய் அபாயம்

யாழ்ப்பாணம்,ஏப்.15

தற்போது நிலவும் கடும் வெப்பம் காரணமாக பலர் காய்ச்சல், கண்நோய், கூவக்கட்டு, பொக்குளிப்பான் போன்ற வெப்ப நோய்களால் பீடிக்கப்பட்டு வருகின்றனர் என்று மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்தன. இதேவேளை, ஊர்காவற்றுறைப் பகுதியில் வெப்பம் காரணமாக கால்நடைகள் இறக்கின்றன என்று கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### விற்பனைக்கு

புதுவருடம், ஈஸ்டரை முன்னிட்டு புறொயிலர் 4½ kg முழுமையான நிறையுடனும் கல்பேட் இறைச்சி எந்த நேரமும் சுத்தம் செய்துபெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: தாசன் பாம், 158/4, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (49406)

### காணி விற்பனைக்கு

கல்வியங்காடு - பருத்தித்துறை வீதி, புலவனார் வீதியில் ஒன்றரைப் பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: ச.சோமசுந்தரம் 30, அரசடிப் பிள்ளையார் வீதி, செம்மணி வீதி, நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம்.(49415)

### மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பம், 1973, 7 இல் செவ்வாய், 30 பாவமுடைய தனியாக தொழில் செய்யும் மணமகனுக்கு அதே செவ்வாய்க் குற்றமுள்ள ஜாதக, பண்பான மணமகள் தேவை. தெளிவான விவரங்களுடன் T.P. நம்பரையும் தரவும். தொடர்பிற்கு விளம்பர இல. 2850 மே/பா உதயன், யாழ்ப்பாணம். (49409)

### மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்ப, 1972, ரேவதி, 8 இல் செவ்வாய்,கிரகபாவம் 43, அரச திணைக்களமொன்றில் உயர் பதவி வகிக்கும் B.A. (Special) மணமகளுக்கு அரச உத்தியோகம் பார்க்கும் மணமகன் தேவை. தொடர்பு: விளம்பர இல. 2849, மே/பா உதயன். (49237)

### வாகனங்கள் வாடகைக்கு

கார், வான், மோட்டார் சைக்கிள் என்பன SELF - DRIVE வாடகைக்கு வழங்கப்படும். அத்துடன் சாரதி அனுமதிப் பரீட்சைக்கான மோட்டார் சைக்கிள், திருமணக்கார் சேவைகளையும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: 360, பிரதான வீதி (பஸ்தியான் சந்திக்கு அருகில்). T.P.: 021 222 9154, 0777 593722 (48823)

### நாய்க்குட்டி விற்பனைக்கு

கிரட்டேயன் நாய்க்குட்டிகள், அல்சேசன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: New R.S.K. Farm மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில். (49094)

### இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Prima உயிர் Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம் (Electronic நிறுவை). தொடர்பு: (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (சி/48914)

## Organ/violin Notes

200 சினிமாப் பாடல்களின் இசைக்குறிப்புகள், Keyboard exercise, Theory கேள்வி ஞானம் ஆகியன விற்பனையாகின்றன.

**Karaweena Isai Manram,**
**131, Temple Rd., Nallur.**
**T.P.: 071 3055991, 0777 031293**
(நல்லூர் ஆலயத்திலிருந்து 500m தெற்கே) (49012)(32-15-16)

### காணி விற்பனைக்கு

மானிப்பாய் மெமோறியல் ஒழுங்கையில் நல்ல சுற்றாடலில் அமைந்துள்ள 5 பரப்பு வெறும் காணி உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: T.P.: 0777131555 (49411)

### தவறிவிட்டது

கந்தையா குணரட்ணராஜா என்பவருடைய தேசிய அ.அட்டை (510664469V) 08.04.2006 அன்று கொக்குவில் பிரம்படி வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ளவும். தொடர்பு K.குணரட்ணராஜா, 0776736124. தகுந்த சன்மானம் வழங்கப்படும். (49452)

பலாலி தெற்கு, கொடிகாமத்தைச் சேர்ந்த சிற்றம்பலம் பவீந்திரராணி என்பவரது தேசிய அ. அட்டை (726601372V), விசேட அடையாள அட்டை, ஆசிரியர் கலாசாலை அடையாள அட்டை என்பன 11.04.2006 செவ்வாய்க்கிழமை யாழ். பஸ் நிலையத்தில் முகமாலை மினிபஸ் தரிப்பிடத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் குகன் ஸ்ரோர்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (49463)

கறுப்பு நிற (SPORTS BAG) பயணப் பொதி ஒன்று வவுனியாவிற்கும் முகமாலைச் சோதனைச் சாவடிக்குமிடையில் 12.04.2006 அன்று தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்க் காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.தொடர்பு: 021 222 5942, 021 222 7743 (49459)

### கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு முறை தடுப்பு மருந்து போடப்பட்ட No.1 Original Prima Broiler குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் 24.04.2006 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை நெல்லியடிக் கிளைகளிலும் சுட்டி பாம் வட்டுக்கோட்டை, கரன் - ஆலடி, உடுவில், ஐங்கரன் களஞ்சியம் - திருநெல்வேலி, முருகன் - சாவகச்சேரி, நல்லூர் பாம் சென்ரர் - 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (சி/48916)

**வெளிவரவுள்ளது**
2006 A/L தமிழ்- எதிர்பார்ப்பு மாதிரி வினாத்தாள்
ஆசிரியர்: இரா.தமிழ்க் குமரகுரு
கேள்வி ★ நூலகம், சங்கானை ★ நவாலி
(49446) T.P.NO.: 0779010193 (23-45-15-24)

## கொடிகாமத்தில் இசைப் பயிற்சி வகுப்பு

தென்மராட்சி,ஏப்.15

தென்மராட்சி இசைக் கலாமன்றம் சங்கீத ஆர்மோனியம், மிருதங்கம், பரதநாட்டியம் போன்ற இசை வகுப்புக்களைக் கொடிகாமத்தில் ஆரம்பித்துள்ளது.

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் இந்த இசை வகுப்புகள் இடம்பெற்றுவருவதாக வில்லிசைக் கலைஞர் வீ.காசிநாதன் தெரிவித்தார். சுமார் 25 மாணவர்கள் இந்தப் பயிற்சி வகுப்புகளில் பயின்றுவருவதாகவும் கூறப்பட்டது. (எ-122)

## செயலமர்வு

யாழ்ப்பாணம்,ஏப்.15

வடமராட்சி வலயத்தைச் சேர்ந்த நட்புதவியாளர்கள் மற்றும் உளவளத் துணைக்குப் பொறுப்பான ஆசிரியர்களுக்கான பயிற்சிச் செயலமர்வு நாளைமறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நெல்லியடி ஆசிரியர் நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் பயிற்சி நெறியில் சம்பந்தப்பட்டவர்களைத் தவறாது பங்குபற்றுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா கேட்டுள்ளார். (எ)

## மிருசுவில் வடக்கில் காணிக் கச்சேரி

தென்மராட்சி,ஏப்.15

மிருசுவில் வடக்கு, பெரியானோடை குடியேற்றத் திட்டத்தில் உள்ள குடும்பங்களுக்கான காணிக் கச்சேரி எதிர்வரும் 24ஆம் திகதி முற்பகல் 9 மணிக்கு மிருசுவில் வடக்கு கிராம அலுவலர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

குடியிருப்பாளர்களைப் பங்கீட்டு அட்டை தேசிய அடையாள அட்டை ஆகியவற்றுடன் சமுகமளிக்குமாறு தென்மராட்சிப் பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசன் கேட்டுள்ளார். (எ-117)

## மகாகும்பாபிஷேகம்

புங்குடுதீவு,ஏப்.15

புங்குடுதீவு, 9ஆம் வட்டாரம் வில்லின் இலுப்பை நின்ற நாச்சிமார் என வழங்கும் முருகன் ஆலய புனருத்தாரண மகாகும்பாபிசேகம் எதிர்வரும் 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேகத்தை முன்னிட்டு 22ஆம் திகதி பக்தர்கள் எண்ணெய்க் காப்புச் சாத்துவர். (எ-203)

## ஊர்காவற்றுறை மறை மாவட்டத்தில் இல்ல வழிபாடு

குருநகர்,ஏப்.15

தீவகம் வடக்கு - ஊர்காவற்று மறை மாவட்டத்தில் உள்ள கத்தோலிக்க மக்கள், இல்ல வழிபாடுகளில் தற்போது ஈடுபட்டு வருகிறார்கள்.

கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் ஆரம்பமான இந்த இல்ல வழிபாடு தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றது.

ஒவ்வொரு இல்லங்களிலும் புனித செபமாலை அன்னையின் சொரூபம் வைக்கப்பட்டு செபமாலை வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

இந்த வழிபாடுகளில் இப்பகுதி கத்தோலிக்க மக்கள் இணைந்து பங்குபற்றி வருகின்றனர். (ஐ-51)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



அக்வை அறுபதில் கால் பதிக்கும் (15.04.2006)

**திருமதி புனிதவதி வினாசித்தம்பி**
**(SP.Trd. MATHS SLTS -1)**

முப்பத்து நான்கு ஆண்டுகள் முழுமதியாய்
கணிதத்தின் கலங்கரையாய் கருத்துடனே கற்பித்த
எம் ஆசான் புனிதவதி விநாசித்தம்பி அவர்கள்
இருபத்து நான்கு ஆண்டுகளாய் எம் கல்லூரியிலும்
ஆசிரியராய், உப அதிபராய் அரும்பணியாற்றி
அகவை அறுபதில் ஆறுதல் பெறும் இந்நாளில்
பல்லாண்டுகாலம் வளமுடன் வாழ்கவென
அகமகிழ்ந்து மனம் நிறைந்து வாழ்த்துகின்றோம்.

கல்லூரி சேவையாளர் சங்கம்,
யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி (49477) (24-45-15)

## கண்ணீர் அஞ்சலி

யா/வைத்தீஸ்வராக் கல்லூரி ஆசிரியை
திருமதி குகனேஸ்வரி இராஜேந்திரன் அவர்களின் அன்புத்தாயார்

**திருமதி கோபாலு தங்கமுத்து**

அவர்கள் (11.04.2006) செவ்வாய்க்கிழமை
காலமானதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
(49470)(23-45-15-24)) யா/ வைத்தீஸ்வராக் கல்லூரி.

## கண்ணீர் அஞ்சலி



சாரங்கன் நகைமாட உரிமையாளர்

**பஞ்சாட்சரம் கிருபாகரன்**

அவர்களின் அகால மரணச்
செய்தி கேட்டு மிகவும்
அதிர்ச்சியுறும் அதேவேளை
அன்னாரது குடும்பத்திற்கு எமது
அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**உரிமையாளரும் ஊழியர்களும்**

லிட்டில் இந்தியன் பெஷன்
· பெரியகடைவீதி,
யாழ்ப்பாணம். (49480)(23-45-15-24)

காவேரி சில்க்ஸ்
பெரியடை வீதி ,
யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்கள்

### கணேசு பரமதயாநாயகன் (தயா)



இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட கணேசு பரமதயாநாயகன் அவர்கள் கனடாவில் கால மாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கணேசு - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற பரமேஸ்வரன் (ஏழாலை), பாக்கியநாதன் (கொக்குவில்), பத்மாதேவி (சங்கானை), பத்மராணி (இணுவில்), பத்மகலாநிதி (மாரீசங்கூடல்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் இந்திராதேவி, மோகனரூபி, சுந்தரலிங்கம், பாலராசன், பவளேந்திரன் ஆகியோரின் மைத்துனரும், கோகிலவாணி, பகிரதன், கஜானா, திவிஜன், சிவாஜனா ஆகியோரின் சித்தப்பாவும் சுகிர்தினி (லண்டன்), சுசீபன் (கனடா), சுதர்சன், சுமணன், சுவர்ணன், வர்ஜினி, நக்கீரன், டிசாந்தன் ஆகியோரின் மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.04.2006) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இணுவில் மேற்கு,
இணுவில். (49481)(32-45-15-24)
தகவல்: சகோதரர்கள்.

### திருமதி அப்பையா பரமேஸ்வரி

சூராவத்தையைப் பிறப்பிடமாகவும் இந்தியாவை வசிப்பிடமாகவும் கொண்ட அப்பையா பரமேஸ்வரி அவர்கள் 13.04.2006 வியாழக்கிழமை இந்தியாவில் காலமானார்.

அன்னார் கனகசபை - சவுந்தரம் தம்பதியரின் அன்பு மகளும் பொன்னையா அப்பையாவின் அன்பு மனைவியும் சோதிராசா, ரஞ்சினிதேவி, ரஞ்சிதமலர் (குஞ்சு), பாக்கியராசா, குணராசா (குணம்), ரதிகுமாரி, ரஞ்சனா (வதனி), வேல்ராசா, ஜெயந்தி (பட்டு), செந்தில்குமரன் ஆகியோரின் தாயும் காலஞ்சென்ற மனோன்மணி, சிவராசா, காலஞ்சென்ற கண்மணி, தங்கரத்தினம், அழகம்மா, அன்னலிங்கம், சிவபாக்கியம், காலஞ்சென்ற கோபாலன் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

சூராவத்தை,
சுன்னாகம். (49482)(32-45-15-24)
தகவல்: குணராசா (மகன் - குணம்).


## இலங்கை மின்சார சபை மூலம் இலகு தவணையில் CFL பல்புகள் விநியோகம்
## உண்மையான தரமுள்ள CFL வாங்க ஒரே ஒரு வழி

யாழ்ப்பாணம், கொக்குவில் மின்சார சபையின் பிரதேச பிரிவுகளில் உள்ள மின்சார பாவனையாளர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு!!!

உயர்தர, உண்மையிலேயே 80% மின்சாரத்தைச் சேமிக்கும் CFL பல்புகளைப் பெற்றுக் கொள்ள ஓர் அரிய சந்தர்ப்பம் காத்திருக்கிறது.



★ எந்த முற்கொடுப்பனவும் தேவையில்லை
★ வட்டி எதுவுமின்றிய, மிக இலகு தவணை முறை
★ ஒரு வருட உத்தரவாதம்
★ SLS சான்று பெற்ற பல்புகள், ISO 9000 சான்று பெற்ற அமையத்தின் உற்பத்தி

**விநியோக நிலையங்கள்:**
1. இலங்கை மின்சார சபை, பாவனையாளர் காரியாலயம் அசரடி றோட், யாழ்ப்பாணம்
2. இலங்கை மின்சார சபை பாவனையாளர் காரியாலயம் K.K.S. வீதி, கொக்குவில்.

**விநியோக திகதி:**
17ஆம் திகதி ஏப்ரல் 06 தொடக்கம் 30ஆம் திகதி ஏப்ரல் 06 வரை அலுவலக நாள்களில்

**நீங்கள் செய்யவேண்டியது இது மட்டுமே....**

உங்கள் தேசிய அடையாள அட்டையையும் கடைசியாகப் பெற்ற மின்சாரப் பட்டியலையும் (Bill) எடுத்து வந்து மேற்குறிப்பிட்ட காரியாலயங்களிலிருந்து ஆகக்கூடிய 4 பல்புகளைப் பெற்றுச்செல்லுங்கள். உண்மையான CFL பல்புகளைப் பாவித்து, ஒழுங்கான முறையில் மின்சாரத்தைச் சேமியுங்கள். தரமற்ற பொருள்களைத் தவிருங்கள்.

அனுசரணை: PRESIDENT (49453) (24-45-15)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெனீவாப் பேச்சுக்குச் செல்ல புலிகள் எப்போதும் தடையாக இருந்ததில்லை

## தமிழ்ச்செல்வன் கூறுகிறார்



பேச்சுக்குச் செல்வதற்குப் புலிகள் எப்போதும் தடையாக இருக்கவில்லை என்று விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கூறியிருக்கின்றார்.

நேற்றுமுன்தினம் கிளிநொச்சியில் கண்காணிப்புக் குழுத்தலைவர் உல்ப் ஹென்ஸனோடு இரண்டு சுற்றுப் பேச்சுக்களை நடத்திய பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்தபோதே அவர் இப்படித் தெரிவித்திருக்கின்றார்.

அவர் செய்தியாளர்களிடம் மேலும் கூறியதாவது:-

யுத்தநிறுத்த சூழலைச் சீர்குலைத்து எமது தாயகப் பிரதேசத்தில் மீண்டும் வன்முறைச் சூழலை ஸ்ரீலங்கா அரசும் படைத்தரப்பும் வலிந்து உருவாக்கியுள்ளன என்று கண்காணிப்புக் குழுத் தலைவரிடம் எடுத்துரைத்தோம்; அனைத்துச் சம்பவங்களையும் எடுத்து விளக்கியுள்ளோம்.

ஜெனீவா உடன்பாட்டுக்குப் பின்னர் ஆயுதக் குழுக்களின் செயற்பாடுகள், படையினரின் கெடுபிடிகள், ஆட்கொலைகள் ஆகியன அதிகரித்திருப்பதை எடுத்துக்கூறினோம்.

ஜெனீவா உடன்பாட்டையோ, யுத்தநிறுத்த உடன்படிக்கையையோ அரசு மதிப்பதாக இல்லை. அவற்றை மதிக்கும் தனது உடன்பாட்டை அரசு தனது வெளிப்பாடுகள் மூலமும், செயற்பாடுகள் மூலமும் காட்டிக்கொள்ளவில்லை என்று தெரிவித்தோம்.

எமது தாயகத்தின் அனைத்துப் பிரதேசங்களிலும் மிகமோசமான நிலைமைதனை ஸ்ரீலங்காப் படைகள் உருவாக்கியுள்ளன.

தொடர்ந்து பொதுமக்கள் மற்றும் போராளிகள் மீதான தாக்குதல்கள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. இதன் ஒரு கட்டமாகத்தான் திருமலையில் மாமனிதர் விக்னேஸ்வரன் கொல்லப்பட்டார். அதனைத் தொடர்ந்து மக்கள் மத்தியில் கொந்தளிப்பு நிலை ஏற்பட்டது.

### திருமலைச் சம்பவம் இனக்கலவரத்தை தூண்டிவிடும் செயல்

திருமலையில் குண்டு வெடிப்பை உருவாக்கி, உடனடியாக இனக்கலவரத்தைத் தூண்டி எமது மக்கள் பெரியளவில் கொடூரத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்கள்; அகதிகளாக்கப்பட்டுள்ளார்கள்.

இது அங்கு பாரிய இனக்கலவரத்தை - இனமுரண்பாடுகளை - தூண்டுவதற்கு உருவாக்கப்பட்ட சூழ்நிலை என்று சுட்டிக்காட்டினோம்.

இப்போது ஏற்பட்டுள்ள பதற்ற நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டுமாக இருந்தால், யுத்தநிறுத்த உடன்படிக்கையை ஏற்றுக்கொண்டு, அதை நடைமுறைப்படுத்துவதை அரசு உறுதிப்படுத்த வேண்டும். படைத்தரப்பை உடன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரவேண்டும்.

எல்லா இடங்களிலும் படைத்தரப்பு இனப்படுகொலையையும், பொதுமக்கள் மீதான தாக்குதல்களையும் தீவிரப்படுத்தியுள்ளது.

இன்றும் பல சம்பவங்கள் நடந்துள்ளன. யாழ்ப்பாணத்தில் மூன்று அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். இன்று வவுனியாப் பிரதேசத்தில் இராணுவத்தின் கிளைமோர் தாக்குதலில் எமது துணைப்படையில் ஒருவர் இறந்துள்ளார். இப்போதும் ஒரு சம்பவம் வவுனியாவில் நடந்தது. பொதுமக்கள் கிளைமோர் தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளார்கள். எமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் ஊடுருவிய ஆழ ஊடுருவல் படையணிதான் இத்தாக்குதலைச் செய்துள்ளது.

மட்டக்களப்பில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது; போராளிகள் கொல்லப்பட்டுள்ளனர்.

பரந்த அளவில் தனது வன்முறையைப் படைத்தரப்பு தீவிரப்படுத்தியுள்ளது. ஆயுதக் குழுமூலம் தாக்குதல் நடத்தப்படுகிறது.

இப்படியான நடவடிக்கைகள் யுத்தநிறுத்தச் சூழலையோ, யுத்தநிறுத்த உடன்படிக்கையையோ பேணுவதற்கு உதவா. நிலைமைகளை சீர்குலைத்து, யுத்தநிறுத்தச் சூழலை வலிந்து இல்லாமல் செய்யும் நடவடிக்கையை இலங்கை அரசும், படைத்தரப்பும் ஏற்படுத்தியுள்ளன எனச் சுட்டிக்காட்டினோம்.

ஜெனீவாப் பேச்சுக்குச் செல்வதற்குப் புலிகள் எப்போதும் தடையாக இல்லை என்பதையும் அவர்களுக்கு மிகத்தெளிவாகத் தெரிவித்துள்ளோம்.

ஏனெனில், எமது தளபதிகளை எமது தலைமைப்பீடம் அழைத்து, கலந்தாலோசித்து எமது மத்திய குழுக் கூடிய பின்புதான் நாங்கள் பேச்சுக்குச் செல்லக்கூடியதாக இருக்கும். இதைத்தான் தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம்.

நோர்வே அனுசரணையாளர்களுக்கு இதனை நேரடியாகக் கூறியுள்ளோம். தளபதிகளின் வருகை, அவர்கள் தலைமைப் பீடத்துடன் பேசுவதன் அவசியம் ஆகியன குறித்து தெரிவித்துவந்தோம். அது நிறைவேறினால்தான் ஜெனீவாப் பேச்சுக்குப் போகும் சாத்தியம் ஏற்படும் எனக் கூறியுள்ளோம்.

பேச்சுத் திகதிகள் நெருங்கிய நிலையில் இங்கு வந்து பேச்சுக்கு வருமாறு வலியுறுத்துவதில் அர்த்தமில்லை.

2ஆம் கட்டப் பேச்சுக்குப் போவதற்கு நாங்கள் தடையானவர்கள் அல்லர் என்பதை நோர்வேத் தரப்புக்கும், சர்வதேச சமூகத்திற்கும் இன்று தெளிவாக விளக்கியுள்ளோம்.

பேச்சுக்கு நாங்கள் போவதற்கு தடைகளை ஏற்படுத்தியிருப்பது இலங்கை அரசின் செயற்பாடுதான். படைத்தரப்பின் செயற்பாடுகளும் இலங்கை அரசின் நிபந்தனைகளும்தான் அதற்குத் தடையாகவுள்ளன.

### இரண்டாம் கட்டப் பேச்சு சர்வதேச சமூகத்தின் கைகளில்

ஜெனீவாப் பேச்சுக்குப் போவதா, இல்லையா என்பது சர்வதேச சமூகத்தின் கைகளில்தான் இருக்கின்றது.

இலங்கை அரசை வழிக்குக் கொண்டுவந்து, அரசின் யுத்தப் போக்குத் தொடர்பான நடைமுறைகளை இல்லாதொழித்து விடயங்களை அணுக வேண்டும். புதிய நடைமுறைகளையும் நிபந்தனைகளையும் கொண்டு வருவதும், உடன்படிக்கையை மாற்றியமைக்க முயல்வதுமான அரசின் போக்கை முற்றாக நாங்கள் நிராகரிக்கின்றோம்.

இத்தகைய போக்கு நிச்சயமாக நோர்வேயின் அனுசரணைப் பணிக்கும், கண்காணிப்புக்குழுவின் செயற்பாட்டிற்கும் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தும் எனச் சுட்டிக்காட்டினோம். இதை கண்காணிப்புக் குழுத் தலைவர் தெளிவாக ஏற்றுக் கொண்டு புதிய சில வழிமுறைகளையும் பரிந்துரைத்திருக்கிறார். அதை எமது தலைமைப்பீடம் ஏற்றுக் கொண்டுள்ளது.

இனி அது தொடர்பாக தீர்மானம் எடுக்க வேண்டியது கண்காணிப்புக் குழுவின் பொறுப்பு.

ஜெனீவாப் பேச்சுக்குப் போவதற்கு முக்கிய தடையாக இருப்பது, எமது தளபதிகளை எமது தலைமைப்பீடம் சந்திக்கும் வாய்ப்பு இல்லாதமைதான். அதை ஏற்படுத்தித் தருமாறு கேட்டுள்ளோம்.

தளபதிகளின் பயணத்திற்கு பல உத்தேசத் திட்டங்களைத் தந்தார்கள். அதில் ஒன்றை ஏற்றுக்கொண்டுள்ளோம்.

எமது தளபதிகள் கண்காணிப்புக் குழுவால் ஒழுங்குபடுத்தப்படுகின்ற கப்பலிலோ அல்லது படகிலோ பயணிப்பர் என்பது அந்த நடைமுறை. கடற்படையின் பிரசன்னமோ, கடற்படையின் தொடர்போ எதுவும் இல்லாமல் முழுக்க முழுக்க கண்காணிப்புக் குழுவின் நேரடிப் பாதுகாப்பின் கீழ் - அவர்களால் ஒழுங்கு செய்யப்படும் கடற்களத்தில் - தளபதிகள் பயணம் செய்யத் தயாராக இருக்கிறார்கள் என்று தெரிவித்துள்ளோம். அந்த நடைமுறையை அவர்கள் ஏற்றுள்ளனர்.

ஒழுங்குபடுத்தப்படும் கப்பலில் எமது தளபதிகள் எங்கள் கடற்தளத்தில் வைத்துக் கப்பலில் ஏறி எமது கடற்கரைக்கு - எமது தளத்தில் - வந்து இறங்குவர்.

### தளபதிகளின் சந்திப்பின் பின்னர் பேச்சுக்கான திகதி நிர்ணயம்

எதிர்வரும் 15ஆம் திகதி தளபதிகள் இங்கு வருவதற்கும், 22ஆம்திகதி திரும்பிச் செல்வதற்கும் [illegible] பேச்சுக்கு திகதிகள் [illegible] இணக்கப்பாட்டை - புதிய ஒழுங்கு முறையை - தெரிவித்துள்ளனர். ஆகவே பேச்சுக்களை சில காலத்துக்கு பிற்போடுமாறு கோரியுள்ளோம். தளபதிகள் இங்கு வந்து, கலந்துரையாடி, தீர்மானங்கள் எடுத்துத் திரும்பிய பின்பு அதற்கான திகதிகளை நிர்ணயிக்கும்படி கேட்டிருக்கிறோம்.

இது தொடர்பாக விரைந்து முடிவுகளை எடுப்பாரென கண்காணிப்புக் குழுத்தலைவர் கூறினார்.

இந்த யோசனையை அரசும், கடற்படையும் ஏற்றுக்கொள்வதில்தான் அடுத்த கட்ட செயற்பாடு தங்கியுள்ளது.

யுத்தநிறுத்த சூழலைக் குலைக்கின்ற எல்லா விதமான முன்னெடுப்புக்களையும் படைகளும், ஆயுதக்குழுக்களும் உடன் நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுள்ளோம்.

பொதுமக்கள் கொல்லப்படுகின்றனர். அச்சுறுத்தப்படுகின்றனர். இந்த நிலை தீவிரமாக்கப்பட்டுள்ளது. இது பொதுமக்கள் மட்டத்தில் பெரும் கொந்தளிப்பான நிலையை உருவாக்கி, யுத்தநிறுத்த சூழலே இல்லாமல் போகும் விதத்தில் அமைந்திருக்கின்ற நடவடிக்கையாகவே அமைந்திருக்கிறது. இதற்கு உடனடியாக தீர்வுகாண வேண்டும் என்று காண்காணிப்புக் குழுவிடம் சுட்டிக் காட்டியுள்ளோம். - என்றார்.

தாயகப் பகுதிகளில் நிலைமைகளைச் சீர்குலைத்து, மோசமான நிலைமையை உருவாக்கி யுத்த சூழலுக்குள் எங்களை நிர்ப்பந்தித்துத் தள்ளி, சர்வதேச சமூகத்துக்கு எங்கள் மீது பழியைப் போடுகின்ற ஒரு பிரசாரத்தை அரசு முடுக்கிவிட்டிருக்கின்றது.

பேச்சுவார்த்தைக்கும் சமாதானத்துக்கும் தயாராக இருப்பது போன்ற ஒரு தோற்றப்பாட்டை உருவாக்கிக்கொண்டு, இங்கே களத்தில் மக்கள் மீதான வன்முறைகளையும் இன அழிப்பு நடவடிக்கைகளையும் தீவிரப்படுத்திக்கொண்டு உலகளவில் ஒரு தவறான பிரசாரத்தை அரசு முன்னெடுத்து வருகின்றது.

அதில் எங்கள் தரப்பு நியாயங்களை சர்வதேச தரப்புக்கு எடுத்துக்கூறும் நோக்கோடு தான் கண்காணிப்புத் தலைவருடனான சந்திப்பு நடைபெற்றது.

### சுமூக சூழல் உருவாதல் அவசியம்

கள நிலைமைகள் சீராக வேண்டுமாக இருந்தால் யுத்தநிறுத்த உடன்படிக்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைகளைச் செம்மையாகப் பேணவேண்டும். அதை இலங்கை அரசும் படைத் தரப்பும் முழுமையாக மதித்து நடப்பார்கள் என்றால்தான், வன்முறைகள் நிறுத்தப்பட்டு ஒரு சுமூக சூழல் ஏற்படும்.

ஆனால், படைத்தரப்பு அதற்கு எதிர்மறையாகத்தான் செயற்படுகின்றது. ஆயுதக் குழுக்களும் தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றன. இதை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவராவிட்டால் நிச்சயமாக நிலைமைகள் மிகப் பாரதூரமான நிலைக்குத் தள்ளப்படும். இதைக் கண்காணிப்புக் குழுவுக்கு நாங்கள் சுட்டிக்காட்டியிருக்கின்றோம்.

சர்வதேச அளவில், இலங்கை அரசு இங்கு ஒரு நல்லெண்ண புறச் சூழலை சீர்படுத்தி - நல்ல புறநிலைகளை ஏற்படுத்தி - பேச்சுவார்த்தை முயற்சிகளை முன்னெடுப்பது பொருத்தமாக இருக்கும்.

ஆகவே, இதைவிடுத்து இலங்கை அரசு களநிலைமைகளில் மிகக்கடுமையான போக்கையும் வெளிநாடுகளுக்கு சாதகமான ஒரு போக்கையும் காட்டிக்கொள்வது நல்லதல்ல. இதைத் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

எங்கள் மக்கள் மீதும் எங்கள் பிரதேசம் மீதும் தொடுத்திருக்கின்ற இந்த வன்முறைகளை நிறுத்தி இராணுவ நெருக்குவாரங்கள், கெடுபிடிகளை நிறுத்தி, நிலைமையை சுமூகமாக்கிக் கொள்ள வேண்டும் என்பதை அனுசரணையாளர்களிடம் தெரிவித்துள்ளோம்.

*கேள்வி:* வன்முறைகள் தொடரும் இந்த நேரத்தில் ஜெனீவாப் பேச்சுக்களில் கலந்து கொள்ள முடியும் என நினைக்கின்றீர்களா?

*பதில்:* நிலைமைகள் மிக மோசமாக இருக்கின்றது. இருந்தாலும் சர்வதேச சமூகம் இருதரப்பையும் சந்தித்து பேசும்படி கேட்கின்றது. அந்தப் பேச்சில் இந்த யுத்தநிறுத்த உடன்படிக்கையின் அமுலாக்கத்தின் அவசியத்தை வலியுறுத்துவோம்.

களநிலைமைகளை மிக மோசமாக்கிக் கொண்டிருக்கின்றார்கள். நாங்கள் சர்வதேச சமூகத்தின் எதிர்பார்ப்பும் வேண்டுகோளும் அந்த அடிப்படையில் அமைந்தபோது பேசுவதற்கு நாங்கள் தயாராகவிருக்கின்றோம். ஆனால், பேச்சுக்கள் ஒருமுன்னேற்றத்தையும் ஒரு மாற்றத்தையும் கொண்டுவராவிட்டால் நாங்கள் பேசிக்கொண்டிருப்பதில் அர்த்தமில்லை.

ஆகவே, இந்தக் கட்டத்தில் யுத்தநிறுத்த உடன்படிக்கையின் அமுலாக்கத்தின் உறுதிப்பாட்டை இலங்கை அரசும் படைத் தரப்பும் உறுதிப்படுத்தும் வகையில் நடந்துகொள்வது அவசியம்.

நாங்கள் இந்தத் தடவை சர்வதேச சமூகத்தின் அந்த விருப்பத்திற்கும் எதிர்பார்ப்புக்கும் ஒரு இறுதிச் சந்தர்ப்பமாக இதை மேற்கொள்ளத் தயாராகவிருக்கின்றோம்.

வன்முறைகள் நிறுத்தப்பட வேண்டுமாக இருந்தால், சர்வதேச சமூகம் இலங்கை அரசு மீதும், அரச படைகள் மீதும் அழுத்தத்தைப் பிரயோகித்துக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர வேண்டும் என நாம் எதிர்பார்க்கின்றோம்.

இப்பொழுது எங்களுடைய தளபதிகளின் போக்குவரத்து நடைமுறைகளை மீண்டும் நிபந்தனைகளைப் போட்டு சீர்குலைப்பார்களேயானால், நிலைமை மோசமடையும். அது ஜெனீவாப் பேச்சுக்களுக்கும் தடையாக அமையும்.

எமது பரிந்துரைகளைத் தெளிவாகக் கண்காணிப்புக் குழுத் தலைவரிடம் எடுத்துக் கூறியுள்ளோம். இதற்கு உறுதியான - சாதகமான பதில் கிடைக்குமானால் தான் ஜெனீவாப் பேச்சுக்கள் சாத்தியமாகும்.

*கே:* பொதுமக்கள் மீதான வன்முறைகளை நிறுத்துவதற்கு கண்காணிப்புக் குழு ஊடாக எந்த வகையான அழுத்தத்தை அரசுக்கு ஏற்படுத்தியிருக்கிறீர்கள்?

*ப:* ஒரு உண்மையான அமைதி நிலவ வேண்டும் என்பதே எமதும் எமது மக்களினதும் விருப்பம். போலியான அறிக்கைகளை வெளியிடுவதை விடுத்து களநிலைமையில் உண்மையான வெளிப்பாடுகள் இருக்க வேண்டும். அந்த அடிப்படையில் யுத்தநிறுத்த உடன்படிக்கையில் அனைத்துமே தெளிவாக உள்ளன. இராணுவக் கெடுபிடிகள், அச்சுறுத்தல்கள், கொலைகள், வன்முறைகள், ஆயுதக் குழுக்களின் ஆயுதங்கள் களையப்படல் போன்ற சகல விதமான அம்சங்களும் அந்த உடன்பாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. இரு தரப்பாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட யுத்தநிறுத்த உடன்பாட்டை உடனடியாக நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டும். அதனை உறுதி செய்து, சர்வதேச சமூகத்தினதும் குறிப்பாகக் கண்காணிப்புக் குழுவினதும் பொறுப்பு என்பதை நாங்கள் அவர்களுக்குச் சுட்டிக்காட்டியிருக்கிறோம். இதை அரசிடம் வலியுறுத்தி உடனடியாக நிலைமைகளைச் சீராக்க முயலுங்கள் என்று கேட்டிருக்கிறோம்.

### தொடரும் சூட்டுச் சம்பவங்கள் சுமூகசூழல் உருவாவதைத் தடுக்கும்

இப்போது திருகோணமலையில் ஒரு பதற்றமான நிலை ஏற்பட்டுள்ளது. இரு சமூகங்கள் மத்தியில் வன்முறைகளைத் தூண்டுகின்ற போக்குத்தான் தொடர்ந்த வண்ணமுள்ளது. ஆகவே, இவற்றை உடனடியாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவது அவசியம். தாக்குதல்களையும் வன்முறைகளையும் தீவிரப்படுத்தி மக்களைச் சீண்டி மீண்டும் நிலைமையை மோசமாக்கும் வகையில் தான் அரச படைகள் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றன. வவுனியாவில், மட்டக்களப்பில், யாழ்ப்பாணத்தில் நடைபெறும் சூட்டுச் சம்பவங்கள் சுமூக நிலையை ஏற்படுத்த உதவாது. யுத்தநிறுத்த உடன்படிக்கையை செம்மையாக நடைமுறைப்படுத்தும் அர்ப்பணிப்பை வெளிப்படுத்தாவிட்டால் எந்த வகையிலும் ஒரு சுமூக நிலை உருவாகாது என்பதைக் கண்காணிப்புக்குழுவுக்கு எடுத்துக் கூறியுள்ளோம். இதை சர்வதேச சமூகத்துக்கும் தெளிவுபடுத்தும்படி நாங்கள் கோரியிருக்கிறோம்.

புலிகளையும் தமிழ் மக்களையும் சீண்டி இந்த அமைதி முயற்சிகளைச் சீர்குலைக்க அரசும் அரச படைகளும் முயலுகின்றன என்பதைச் சர்வதேச சமூகம் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக முழுமையான ஆதாரங்களோடும் சம்பவங்களோடும் சுட்டிக் காட்டியிருக்கிறோம்.

*கே:* படைத் தரப்பு மீதான வன்முறையே பொதுமக்கள் மீதான தாக்குதல்கள் அதிகரிக்கக் காரணம் என்று அரச தரப்பில் கூறப்படுகின்றது. அதுபற்றி என்ன கூறுகிறீர்கள்?

*ப:* ஜெனீவாப் பேச்சுக்கள் முடிந்த பின்

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Beauty Care



* Hair Cuts
* Hair Tints
* Hair Styles
* Hair Highlights
* Hair Perms
* Hair Straightening
* Hair Ironing



* Facials
* Face Bleaching
* Face Threading
* Eye Brow Plucking
* Waxing
* Manicure & Pedicure
* Bridal Dressing

No. 174, Kannathiddy Road,
Jaffna.
Tel: 077-9788772, 021 222 6018


## கண்ணீர்க் காணிக்கை



எமது கல்லூரி அதிபரின் பாசமிகு மாமி
**திருமதி ஏகாம்பரநாதன் சிவபாக்கியம்**

அவர்கள் இறைபதம் நண்ணியமையை யிட்டு அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த் திக்கின்றோம். அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனு தாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி,
புத்தூர்.
(சீ/48955))(32-17-15)

பிரதிஅதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், கல்விசாரா
ஊழியர்கள்.

## துயர் பகிர்கின்றோம்

மக்களின் உயர்வுக்காக அயராது பாடுபட்டு உழைத்த
கியூடெக் நிறுவனப் பணியாளர்களான
**சண்முகரெட்ணம் கந்தபத்மநாபன்**
**செல்வேந்திரா பிரதீப்குமார்**

ஆகியோர் அகால மரணமடைந்த செய்தி கேட்டு அதிர்ச்சிடைந்தோம். இவர் களது இழப்பினால் பெருந்துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் கியூடெக் நிறுவனத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவிப்பதுடன், இவர்களின் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாஷையூர் மக்கள் சார்பில்: (49464)(32-15-17)
யா/பாஷையூர் புனித அந்தோனியார் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் (வ-து).

# கடற்படை கண்காணிப்பு!

திருமலை, ஏப். 15

திருகோணமலை, புல்மோட்டை கடற் பகுதியில் கடந்த புதன்கிழமை அதிகாலை முதல் கடற்படையினரின் 20 ரோரா ப்படகுகள் தீவிர கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடு பட்டிருந்தன என அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேபோல் குச்சவெளி மற்றும் இறக்கக் கண்டி கடல் பகுதிகளிலும் கடற்படையினர் தீவிர கண்காணிப்புப் பணிகளை மேற் கொண்டுள்ளனர் எனத் தெரிகிறது.

தமது படைத்தளபதிகள் மற்றும் போராளி களுடன் விடுதலைப்புலிகள் கிழக்கிலிருந்து வன்னிக்கான பயணத்தை எந்த வேளையி லும் ஆரம்பிக்கலாமென்பதால் அதனைத் தடுக்கும் நோக்கிலேயே கடற்படையினர் இவ்வாறான கண்காணிப்புப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் எனத் தெரிகிறது.

இதேவேளை, புல்மோட்டை கடற்பகுதி யில் அன்றைய தினம் பிற்பகலில் பெரும் குண்டுச்சத்தங்கள் கேட்டதாகக் கூறப்படு கின்றது. (க)

# கதிரவேற்பிள்ளை நினைவு நிகழ்வு

வடமராட்சி,ஏப்.15

சதாவதானி கதிரைவேற்பிள்ளையின் 99ஆவது ஆண்டு நினைவு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணிக்கு மேலைப்புலோலி சதாவதானி அரங்கில், சதா வதானி சனசமூக நிலையத் தலைவர் க.தங்க ராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பருத்தித்துறை பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் முதன்மை விருந் தினராகவும் பருத்தித்துறை ஹாட்லிக் கல் லூரி அதிபர் ந.தெய்வேந்திரராஜா சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர்.

ஆசியுரையினை சுவாமி சித்ருபானந்தா வழங்குவர்.யாழ்.பல்கலைக்கழக சட்டத் துறைத் தலைவர் பேராசிரியர் நா.ஞானகுமா ரன் மூத்தோர் பெருமை எனும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

உதயன் ஆதரவில் பாடசாலை மாணவர் களிடையே நடத்தப்பட்ட குருபூசைத்தினப் போட்டியில் முதலிடங்களைப் பெற்ற மாணவர்களின் பேச்சுக்களும் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (3-173)(32)

# பருத்தித்துறை வங்கிக்கிளை கணனிமயம்

வடமராட்சி,ஏப்.15

பருத்தித்துறை மக்கள் வங்கிக்கிளை கணனிமயப்படுத் தப்பட்டுள்ளது.

இதற்கென மக் கள் வங்கி தலைமைப் பீடம் பத்துக்கு மேற் பட்ட கணனிகளை பருத்தித்துறைக் கிளைக்கு அனுப்பி வைத்ததைத் தொடர்ந்து வங்கிக் கிளை நடவடிக்கை கள் அனைத்தும் கணனிமயப்படுத் தப்பட்டு அலுவல் கள் நடைபெற்று வரு கின்றன. (3-173)


# மலேசியா நாட்டில் தொழில் புரிவதற்கு அரியதோர் சந்தர்ப்பம்

இலங்கையர்களுக்கு வெளிநாடுகளில் தொழில்வாய்ப்புக் களை பெற்றுக்கொடுப்பதில் 18 வருட கால அனுபவமுள்ள ACURA வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்திற்கு மலேசியா நாட்டில் முன்னணி நிறுவன்ங்களுக்கு இலங்கை யர்களிடம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

* **நேர்முகப் பரீட்சைகள் வெளிநாட்டு முகவர்களினால் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 17ஆம் திகதி முதல் 22ஆம் திகதி வரை ACURA வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தில் நடைபெறும்.**
* **நேர்முகப் பரீட்சைகளுக்கு சமுகமளிப்போர் தங்களது சகலவிதமான ஆவணங்கள் மற்றும் பாஸ்போர்ட் அளவிலான 04 வர்ணப்புகைப்படங்களுடன் நேரில் சமுகமளிக்கவும்.**

வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கு தெரிவுசெய்யப்படுவோர் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்திற்கு அனுப்பப்பட்டு அவர்களினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில் ஒப்பந்தப் பத்திரங்கள் பெற்றவர்கள் மாத்திரமே வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்கு அனுப்பி வைக்கப்படுவர். கட்டாயமாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் சட்டதிட்டங்களுக்கு அமையவே வெளிநாடு செல்ல அனுமதிக்கப்படுவர்.

## அகுரா (ACURA)

வெளிநாட்டு வேலைவாய்ப்பு மனிதவள பயிற்சி நிலையம்

53, ஒராபிபாஷா மாவத்தை, 1ஆம் டிவிசன் (டெக்னிகல் சந்தி),
கொழும்பு-10.


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர்
**நவரத்தினம் பகவதி**
அவர்களின் அன்புத் தாய்
**திருமதி நவரத்தினம் சிவபாக்கியம்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**யா/இளவாலை றோ.க.த.ஆ. பாடசாலை**
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.
(49471)(32-15-17)

## கண்ணீர் அஞ்சலி



சாரங்கன் நகை மாட உரிமையாளர்
**பஞ்சாட்சரம் கிருபாகரன்**

அவர்கள் 13.04.2006 வியாழக்கிழமை அகால மரணமான செய்திகேட்டு அதிர்ச்சி அடைவ துடன் அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதா பங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மாசாந்தியடைய இறை வனைப் பிரார்த்திக்கின்றோம்.

59, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (49459)(30-32-15)

மதுரா நகை மாட
உரிமையாளரும், ஊழியர்களும்.


## லிகிதர் (CLERK) தேவை

இலங்கை மாணவர்களுக்கு வெளிநாடுகளில் உயர் கல்வி பெற்றுக்கொடுக்கும் கல்வி நிறுவனமான FUTURE LINKS நிறுவனத்திற்கு இலங்கையில் தொழில்புரிவதற்கு லிகிதர் (CLERK) தேவை.

**தகைமைகள்:-** மும்மொழிகளிலும் தேர்ச்சி பெற்ற வராக இருத்தல் வேண்டும். மற்றும் கணனித் துறையிலும் சிறப்புத் தேர்ச்சி பெற்றிருத்தல் அவசியம்.

*(Degree Holders விரும்பத்தக்கது)*

தேர்ந்தெடுக்கப்படுவோருக்கு வெளிநாடுகளில் பயிற்சி வழங்கப்படும்.

நேர்முகப் பரீட்சைகள் இம்மாதம் 17ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரை கீழ்க்காணும் முகவரியில் நடைபெறும்.

**FUTURE LINKS**
**45, Orabi Pasha Mawatha, 1st Division,**
**Maradana, Colombo - 10.**

மேலதிக விவரங்களுக்கு 0777 356612 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.


## நினைவஞ்சலி - ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பு

ஓவியச் செல்வன், ஓவியச் சுடர் மணி
ஓவியப் பேரொளி,
ஓவியக் கலைச்செம்மல்,
கலைஞானச்சுடர், குகஸ்ரீகலாபூஷணம்
**பெரியதம்பி சுப்பிரமணியம்**
*(ஆர்ட்டிஸ்ற் மணியம்)*



**காலம்** : நாளை (16.04.2006) ஞாயிற்றுக்கிழமை
**நேரம்** : முற்பகல் 10 மணி
**இடம்** : நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம், நல்லூர்.

15.03.2006 புதன்கிழமை அன்று சிவபதம் அடைந்த எமது குடும்பத்தலைவரின் நினைவு அஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்த னையும் 16.04.2006 அன்று நல்லை ஆதீனத்தில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

55, செட்டித்தெரு,
நல்லூர், யாழ்ப்பாணம். (49466)(23-32-15)

**குடும்பத்தினர்.**

உ
சிவமயம்

## தசாக கிருஹயக்ஞ அழைப்பு



அன்புடையீர்!
நிகழும் மங்களகரமான பார்த்திப வருடம் பங்குனி மாதம் 24ஆம் நாள் (07-042006) வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவி
**திருமதி புவனேஸ்வரிஅம்மா சதாசிவக்குருக்கள்**
அவர்களின்
**ஆத்மசாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்.**

தசாகம் :- விய வருடம் சித்திரை மாதம் 3ஆம் நாள் (16.04.2006) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி
ஏகோதிஷ்டம், மாசியம் :- சித்திரை 4ஆம் நாள் (17.04.2006) திங்கட்கிழமை
சபிண்டீகரணம் :- சித்திரை 5ஆம் நாள் (18.04.2006) செவ்வாய்க்கிழமை
கிருஹயக்ஞம் :- சித்திரை 6ஆம் நாள் (19.04.2006) புதன்கிழமை அன்று நடைபெறும்
- ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

நீர்வேலி மத்தி,
நீர்வேலி. (49472)(32-15)

**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,**
**பூட்டப்பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்தன்கேணி
# இளைஞர் முன்னேற்றக் கழக
# பொன்விழாச் சிறப்பிதழ் - 15★04★2006

## 50 ஆண்டுகளாக நற்பணி



அன்புள்ளவர்களிற்கு:- சித்தன்கேணி இளைஞர் முன்னேற்றக் கழகமும் சனசமூக நிலையமும் தனது ஐம்பதாவது ஆண்டை அடைந்திருப்பதையிட்டு மகிழ்ச்சி அடைகிறோம். ஐம்பது வருடங்களாக சித்தன்கேணி வாழ் மக்களின் உடல்நலம், உளநலம், சமூக முன்னேற்றம், கலாசார வளர்ச்சி, ஆலயத் தொண்டு சமூகத்துக்கு வேண்டிய அனைத்து விடயங்களிலும் பங்கெடுத்து இன்றும் தலைநிமிர்ந்து நிற்பது அனைத்து மக்களிற்கும் மகிழ்ச்சியை தருகின்றது. இது போன்று இன்னும் பல நூறு ஆண்டுகள் நற்பணி ஆற்ற வாழ்த்துகின்றோம். இப்பணியில் சேவை ஆற்றிய தலைவர், செயலாளர், உறுப்பினர்கள் அனைவரினது பணிகளும் வரப்போகும் சமுதாயத்திற்கு எடுத்துக்காட்டாக அமைகின்றது. இன்றைய காலத்தின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் பொன்விழா நிகழ்ச்சிகளாக விளையாட்டு, சிரமதானம், கல்வி வளர்ச்சி, சமயவளர்ச்சி அனைத்து போட்டிகளும் மாணவர் மத்தியில் புரிந்துணர்வையும், ஆத்மீக சிந்தனையையும் நல்லொழுக்கத்தையும் ஏற்படுத்துவது ஆகும். இவை யாவும் சிறப்பாக நடைபெற்று பொன்விழா மலரும் சிறப்பாக மலர்ந்து அனைவரிற்கும் பயனுள்ளதாக அமைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

இரண்டாவது குருமஹாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
நல்லை ஆதீனம், நல்லூர்.





## மக்கள் மத்தியில் எழுச்சி ஏற்படுத்தும் மன்றம்



'வயிற்றுக்கு சோறிட வேண்டும் - இங்கு
வாழும் மனிதர்களுக் கெல்லாம்
பயிற்றிப் பல கல்வி தந்து - இந்தப்
பாரை உயர்த்திட வேண்டும்.''

இந்த நல்வாக்குக்கு ஏற்ப எமது மத்தியில் சமூகப் பணியாற்றி வருகின்ற இளைஞர்களை நாம் பாராட்ட வேண்டும். இவர்கள் எதிர்காலத்தைச் சிந்தித்து செயலாற்றுபவர்கள். இந்த வகையில் சித்தன்கேணி இந்து இளைஞர்களை நான் பெரிதும் பாராட்டுகின்றேன். இங்குள்ள திருக்கோயில்களில் பிள்ளையார் கோயிலும், சிவன் கோயிலும் பிரசித்தமானவை. இவற்றை மையமாக வைத்து கூட்டுப் பிரார்த்தனைப்பணி, அன்னதானப் பணி, சரியைத் தொண்டுகள், நூல்நிலையப் பணி ஆகியவை இளைஞர்களால் முன்னெடுக்கப்படுகின்றன. சிறப்பாக கணனிப் பயிற்சியும் இங்கு மேற்கொள்ளப்படுகின்றது.

பொன்விழாக்காணும் சித்தன்கேணி இளைஞர் முன்னேற்றக் கழகம் தமது பணிகளை மேலும் வளர்ப்பதற்கு ஏதுவாக பொன்விழா ஒன்றை நடத்த இருக்கிறார்கள். கல்வி நிலையங்களும் சமூக நிலையங்களும் காலத்துக்குக் காலம் விழா எடுத்துச் சிறப்பிப்பதனால் மக்கள் மத்தியில் எழுச்சி ஏற்படும் என்பது வெளிப்படை. எனவே குறிப்பிட்ட இந் நிறுவனத்தையும் அதனை அண்டிய சனசமூக நிலையத்தையும் இந்தப் பொன்விழா ஆண்டில் பாராட்டி அமைகின்றன.

கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
சமாதான நீதிவான், தலைவர்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.

## தலைவரின் இதயத்திலிருந்து....



சீர்மிகு சித்தன்கேணி ஊரின் சீரிய சிந்தையர்களினதும் எண்ணக் கருவறையில் கருவாகி உயிர்கொண்டு உருப்பெற்ற இவ் இளைஞர் முன்னேற்றக் கழகமானது இன்று பொன் விழா அகவையை கொண்டாடுவதையிட்டு கழகத்தின் தலைவர் என்ற வகையில் பெருமகிழ்வடைகின்றேன்.

நீண்ட வரலாற்றுப் பெருமைமிகு எமது கிராமத்தில் இளைஞர்களுக்கான 'களமாக' சமூக, சமய, சமத்துவ மனப்பாங்கை மையப்படுத்தி பொதுமைப்பாங்கான செயற்பாட்டை முதன்மையாகக் கருதி, அயராத உழைப்பைத் துணையாகக் கொண்டு எம் முன்னவர்களால் ஆரம்பிக்கப்பட்ட எமது கழகம் பல்வேறு ஆளுமை மிக்க தலைவர்களின் வழிகாட்டல்களில் பரிணாம வளர்ச்சி பெற்று ஆழ வேரூன்றி கிளை பரப்பி நிமிர்ந்து நிற்பது நாம் அனைவரும் பெருமைப்பட வேண்டிய விடயமாகும்.

சமய,சமூக, கலைகலாசார பண்பாட்டு விழுமியங்களை பேணும் வகையிலான முயற்சிகள்-தொண்டுகள் சேவைகள் என முன்னெடுக்கப்பட்டு வந்த செயற்பாடுகள் காலச் சூழல்களுக்கும் பொருளாதார நிலைக்கும் ஏற்ப மேற்கொள்ளப்பட்டு இன்று உறுதியான பொருளாதார அடித்தளத்துடன் நூலக விரிவாக்கம், கணனிப்பிரிவு என்ற செயற்பாடுகளையும் நம் முன்னெடுப்பதற்கு அனைவரினதும் பங்களிப்புகள் மகத்தானவை. கழகத்தில் இணைந்து பணியாற்றும் போது கூட்டுப் பொறுப்பு, செயற்திறன், சமூகப்பற்று, பட்டறிவு... என நாம் பெறும் அனுபவங்கள் விலைமதிக்க முடியாதவை.

கழகத்தின் வரலாற்றில் குறிப்பிடத்தக்க மைல்கல்லாகத் திகழும் இப்பொன்விழா ஆண்டில் கழகத்திற்காக உழைத்த அத்தனை அன்பு உள்ளங்களையும் இவ்விடத்தில் நன்றியுடன் நினைவிற்கொள்வதோடு, பிறக்கும் இப் பொன்விழா மலர் பல கௌரவ உறுப்பினர்களின் உணர்வலைகளைத் தாங்கி வருகின்றது என்பதில் எமக்கு நிறைவுண்டு. தொடர்ந்தும் கழகத்தின் செயற்பாடுகள் வீச்சுடன் முன்னெடுக்கப்படும் என்ற உறுதியான நம்பிக்கையுடன் பொன்விழாவின் சிறப்பில் அனைவரின் மகிழ்வுடன் நானும் இணைகின்றேன்.

ஆ.ஸ்ரீகோணேஸ்
தலைவர், இளைஞர் முன்னேற்றக் கழகம்.

## கழகத்தின் பணிகள் தொடர
## எமது உதவிகள் என்றும் கிடைக்கும்

சித்தன்கேணி இளைஞர் முன்னேற்றக் கழகம் ஐம்பது வருடத்திற்கு முன்னாள் ஆரம்பகால உறுப்பினர்கள் பலரின் பெரும் முயற்சியினால் உருவாக்கப்பட்டு இவ்வருடம் தனது 50ஆவது அகவையைக்கொண்டாடுவதையிட்டு புலம்பெயர்ந்து வாழும் கழக முன்னாள் உறுப்பினர்களாகிய நாம் பெருமகிழ்வடைகின்றோம்.

'திரைகடலோடியும் திரவியம் தேடு' என்ற முதுமொழிக்கு இணங்க இளைஞர் முன்னேற்றக்கழக கௌரவ உறுப்பினர்கள் அநேகர் இன்று பல நாடுகளிலும் பரந்து முன்னணியில் திகழ்கின்றார்கள் என்றால் அது சித்தன்கேணி இளைஞர் முன்னேற்றக்கழகத்திற்குரிய பெருமையாகும்.

சித்தன்கேணி இளைஞர் முன்னேற்றக்கழகம் தனது 50ஆவது வருட பொன்விழாவைக் கொண்டாடும் அதேவேளை, எமது ஒத்துழைப்புகள் என்றும் தொடரும் என்பதையும் இவ்விடத்தில் தெரிவித்துக்கொள்கின்றோம். மேலும் கழகம் தனது பணியை மென்மேலும் சிறப்புடன் தொடர எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**புலம் பெயர்ந்துவாழும்**
**சித்தன்கேணி இளைஞர் முன்னேற்றக்கழக**
**கௌரவ உறுப்பினர்கள்.**

## கோயிலுடன் இணைந்த தொண்டர் நிறுவனம்

சித்தர்கள் வாழ்ந்த பூமியாக எமது கிராமம் சித்தன்கேணியிலே நடுநாயகமாக எமது பெரியவளவு ஸ்ரீ மகாகணபதிப்பிள்ளையார் விற்றிருக்கின்றார்.

மகா கணபதிப்பிள்ளையார் கோயிலோடு ஒரு தொண்டர் நிறுவனம் போல இணைந்து அமைந்திருப்பது சித்தன்கேணி இளைஞர் முன்னேற்றக்கழகம். இக்கழகத்திலே சித்தன்கேணி இளைஞர்கள் எல்லோரும் அங்கத்தவர்களாக இருந்து, இக்கிராமத்தில் நடைபெறும் சகல சமய, சமூக, விழாக்களிலும் முக்கிய பங்கேற்று சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கான இளைஞர்களின் பங்களிப்பைச் சிறப்பாகச் செலுத்திவருகிறார்கள்.

எமது மகா கணபதிப்பிள்ளையார் கோயில் பரிபாலன சபையிலே இளைஞர் முன்னேற்றக் கழகத்தின் பிரதிநிதி ஒருவர் அங்கத்தவராக இருப்பதை எமது ஆலய யாப்பு விதிகள் உறுப்படுத்துகின்றன. எமது கிராமத்து இளைஞர்கள் இக்கழகத்தின் அங்கத்தவர்களாக இருந்து கிராமத்தில் நடைபெறும் நிகழ்வுகளில் முக்கிய பங்கேற்று ஈடுபட்டதன் மூலம் தமது வாழ்க்கைக்குச் சிறந்த வழிமுறைகளை அறிந்து சிறப்பாக வாழ்ந்து வருகிறார்கள்.

கடந்த ஐம்பது வருடங்களாகச் சிறப்பாக இயங்கிப் பொன்விழாக் கொண்டாடும் இக் கழகம். தொடர்ந்தும் சிறப்பாக இயங்கி, இக்கழக அங்கத்தவர்களாகிய இளைஞர்கள் என்றென்றும் சிறப்பாக வாழ்ந்து எமது கிராம முன்னேற்றத்திற்கு முக்கிய பங்களிப்பைச் செய்ய எல்லாம் வல்ல பெரியவளவு ஸ்ரீ மகாகணபதிப்பிள்ளையாரைப் பிரார்த்திப்போமாக.

**மு.பத்மநாதன்**
தலைவர், பரிபாலனசபை பெரியவளவு ஸ்ரீ மகாகணதிபதிப்பிள்ளையார் கோயில்,
சித்தன்கேணி.

## இளைஞரின் ஆளுமைக்கு உதவும் கைங்கரியம்

எங்கள் கிராம இளைஞர்களால் 1956ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இளைஞர் முன்னேற்றக் கழகம் இவ்வாண்டு தனது பொன்விழாவைக் கொண்டாடுவதையிட்டு பெருமகிழ்வடைகின்றேன். இளைஞர்கள் தங்களை ஆளுமை உள்ளவர்களாக ஆக்குவதற்கும் தாங்கள் சார்ந்த சமூகத்தை மேன்மைப்படுத்துவதற்கும் இவ்வாறான அமைப்புகள் மிகவும் முக்கியமானவையாக அமைகின்றன. இந்தவகையில் இவ் இளைஞர் முன்னேற்றக் கழகம் பல்வேறு செயற்பாடுகளிலும் சிறப்புற்று விளங்குவது எமக்கும் இக் கழகத்தை ஸ்தாபித்து வளர்த்த ஏனைய அங்கத்தவர்களுக்கும் மனநிறைவைத் தருகின்றது.

ஒருவர் எவ்வளவுதான் வசதி படைத்தவர்களாக இருப்பினும் அவரிடம் மன அமைதி, மன ஒருமைப்பாடு இல்லாவிடின் அவரின் வாழ்வு அர்த்தமற்றதாகிவிடுகின்றது. மன அமைதியையும் ஒருமைப்பாட்டையும் தருவது இறைவழிபாடாகும். இவ்வகையில் எமது இளைஞர்கள் ஆலய உற்சவங்கள், சமய நிகழ்வுகள், கல்விசார்ந்த செயற்பாடுகள், விளையாட்டு நிகழ்வுகள் என்பனவற்றில் அர்ப்பணிப்புடன் ஈடுபட்டு வருகின்றமை பாராட்டுக்குரியதாகும்.

இளைஞர் முன்னேற்றக் கழகம் மென்மேலும் தனது சேவைகளை விரித்து ஏனைய பொது அமைப்புகளுக்கு முன்னுதாரணமாகத் திகழவேண்டும் என்று எம் பெருமானை வேண்டி பொன்விழா சிறக்க வாழ்த்துகின்றோம்.

**சோ.தெய்வேந்திரம்**
தலைவர்,
ஸ்ரீசிவசிதம்பரேஸ்வரர் ஆலய பரிபாலனசபை.

உயர் கணக்கியல் கல்லூரி, சித்தன்கேணி
பொருளியல் - திரு.P.மோகன்
வர்த்தகம் - திரு.துளசிதாஸன்
கணக்கீடு - திரு.R.ரோஜிந்தன்
நிர்வாகி: R.ரோஜிந்தன்

வளர்பிறை பட்டுச்சோலை
காரைநகர் வீதி, சங்கானை. T.P.: 0776181965
மங்கையர் மனம் விரும்பும் ஆடைத் தெரிவுக்கும் சிறுவர் பெரியவர்களுக்கேற்ற ஆடைத்தெரிவுகளுக்கும் மற்றும் முகூர்த்தப் பட்டுப் புடைவைகளுக்கும் தெரிவுசெய்ய நீங்கள் நாடவேண்டிய நம்பிக்கையான ஒரே ஸ்தாபனம்
வளர்பிறை பட்டுச்சோலை

பரணி கிறீம் ஹவுஸ்
புறூட்சலட் ஐஸ்கிறீம், நட்ஸ் ஐஸ்கிறீம், வடை, கேக், பூந்தி லட்டு, றோல்ஸ், ஸ்பெஷல் ரீ மற்றும் அனைத்து வகையான ரோல்ஸ் மற்றும் ஐஸ்கிறீம் வகைகளையும் எம்மிடம் ஒடர் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.
கே.கே.எஸ்.வீதி, கோப்பாய் சந்தி. T.P.: 0776701527

நிறைஞ்சனாஸ் இரும்பகம்
நிறைஞ்சனாஸ் திரையரங்கு
காரைநகர் வீதி, சங்கானை,
நாதன்ஸ் திரையரங்கு
யாழ்ப்பாணம்.
உரிமையாளர்: பரமநாதன்.

கால்நடைகளுக்கான மருந்துகள், தீன்கள், இறைச்சிக்கோழிகள் மற்றும் குஞ்சுகள் சில்லறையாகவும் மொத்தமாகவும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்:
வலி.தென்மேற்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம்
7ஆம் கட்டை, சண்டிலிப்பாய்.

கந்தசாமி அன் சன்ஸ்
பிரதான வீதி, சங்கானை.
உரிமையாளர்: இந்திரகுமார்

விநாயகர் தொலைத்தொடர்பகம்
காரைநகர் வீதி,
சித்தன்கேணி.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம்

புத்தாண்டுப் பரிசு

## பாரம்பரிய கலை ஆவணப் பதிவு நாடா.....

## இசைநாடகம் / சிந்துநடைக்கூத்து

## ஒலிப்பேழை / இறுவட்டு அறிமுக விழா

காத்தவராயன் சிந்துநடைக்கூத்து, இசைநாடகங்களான ஞானசவுந்தரி, சம்பூர்ண அரிச்சந்திரா, பவளக்கொடி, நல்லதங்காள், கோவலன் கண்ணகி, சத்தியவான் சாவித்திரி, சாரங்கதரன், ஸ்ரீவள்ளி, நந்தனார், பூதத்தம்பி.

| தலைவர்: | இடம்: | காலம்: |
|---|---|---|
| கருமதிருதி வைத்திய கலாநிதி வை.தியாகராசா (தலைவர், பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம்) | யாழ்.இந்து மகளிர் கல்லூரி விசாலாட்சி மண்டபம். | 16.04.2006 ஞாயிறு மு.ப.9.30 மணி |

முதன்மை விருந்தினர்: திரு.கே.கணேஷ் (அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்)

### சிறப்புவிருந்தினர்கள்:

- பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை (முன்னாள் துணைவேந்தர்)
- பேராசிரியர் அ.சண்முகதாஸ்
- பேராசிரியர் க.கந்தசாமி (பீடாதிபதி, உயர்பட்டப்படிப்புகள் பீடம், யாழ்.பல்கலைக்கழகம்)
- பேராசிரியர் செ.சிவலிங்கராசா (தலைவர், தமிழ்த்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)
- திரு. க.தேவராசா (பீடாதிபதி, முகாமைத்துவக் கற்கைகள், வணிகபீடம்)
- திருமதி செ.மகாலிங்கம் (மேலதிக கல்விப்பணிப்பாளர், யாழ்ப்பாணம்)
- கலாநிதி க.குணராசா (தமிழ் எழுத்தாளர் ஒன்றியம் )
- திரு.க.சிவஞானம் (ஆணையாளர், யாழ்.மாநகரசபை)
- திரு.ஆ.சிவசுவாமி (மேலதிக அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்)

### கௌரவ விருந்தினர்கள்:

- பேராசிரியர் க.குகபாலன் (தலைவர், புவியியல்துறை, யாழ்ப்பாணம்)
- திரு.க.கேதீஸ்வரன் (திட்டப்பணிப்பாளர், யாழ்ப்பாணம்)
- திரு.வே.சாம்பசிவம் (பிரதித்திட்டப்பணிப்பாளர், ''நேர்ப்'' திட்டம்)
- திரு.B.A.அருமைநாயகம் (உதவிப் பொது முகாமையாளர், வட. பிரதேசம்,இ.வங்கி.யாழ்.)
- திரு.நா.வரதராஜா (வலயப் பிரதிக் கல்விப்பணிப்பாளர், யாழ்ப்பாணம்)
- திருமதி எஸ்.தெய்வேந்திரம் (பிரதேசசெயலர், நல்லூர்)
- திரு.C.A.மோகன்றாஸ் (பிரதேச செயலர், சங்கானை)
- திருமதி வே.பேரின்பநாதன் (அதிபர், இந்து மகளிர் கல்லூரி)
- திருமதி கோகிலா மகேந்திரராசா (வலயப் பிரதிக் கல்விப்பணிப்பாளர், வலிகாமம்)
- திரு. எஸ்.ஸ்ரீநிவாசன் (பிரதேச செயலர், தென்மராட்சி)
- திரு. எஸ்.திருவாரூரன் (பிரதேச செயலர், உடுவில்)
- செல்வி கிருபா வீரசிங்கம் (வலயப் பிரதிக் கல்விப்பணிப்பாளர், தென்மராட்சி)
- திரு.D.M. பற்றிக் டிரஞ்சன் (பிரதேச செயலர்,யாழ்ப்பாணம், நெடுந்தீவு)
- திரு. ச.சத்தியசீலன் (பிரதேச செயலர், கரவெட்டி)
- திரு.எஸ்.செல்வராசா (வலயக் கல்விப்பணிப்பாளர், வடமராட்சி)
- திரு.ஆர்.வரதீஸ்வரன் (பிரதேச செயலர்,பருத்தித்துறை)
- திரு.வ.இராதகிருஸ்ணன் (வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர்,தீவகம் )
- திரு.எஸ்.முரளீதரன் (பிரதேச செயலர், தெல்லிப்பழை)
- திரு. இ.ஜெயசீலன் (பிரதேசசெயலர், மருதங்கேணி)
- திருமதி ரூ.வரதலிங்கம் (பிரதேச செயலர், சண்டிலிப்பாய்)
- திருமதி அ.சாந்தசீலன் (பிரதேச செயலர், கோப்பாய்)
- திரு.K. ஸ்ரீமோகனன் (பிரதேச செயலர், ஊர்காவற்றுறை)
- திரு. மு.நந்தகோபாலன் (பிரதேச செயலர், வேலணை)
- திரு. பே.நாகரத்தினம் (உரிமையாளர், பேரம்பலம் அன் சன்ஸ்)
- திரு. ச.கைலாசபிள்ளை (உரிமையாளர், நியூ கமல் செரிமிக்)
- திரு.க.சோமசேகரம் J.P. (இளங்கலைஞர் மன்றம், யாழ்ப்பாணம்)
- திரு.ம.பிரதீபன் (உதவித் திட்டப்பணிப்பாளர், கச்சேரி, யாழ்ப்பாணம்)

### நிகழ்ச்சி நிரல்

- மங்கல விளக்கேற்றல்
- அக வணக்கம்
- கழக கீதம்
- வரவேற்புரை: திரு. பொன்.தர்மேந்திரன்
- ஆசியுரை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் வண.பி.எம்.இம்மானுவில் அடிகளார்
- தலைமையுரைகள்:
- வாழ்த்துரைகள்:
- வெளியீட்டுரை: பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் (கலைப்பீடாதிபதி, யாழ்.பல்கலைக்கழகம்)
- பிரதிகள் வழங்கல்:
- 11 நாடகங்களின்ஒலிப்பேழைகளையும் பெறுதல்: திரு.யோ.பூராசா (பணிப்பாளர், அருள்மிகு அந்தோனியார் தெய்வக் குழந்தைகள் இல்லம்,புங்குடுதீவு) திரு.வீ.மகாலிங்கம் (பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்)
- கலைஞர் கௌரவிப்பு:
- துணை அனுசரணையாளர் கௌரவிப்பு:
- முதன்மை விருந்தினர் உரை:
- பதிலுரை:கலாபூஷணம் செ.மெற்றாஸ்மயில்
- நன்றியுரை: திரு.நா.விமலநாதன் (ஆசிரியர்)

விழாக்குழு சார்பில்:
கலாபூஷணம் செல்லையா மெற்றாஸ்மயில்,
செயலாளர்.

தங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(அ.48935) (39-11-16)


விழா சிறப்புற வாழ்த்துகின்றோம்

**சேகர் மோட்டோஸ்**
தங்கள் சேவையில்
31 ஆவது வருடம்
புதிய காட்சியறை புதிய முகவரியில்
277, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

1. ரீல்ரர் வகைகள் 2. மின்சார உபகரணங்கள்
3. ரிடிவ் வகைகள் 4. வாகன அவசர பொருள்கள்
5. சகல வகையான க ட ர்களும் பூட்டுத் திருத்த வேலைகளும்
6. எங்களிடம் இல்லாத உதிரிப் பாகங்கள் ஓடர்க்கு எடுத்துக் கொடுக்கப்படும்.

"எங்கள் சேவை தங்கள் திருப்தியே."

நிகழ்வு சிறப்புற வாழ்த்துவதுடன் புத்தாண்டு வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றோம்.
**பூபாலசிங்கம் புத்தகசாலை**
இல.04, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

இறுவட்டு அறிமுகவிழா சிறப்புற வாழ்த்துகின்றோம்.
**கஜமுகன் பான்சிகவுஸ்**
இல.30, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.:021-2226925.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரைப் புத்தாண்டில் உங்கள் பலன் எப்படி?

## மேடம்

அச்சுவினி, பரணி, கார்த்திகை முதலாம் பாதம்

குலதெய்வத்தின் பூரண அருள் பெற்ற மேட ராசி அன்பர்களே!

புத்தாண்டில் உற்சாகத்துடன் திட்டமிட்ட செயல்களை நடத்தி வெற்றிபெறுவீர்கள். புரட்டாதி மாதம்வரை குரு பகவானின் அருட்பார்வை பூரணமாக இருப்பதால் எல்லா நன்மைகளும் கைசேரும். பொருளாதார வரவினங்கள் முன் பகுதியில் சராசரியாக இருக்கும். குருபெயர்ச்சிக்குப் பின்னால் பணவரவு கூடுதலாகும். குடும்பத்தில் மகிழ்ச்சியும் மங்கல காரியங்களும் நிறைந்திருக்கும். பேச்சுவார்த்தைகளில் பிறர் விரும்பும் தன்மை இருக்கும். இளைய சகோதரர்கள் அனுகூலமாக நடந்துகொள்வார்கள். சமூகத்தில் அந்தஸ்து பெறும் நல்ல நிலை உருவாகும். வீடு, வாகன வகைகளில் அனுகூலம் நிறைந்த பலன்களைப் பெறுவதற்கு நன்னிலை உண்டாகும். தாயின் அன்பும் ஆசியும் உங்களை நல்வழியில் நடத்தும். புத்திரர்கள், ராகு, கேது பெயர்ச்சி வரை யதார்த்த சூழ்நிலைகளில் நடந்துவந்தாலும் பின்னர் புத்திசாலித்தனத்துடனும் தெய்வ நம்பிக்கையுடனும் செயல்பட்டு கூடுதல் முன்னேற்றம் பெறுவார்கள். பூர்வ சொத்துகளால் வருமானம் பெறுபவர்கள் தகுந்த சேமிப்பை உருவாக்குவார்கள். உடல்நலத்தில் சிறு பாதிப்பு வரலாம். ஆனால், நல்ல பழக்கங்கள் உடல் பாதுகாப்புக்குத் துணை நிற்கும்.

கணவன், மனைவி ஒற்றுமை அன்பும் பண்பும் கலந்திருக்கும். ராகு, கேது, குரு பெயர்ச்சிக்குப் பின் குடும்ப ஒற்றுமையில் தம்பதியர் கூடுதல் கவனம் செலுத்துவது நலம் தரும். நண்பர்களின் தனிப்பட்ட செயற்பாடுகளில் உங்களின் தலையீடுகளைக் குறைத்துக் கொள்வது நல்லது. தந்தை வழி உறவினர்கள் சுமூகமான உறவுநிலை பேணுவார்கள். சுக சௌகர்ய வாழ்க்கை முறையில் ஏற்படும் பண செலவுகளைக் குறைக்க முற்படுவீர்கள்.

தொழில், உத்தியோகம், வியாபாரம் சார்ந்தவற்றில் உங்கள் கவனம் ஒருமுகத்தன்மையுடன் செயற்பட்டு தகுந்த வெற்றியைப் பெற்றுத்தரும். மூத்த சகோதரர்கள் நண்பருக்கு இணையாக நடந்துகொள்வார்கள். வெளியூர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளை எதிர்பார்த்து இருப்பவர்களுக்கு அனுகூல செய்திகள் தேடிவரும்.

பாத்திர உற்பத்தி, ஆயத்த ஆடை, பருத்தி,கம்பளி ஆடைகள், உணவுப் பொருள் உற்பத்தியாளர்கள், தங்கும் விடுதி நடத்துபவர்கள், அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டி விற்பனை செய்பவர்கள் தங்கள் தொழிலில் கூடுதல் முயற்சியுடன் செயற்பட்டு நல்ல முன்னேற்றமும் கூடுதல் பொருளாதார வரவுகளும் பெறுவார்கள்.

அரசு மற்றும் தனியார் அலுவலகப் பணியாளர்கள், தங்கள் பணிகளில் கூடுதல் அதிகார சுதந்திரம் கிடைக்கப் பெறுவார்கள். ஒவ்வொரு பணியிலும் கூடுதல் ஈடுபாட்டுடன் செயற்பட்டு தகுந்த சலுகையும் பெறுவார்கள். பண வரவுகள் தடையின்றிக் கிடைக்கும். உங்களின் பேச்சு வசீகரத் தன்மை உருவாக்கும். சமூகத்தில் நற்பெயர் உண்டாகும். தெய்வ அனுகூலம் உண்டாகும். கணவன், மனைவி குடும்ப ஒற்றுமை வளம் பெறும். சக ஊழிர்களால் எதிர்பாராத உதவிகள் ஏற்படும். அலுவலகத்தில் எதிர்பார்த்த பண உதவிகள் அனுமதிக்கப்படும்.

**பெண்கள்:** அரசு மற்றும் தனியார் துறையில் பணிபுரியும் பெண்கள் ஆர்வமுடன் செயற்பட்டு பணியின் இலக்கை பூர்த்திசெய்வார்கள். குடும்ப நிர்வாகம் கவனிக்கும் பெண்கள் எதிர்வரும் சவால்களைச் சமாளித்து பொருளாதார சேமிப்பை உருவாக்குவார்கள். தாய்வீட்டு உறவினர் வழி சீர்வரிசைகள் கிடைக்கும் பாக்கியம் சிலருக்கு உண்டாகும். சுயதொழில் மற்றும் கூட்டுத்தொழில் புரியும் பெண்கள் புத்தாண்டின் தொடக்கத்திலேயே கண்ணும் கருத்துமாகச் செயற்பட்டு தங்கள் தொழிலை அபிவிருத்தியான நிலைக்கு உயர்த்துவார்கள். ஆபரணச் சேர்க்கை ஏற்படும். குடும்ப உறவினர்கள் மரியாதை கலந்த அன்புடன் நடந்துகொள்வார்கள். திருமண முயற்சி செய்யும் பெண்களுக்கு தகுந்த வரன் கிடைக்கும். கணவன், மனைவி ஒற்றுமை பிறர் மதிக்கும் வகையில் இருக்கும்.

**மாணவர்கள்:** இலத்திரனியல், இயந்திரவியல், ஹோட்டல் நிர்வாகம், உணவுப் பொருள் தயாரிப்பு மற்றும் ஆராய்ச்சி படிப்பு மாணவர்கள் வரும் செப்ரெம்பரில் நிகழும் குருபெயர்ச்சி வரை கூடுதல் கவனம் செலுத்துவதால் சிறந்த தர தேர்ச்சி பெறலாம். புதிய கல்வியாண்டில் படிப்புக்கு தேவையான பொருளாதார வசதி திருப்திகரமாகக் கிடைக்கும். இதனால் மனமகிழ்வுடன் புதிய பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள். சமூகப்பணியிலும் நாட்டம் உண்டாகும். விளையாட்டுத்தனங்களை குறைத்துக்கொள்ளும் மனோபாவம் செயலுக்கு வரும். சாகச விளையாட்டு பயிற்சி மாணவர்கள் பாதுகாப்பு வழிமுறைகளைத் தவறாமல் கடைப்பிடிப்பது அவசியம். நண்பர்களின் மனதறிந்து பழகுவதால் நன்மை உண்டு. தந்தை மகன் உறவுநிலை ஒருவருக்கொருவர் புரிதல் தன்மையுடன் இருக்கும்.

**அரசியல்வாதிகள்:** கடந்தகாலத்தில் ஏற்பட்ட படிப்பினைகளை மனதில் கொண்டு உங்கள் அரசியல் பயணத்தில் புதிய வழித்தடங்களை உருவாக்குவீர்கள். நண்பர் போல நடந்து இடையூறாகச் செயற்பட்டவர்கள் தானாக விலகிப் போவார்கள். புத்திரர்களின் செயற்பாடுகள் உதவியைப் பெற்றுத்தரும். அரசியலுடன் தொழில் மற்றும் வியாபார வாய்ப்புகளைப் பெற்றவர்கள் போட்டிகளைச் சமாளிக்கப் புதிய கூட்டாளிகளை இணைத்துக்கொள்வார்கள். அதிகாரிகளின் ஆதரவு பெற்று உங்கள் பகுதி மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்வீர்கள். செலவினங்களைச் சமாளிக்கத் தேவையான பொருளாதார வளம் உருவாகும். கணவன், மனைவி ஒற்றுமை மகிழ்ச்சி நிறைந்ததாக இருக்கும்.

**பரிகாரம்:** பெருமாள் கோயிலில் சுவாமிக்கும், தாயாருக்கும் வழிபாடு நடத்த எண்ணியது ஈடேறும்.

## இடபம்

கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிடம் 1,2

குபேர பகவானின் நற்கருணை பலம் பெற்ற இடப ராசி அன்பர்களே!

தொடங்கும் புத்தாண்டில் நிறைவேற்ற வேண்டிய பணிகளைத் தகுந்த முறையில் திட்டமிடுவீர்கள். பணவரவு பெறும் வழிவகை புதிதாக உருவாகும். குடும்பத்தில் உறவினர்களின் நல்ல அன்பையும், உதவியையும் பெற்று மகிழ்ச்சியான வாழ்வைப் பெறுவீர்கள். எதையும் சாதிக்க வேண்டும் என்ற உறுதி பிறக்கும். இளைய சகோதரர்களின் செயற்பாடுகள் மந்தகதியில் இருக்கும். சமூகப் பணியில் மிதமான ஆர்வம் இருக்கும். தாயின் உடல்நலத்தில் தகுந்த கவனம் வேண்டும். வீடு, பசு, பால் பாக்கியம் போன்றவற்றில் புதிய முதலீடுகள் செய்வதற்கான நன்னிலைகள் புத்தாண்டின் மத்தியில் இறையருளால் உருவாகும். வாகனப் பயணங்கள் மகிழ்ச்சி தருவதாக இருக்கும். புத்திரர்கள் நல்லபடியாக நடந்துகொள்வார்கள். குலதெய்வ அருளும், பூர்வபுண்ணிய நற்பலன்களும் தகுந்த சமயத்தில் கைகொடுக்கும். வில்லங்க மனப்பான்மையுடன் செயற்பட்டவர்கள் தங்களின் செயலுக்காக வெட்கப்படும் சூழ்நிலை ஏற்படும். உடல் ஆரோக்கியம் சீராக அமைந்திடும். கணவன், மனைவி ஒற்றுமையில் இருந்த சிறு சலனங்கள் படிப்படியாகக் குறைந்துவிடும்.

நண்பர்கள் முன்பிருந்த கருத்து வேறுபாடுகளை மறந்து புதிய மனநிலையுடன் நட்புப் பாராட்டுவார்கள். தந்தைவழி உறவினர்கள் மூலம் எதிர்பார்த்த உதவிகள் ராகு, கேது, குரு பெயர்ச்சிக்குப் பின் கூடுதல் அனுகூலத்துடன் கிடைக்கும். தொழில், உத்தியோகம், வியாபாரம் போன்றவற்றில் உங்களின் ஒவ்வொரு செயலும் வளர்ச்சியைப் பெற்றுத் தருவதாக இருக்கும். சுக சௌகர்ய வாழ்க்கை வசதிகளை அளவுடன் ஏற்படுத்திக் கொண்டு வாழ்வில் உயர்வு பெறுவதையே குறிக்கோளாகக் கொண்டு செயற்படுவீர்கள். கூட்டுத் தொழில் புரிபவர்கள் புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கப் பெற்று உற்பத்தி, விற்பனையில் சாதனை பெறத்தக்க இடத்தைப் பிடிப்பார்கள்.

திருமண முயற்சியில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு வருடத்தின் மத்தியிலிருந்து அனுகூலம் தரும் பலன்கள் உண்டாகும். மூத்த சகோதர வகையினர் கருத்து வேறுபாடுகளை மறந்து தந்தைக்கு ஒப்பான அன்புடன் உங்களை வழிநடத்துவார்கள். வெளியூர் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்கான முயற்சி செய்பவர்கள், வரவு, செலவுகளைக் கணக்கிட்டு நடைமுறைப்படுத்துவது நல்லது.

உங்கள் சொல்லுக்கும், செயலுக்கும் மரியாதை கிடைக்கும். மனதில் தைரியம் அதிகரிக்கும். தொழிலில் புதிய கூட்டுச் சேர்க்க விரும்புபவர்கள் தகுந்த கவனமுடன் செயற்படுவது நல்லது. நண்பர்களால் உதவி உண்டு.

அரசு மற்றும் தனியார் துறையில் பணிபுரிபவர்கள் தங்களுக்குரிய திறமையை தகுந்த சமயத்தில் பயன்படுத்தி பணியில் உயர்வு பெறுவதற்கான அடிப்படையை உருவாக்கிக் கொள்வார்கள். இரசாயன இயந்திர, தொழிற்சாலைகளில் பணிபுரிபவர்கள் பாதுகாப்பு முறைகளில் கவனம் செலுத்துவதால் நன்மை உண்டு. மருத்துவம், விவசாயம், உணவுப்பொருள் விநியோகம், மின்சாரத்துறைப் பணியாளர்கள் தங்களின் நீண்டகாலத் திட்டங்களைச் செயல்வடிவம் பெற வைப்பார்கள்.

தங்கநகை, புடைவை வியாபாரம் செய்பவர்களுக்கு மிக சிறப்பான ஆண்டு. மின்சார உபகரணங்கள், மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள், வீட்டு உபயோக சாதனங்கள், பாத்திரம், கண்ணாடி, பிளாஸ்டிக் பொருள்கள், எலக்ட்ரோனிக்ஸ் சாதனங்கள், பெண்களுக்கான அழகுக்கலை பொருள்கள், பழச்சாறு மற்றும் குளிர்பான வகைகள் வியாபாரம் செய்பவர்கள் வியாபார அபிவிருத்தியும் பொருளாதார உயர்வும் பெறுவார்கள். மருந்து, மருத்துவ உபகரணங்கள், விவசாய பொருள்கள், காய்கறி, பழவகைகள், பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருள்கள் வியாபாரம் செய்பவர்கள் அபிவிருத்தி பலன் பெறுவார்கள்.

**பெண்கள்:** அரசு மற்றும் தனியார் துறை அலுவலகங்களில் பணிபுரியும் பெண்கள் ஒருமித்த செயல்திறனுடன் பணிபுரிந்தாலும் சிறு கவனக்குறைவு வரலாம். தேவையான பயிற்சிகளை மேற்கொண்டு நிர்வாகத்திடம் நற்பெயர் பெறுவீர்கள். துறை சார்ந்த ஊழியர்கள் நட்பு நிலையுடன் நடந்துகொள்வார்கள். குடும்ப நிர்வாகம் கவனிக்கும் பெண்கள் தகுந்த பொருளாதார வளம்பெற்று குடும்பத்தில் இனிமை தரும் சூழ்நிலைகளைப் பெறுவார்கள். திருமண முயற்சி செய்யும் பெண்களுக்கு ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் அனுகூலம் தரும் வகையில் நற்பலன் ஏற்படும். சுய தொழில் மற்றும் கூட்டுத்தொழில் புரிபவர்கள் சுமூகமான சூழ்நிலையில் வியாபாரம் நடத்துவார்கள். ஐப்பசி மாதத்திற்குள் மனம் விரும்பிய அணிகலன் வாங்கிட வழிவகை உண்டாகும். கணவன், மனைவி ஒற்றுமை நல்லபடியாக இருக்கும். புத்திரர்கள் பெருமை தேடித்தருவார்கள்.

**மாணவர்கள்:** வாகனப் பழுது நீக்குதல், கணனி, அச்சுத் தொழில்நுட்பம், இயந்திரங்கள் இயக்குதல், கட்டட வடிவமைப்பு, வீட்டு உள் அலங்கார வடிவமைப்பு, சட்டம் சார்ந்த கல்வி ஆகியவற்றில் பயிற்சி பெறும் மாணவர்கள் தங்களின் படிப்பு திறமையை வெளிப்படுத்தி சிறப்பு நிலை பெறுவார்கள். ஆசிரியர் பயிற்சி, இலக்கியம், சமையல் கலை மாணவர்கள் சக மாணவர்களின் கூட்டுமுயற்சியால் விரும்பிப் படித்து சிறந்த தரத்தேர்ச்சி காண்பார்கள். ஆரம்ப, உயர்நிலை மாணவர்கள் ஆண்டின் முற்பகுதியில் சற்று சோர்ந்தாலும், பிற்பகுதியில் சுதாரித்து படிப்பார்கள். படிப்புக்குத் தேவையான பணவசதி கிடைக்கும். சாதனை நிகழ்த்தும் புதிய வாய்ப்புக்கள் உண்டாகும். உறவினர்களிடம் மதிப்பு உண்டாகும். சமூக சேவையில் ஆர்வமும், பணிகளால் பாராட்டும் கிடைக்கும். தந்தை, மகன் உறவு நிலை சீராக இருக்க கிரகங்களின் நல்லருள் உண்டு.

**அரசியல்வாதிகள்:** உங்கள் நீண்டகால இலட்சியங்களை நிறைவேற்றுவதற்குச் செய்யும் முயற்சிகள் அனுகூல பலனைத்தரும். எதிரித்தனமாகச் செயற்பட்டவர்கள் பலமிழந்து போவதால் துவங்கும் செயல்களில் கவனக் குறைவாக இருந்துவிடவேண்டாம். பொருளாதார வரவுகளில் திருப்திகரமான நிலை நீடிக்கும். வீடு, வாகன வகையில் அனுகூலம் தரும் நிலை இருக்கும். புத்திரர்களின் சேர்க்கை சகவாசங்களில் முன்னேற்றமான நண்பர் சேர்க்கை உருவாகும். கணவன், மனைவி குடும்ப ஒற்றுமை வளமும் நலமும் பெற்று இருக்கும். உடல்நல ஆரோக்கியமும், செயற்பாட்டுத்திறனும் அதிகரிக்கும். அரசியலுடன் தொழில் வியாபாரம் நடத்துபவர்கள் புதிய நட்பு சகவாசத்தால் தொழில் வளர்ச்சி காண்பார்கள். வெளியூர் பிரயாணங்கள் மன மகிழ்ச்சியும் பணவரவும் தருவதாக அமையும்.

**பரிகாரம்:** தெட்சிணாமூர்த்திக்கு மஞ்சள் வஸ்திரம், மஞ்சள் மலர்மாலை சாத்தி வழிபட சகல நன்மையும் உண்டாகும்.

*(வளரும்)*





கியூமெடிக்கா நிறுவனத்தால் நெடுந்தீவு மக்களுக்காக வழங்கப்பட்ட அம்புலன்ஸ் படகு கடந்த செவ்வாய்க்கிழமை வைபவரீதியாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டது. இந்நிகழ்வில் பிரதி மாகாண சுகாதாரப் பணிப்பாளர் ஆ. கேதீஸ்வரன் மங்கல விளக்கேற்றுவதையும் யாழ். மாவட்ட அரச அதிபர் கே.கணேஸ் நாடாவை வெட்டி படகுச்சேவையை ஆரம்பித்து வைப்பதையும் படங்களில் காணலாம்.

*(படங்கள்: நல்லூர்ச் செய்தியாளர்)*

## தவக்காலச் சிந்தனை 46

### உயிர்ப்பின் சமாதானம் மண்ணில் மலரட்டும்

கோதுமை மணி மண்ணில் வீழ்ந்து மடிந்தாலொழிய மிகுந்த பலன் தரமுடியாது என்று கூறிய இயேசுவுக்கு கல்லறையா? நானே உயிர்தரும் உணவு என்றவருக்கு மரணமா? ஆதவனை இருள் வெற்றிகொள்ளுமா?

ஆம், கல்லறைக்குள் பேரொளியை வைத்துவிட்டு அலகை ஆட்சி நடத்தலாம் என எண்ணியது. அதன் நிழல் வெற்றி நிஜம் உயிர்த்ததால் தோற்றுப்போனது.

ஏனென்றால், காலங்களையும் யுகங்களையும் கடந்த வரும் ஆட்சியும் மாட்சியுமான இறைஒளி மண்ணுக்குள் அடங்கவில்லை. மீட்புத் திட்டத்தை நிறைவேற்ற மண்ணில் வீழ்ந்த கிறிஸ்து என்னும் விதை கிறிஸ்தவப் பெருவிருட்சமாக முளைகொண்டு எழுச்சிபெற்றது. உயிர்ப்பும் உயிரும் நானே என்றவாறு இயேசு உயிர்த்து திருச்சபையின் விசுவாசத்திற்கு வலுச்சேர்ந்தார். அநீதியை வென்று நீதியை நிலைநிறுத்திய சமாதானத்தின் அரசராக கல்வாரிக் களமாடி தன் மெய்யால் விடுதலை தந்தார்.

இந்த உயிர்ப்பின் புதுப்பிறப்பின் மகிழ்வில் முழுமையுடன் பங்குகொள்ள எமது உள்ளங்கள் புதுப்பிறப்பெடுத்து தோன்றும் எண்ணங்கள் உயிர்ப்படையவேண்டும். பிறரும் உயிர்ப்புடன் வாழ வழிசமைக்கவேண்டும்.

எமது பாவங்கள் பழைய வாழ்வு முறைகளைக் கல்லறைக்குள் புதைத்துவிட்டு இயேசுவோடு உயிர்த்தெழுவோம். நாம் புதிதாகத் தொடங்கும் புதுவாழ்வு கிறிஸ்துவின் உயிர்ப்புக்கு சான்று பகர்வதாக அமையட்டும்.

"கிறிஸ்துவின் சமாதானம் அனைவரோடும் தங்குவதாக அல்லலேலுயா! அல்லலேலுயா!!

- எஸ்.யேசுதாஸ், *கொழும்புத்துறை.*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



உயர்திரு
## தி.இராசநாயகம்

சமூக சேவையினையும் நலிவுற்ற சிறார்களின் முன்னேற்றத்தினையும் தனது தலையாய நோக்காகக் கொண்டு, அரும் பணியாற்றும் எமது மாவட்ட அரச அதிபர் உயர்திரு. தி.இராசநாயகம் அவர்கள் 2006.04.11ஆம் திகதி கம்பன் விழாவில் அவரது உன்னத மக்கள் சேவைக்காக கௌரவிக்கப்பட்டுள்ளமையையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றோம். இவர் எமது மாவட்டத்தில் மேலதிக அரச அதிபராகவும் திட்டப் பணிப்பாளராகவும் பிரதித் திட்டமிடல் பணிப்பாளராகவும் இன்னும் பல சமூக அமைப்புகளின் உயர்செயற்பாட்டாளராகவும் மக்களுக்கு அருந்தொண்டாற்றிய இவரது சேவை மென்மேலும் சிறப்புற வாழ்த்துகின்றோம்.

அலுவலர்கள்,
மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகம்,
கிளிநொச்சி.
(ஈ/48932)(32-11-15)


## வைரஸ் காய்ச்சலால் பலர் பாதிப்பு

குருநகர்,ஏப்.15

யாழ்ப்பாணத்தில் தற்போது நிலவும் கடும் வெப்பம் காரணமாக ஒருவித வைரஸ் காய்ச்சல் அநேகரைப் பீடித்து வருவதாக அரச மற்றும் தனியார் வைத்திய நிலையங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

இக்காய்ச்சல் தும்மல், இருமலுடன் ஆரம்பமாகி ஒருவாரம் வரை நீடிக்கின்றது. சிறுவர்கள் தொடக்கம் வயது முதிர்ந்தவர்கள் வரை இக்காய்ச்சலால் பீடிக்கப்பட்டு வருகிறார்கள். சிறுவர்களுக்கு ஏற்படும் இக்காய்ச்சலால் சிலர் வலிப்புக்கும் இலக்காகிறார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-51)

## மழலைகள் பூங்காவிற்கு பிளாஸ்ரிக் கதிரைகள்

கைதடி, கலைநகர் ஜான் மழலைகள் கல்விப் பூங்கா மாணவர்களின் நன்மை கருதி அறவழி நிறுவனம் அண்மையில் இருபது பிளாஸ்ரிக் கதிரைகளை கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலையத்திடம் கையளித்தது.

அறவழி நிறுவனச் செயலாளர் க.ஜீவகதாஸ் கதிரைகளை கைதடி வளர்மதி சனசமூக நிலையப் பொருளாளர் ம.கேதீஸ் வரனிடம் நேரடியாகக் கையளித்தார்.

(எ-75)


இதோ அறிமுகப்படுத்துகின்றோம்
**சிதார வர்ம தைலம்**
உடைவு, முறிவு, வீக்கம், சுளுக்கு, இரத்தக்கட்டு, முழங்கால் மூட்டுவலி, குதிக்கால் வலி ஆகியவைகளுக்கு
காலை, மாலை பூசி வரவும்.
Reg.Number 10171 ARPR No.228
(வெளிப்பிரயோகத்திற்கு மட்டும்)
சந்தைப்படுத்துவோர்:
**சிவா நறுமணப்பூங்கா,**
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.Phone: 222 2567
சகல பார்மஸிகளிலும் கிடைக்கும்.
(ஈ/48632)(32-15-11)

# புதிய பிரிவுகள் ஆரம்பம்

⇨ Diploma in Ms Office
⇨ Diploma in Desktop Publishing
⇨ Diploma in Web Design
❖ முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்.
Start on - 12-04-2006

**C.B Computer Academy**
T.P No. 021-4590291
Station Road, Kondavil.


# அறிவித்தல்

வட்டு. மூன்றாம் பனை ஐக்கிய நாணய சங்கத்தின் கட்டட நிதிக்காக 16.04.2006 ஞாயிறு பி.ப 2 மணிக்கு அதிர்ஷ்டம் பார்க்க இருந்த குலுக்கல் 11.06.2006 ஞாயிறு மு.ப 10 மணிக்கு பிற்போடப்பட்டுள்ளது.

செயற்குழு,
வட்டு.மூன்றாம் பனை ஐக்கிய நாணய சங்கம்.
(49406)(27-15-11-32)

## தென்மராட்சி ஆசிரியர்களுக்கான PVF ஆங்கிலப் பயிற்சிநெறிப் பரீட்சை

இம்மாதம் 09.04.2006 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10மணிக்கு நடைபெறவிருந்த மேற்படி பரீட்சை 16.04.2006 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் நடைபெறும் என்பதை அறியத்தருகிறேன்.

செ.சபாரத்தினம்
PVF பணிப்பாளர்.
(48425) (27-32-15-11)


# COMPUTER EXPRESS
**Institute of Information Technology**
இல. 15, சிறாம்பியடி வீதி,யாழ்ப்பாணம்.(off Stanly Rd.)
021-222 8250,0777 222422

யாழ்நகரில் முதன்முறையாக தமிழ்மொழி விளக்கத்துடன் ஒருவாரகால முழுநேர கற்கைநெறிகள்.

## Diploma in Hardware Engineering

உள்நாட்டு வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களை பெற சுயதொழில் ஆரம்பிப்பதற்கு மற்றும் தரம்வாய்ந்த சான்றிதழைப் பெற.

**Course Contents :-**
- கணனி தொடர்பான அறிமுகம்
- Operating System - Windows XP & DOS
- கம்யூட்டரின் பாகங்களும் அவற்றின் விளக்கங்களும்
- Mother Board, processor, Ram தொடர்பான விரிவான விளக்கம்.
- கம்யூட்டரை அசெம்பிள் செய்தல்
- அசெம்பிளிங் முடிந்தவுடன் என்ன செய்வது என்பது தொடர்பான விளக்கம். (BIOS Setup)
- Hard Disk ஐ முறைப்படுத்தல்.
- Software, Operating system இன்ஸ்ரோல் செய்தல்.
- கம்யூட்டரில் ஏற்படும் பழுதுகளை சரிபார்த்தல்.

**Hardware பயிற்சி.**
- கணனிப் பாகங்களை இனம்காணும் முறை.
- Assembling
- BIOS Configurations (முறைப்படுத்தல்)
- Hard Disk இனை முறைப்படுத்தல் (Partition & Formatting)
- Network தொடர்பான அறிமுகம்
- Trouble Shooting & Maintenance.

**Software பயிற்சி.**
- Operating System நிறுவும் முறை (Windows 98 & Windows XP)
- Software Install செய்யும் முறை.
- Driver Installation செய்யும் முறை. (Sound Card, Modem, VGA, TV Card, Printer)
- Trouble Shooting (File updating, Copying)

Course Fee :- 2000/=
Free Study Pack & Driver CD
வகுப்புக்கள் ஆரம்பம் :-
17/04/2006 :- 08.30

## Diploma in Computerized Accounting

**ACCPAC + Quickbooks premier + MYOB**

ஆகிய முன்னணி Accounting Software அனைத்தினூடாகவும் கற்பிக்கப்படும்.

*Course Contents:-*
Introduction to Computer
Manual Accounting
Financial Accounting
Cost Accounting
Taxation (including VAT)
Stock Control
Bank Reconciliation
Budgeting
Fore casting
Business Planing
Internet & e-mail

One week

யாருக்கு:-
கணக்கியல் துறையில் (அரச,தனியார்,NGO) வேலைசெய்துகொண்டிருப்போருக்கும், வெளிநாட்டில் வேலைவாய்ப்பை எதிர்பார்த்திருப்போருக்கும், பல்கலைக்கழக, உயர்தொழினுட்ப கல்லூரி மாணவர்களிற்கும், கணக்கியல் துறையில் கற்றுக்கொண்டிருப்போர் அனைவரிற்கும்.

Course Fee:-
~~17500~~ 3500

கற்கைநெறியின் நன்மைகள் :-
- பாடநெறியின் இறுதியில் 100% பூரண அறிவைப் பெற்றுக்கொள்வதற்கான உத்தரவாதம்
- கம்யூட்டரின் உட்தொழினுட்பம் பற்றி பூரண அறிமுகம் செய்வதால் கம்யூட்டர் தொடர்பான முன்னறிவு அவசியமில்லை.
- தராதரமும் நீண்ட அனுபவமும் கொண்ட விரிவுரையாளர்களால் கற்பிக்கப்படுகின்றது.
- 100% செய்முறைப் பயிற்சிகளுடனான விரிவுரைகளிற்கு உத்தரவாதம்.

வகுப்புக்கள் ஆரம்பம்:-
17/04/2006

ஏனைய அனைத்துக் கணனிக் கற்கைநெறிகளிற்கான புதியபிரிவுகள் 15ம்,19ம் திகதிகளில் ஆரம்பமாகின்றது.
Morning Batch :- 10.30-11.30
Evening Batch :- 03.00-04.00
80% Off

கொழும்பிலிருந்து வருகைதரும் விரிவுரையாளர்களால் வகுப்புக்கள் நடாத்தப்படும்

# யாழ் மண்ணில்!

முழுமையான கணக்கியல் சார் கணினிக் கற்கை நெறிகள் ஆரம்பமாகின்றது.
பல்கலைக்கழக மாணவர்கள்,
உயர்தொழிநுட்ப மாணவர்கள்,
A/L நிறைவு செய்திருக்கும் மாணவர்கள்,
மற்றும் கணக்கியல் துறையில் ஆர்வமுள்ளவர்களுக்கு, முதன் முதலாக,

**Diploma in Office Management**
⇨ AccPac
⇨ MYOB
⇨ Tally
⇨ Quick Books Premier

பதிவுகளுக்கு முந்துங்கள்!

பிரிவு I 20.04.2006 காலை 8.30
பிரிவு II 20.04.2006 மாலை 6.30

**CICS Computer Technologies**
# 87, Palaly Road, Thirunelvely, Jaffna.
E-mail: cicsjaffna@gmail.com

புத்தாண்டையும் விடுமுறையினையும் பயனுள்ளதாக்க CICS உடன் இன்றே இணையுங்கள்!

# மாபெரும் கணினிக் கருத்தரங்கு

15.04.2006 சனிக்கிழமை
காலை 9.00 மாலை 2.00

⇨ Virus
⇨ Network Security

ஆகிய விடயங்களை உள்ளடக்கியதாக இக் கருத்தரங்கு அமைகின்றது.

கருத்துரை வழங்குபவர்:
லண்டனிலிருந்து வருகை தந்துள்ள
**Mr. S. Emilton**
B.Sc (Hons)(Ceylon), M.Sc (Westminster)

Latest Anti Virus Softwares, Study Packs என்பன உள்ளடக்கிய CD இலவசமாக வழங்கப்படும்.

**CICS Computer Technologies**
# 87, Palaly Road, Thirunelvely, Jaffna.
E-mail: cicsjaffna@gmail.com

பதிவிற்கு முந்துங்கள்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிளிநொச்சி மத்திய கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற சாரணர் இயக்கத்தின் தந்தை பேடன் பவலின் பிறந்ததின நிகழ்வுகளில் எடுக்கப்பட்ட படங்கள் இவை. கல்லூரி அதிபர் இ.இராஜமகேந்திரன் சாரணர் ஒருவருக்குத் திறமைச் சின்னம் சூட்டுவதையும் சாரணர் குழுப் போட்டியில் வெற்றிபெற்ற சாரணருக்கு வெற்றிக் கிண்ணம் வழங்குவதையும் முதலிரு படங்களிலும் சாரணர்களின் பாடல் நிகழ்வை அடுத்துள்ள படத்திலும் காணலாம்.

(படங்கள்: வட்டக்கச்சிச் செய்தியாளர்)(24)

## அன்னை பூபதி நினைவு நிகழ்வுகள்

ஒட்டுசுட்டான்,ஏப்.15

தியாகி அன்னை பூபதியின் 19ஆம் ஆண்டு நினைவுநாள் நிகழ்வுகள் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் ஒட்டுசுட்டான், கற்சிலைமடு, முத்துஜயன்கட்டு ஆகிய இடங்களிலுள்ள பாடசாலைகளில் கடந்த 7ஆம் திகதி நடைபெற்றன.

முத்துஜயன்கட்டு இடதுகரை அ.த.க. பாடசாலை முதல்வர் கருணாகரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பொதுச்சுடரினைப் பாடசாலை ஆசிரியை தமயந்தி ஏற்றிவைக்க தமிழீழத் தேசியக் கொடியினை ஒட்டுசுட்டான் பிரதேச துணைப்பொறுப்பாளர் புலிக்குட்டி ஏற்றிவைத்தார்.

பாடசாலைக் கொடியினை பாடசாலை முதல்வர் ஏற்றிவைக்க அன்னை பூபதியின் திருவுருவப்படத்திற்கான ஈகச்சுடரினை பாடசாலை ஆசிரியை ஏற்றிவைக்க மலர் மாலையினை ஆசிரியை நிமலராணி அணிவித்தார். கருத்துரையினை துணுக்காய்ப் பிரதேச மாணவர் பேரவைப் பொறுப்பாளர் இளையவன் ஆற்றினார். பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

(3-341)(30)

## பேராளர் சங்கமம் நிகழ்வு நாளை

அக்கராயன்,ஏப்.15

கிளிநொச்சி அக்கராயன் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் பேராளர்கள் சங்கமம் நிகழ்வு நாளை ஸ்கந்தரபுரம் இல.1, பாடசாலையில் இடம்பெறவுள்ளது.

அக்கராயன் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் தலைமையில் இந் நிகழ்வு இடம்பெறவுள்ளது. (3-420)(30)

## புதுக்குடியிருப்பு உப தபாலகம் தபாலகமாகத் தரம் உயர்வு

புதுக்குடியிருப்பு,ஏப்.15

புதுக்குடியிருப்பு உப தபாலகம் தபாலகமாகத் தரமுயர்த்தப்பட்டுள்ளது.

இது தொடர்பான நிகழ்வு கடந்த 10ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் சு.ஜெயரட்ணம் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில், பொதுச்சுடரினை வடமாகாண அஞ்சல் அத்தியட்சகர் வி.குமரகுருபரன், புதுக்குடியிருப்பு கிருஷ்ணன் கோயில் குருக்கள் சிவஸ்ரீ இராமசாமி, அஞ்சலர் சீ.செல்வராசா ஆகியோர் ஏற்றினர்.

தமிழீழத் தேசியக் கொடியினைப் புதுக்குடியிருப்புக் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இ.புகரசன் ஏற்றினார். அஞ்சலகக் கொடியை வடமாகாகண அஞ்சல் அத்தியட்சகர் ஏற்றினார்.

அஞ்சலகப் பெயர்ப்பலகையை முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரச அதிபர் க.பார்த்தீபன் திரை நீக்கம் செய்துவைத்தார். கட்டடத்தை வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் நாடாவெட்டித் திறந்துவைத்ததுடன் அஞ்சலக நடவடிக்கையையும் ஆரம்பித்து வைத்தார்.

(எ-353-202)(30)

## மருத்துவத் தொண்டர்கள் வீட்டுத் தரிசிப்பு

கிளிநொச்சி,ஏப்.15

முள்ளிக்குளம் தியாக தீபம் திலீபன் மருத்துவசேவை மருத்துவத் தொண்டர்கள் வீட்டுத் தரிசிப்பை மேற்கொண்டுவருகின்றனர்.

கீரிசுட்டான், முள்ளிக்குளம், விளாத்திக்குளம், பரசன்குளம், வலயங்கட்டு ஆகிய கிராமங்களிலுள்ள சகல வீடுகளுக்கும் சென்று சுகாதாரக் கருத்தூட்டல்களை வழங்குவதுடன் குடற்புழுத் தொற்றிற்கான தடுப்பு மருந்துகளையும் வழங்கி வருகின்றனர்.

(எ-202)(30)

## வன்னியில் சிறப்புற நடைபெற்ற அடிக்கல் நடும் வைபவங்கள்

பரந்தன்,ஏப்.15

வடமாகாண பனை, தென்னை அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களின் பேரிணையத்திற்கான அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த 3ஆம் திகதி கிளிநொச்சி, 155ஆம் கட்டைப் பகுதியில் பேரிணையத் தலைவர் க.புவனேந்திரம் தலைமையில் நடைபெற்றது.

அடிக்கல்லை கிளிநொச்சி மாவட்ட தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் விஜிதரன், கிளிநொச்சி, முல்லைத்தீவு கிராமிய வங்கிகளின் சமாசப் பொதுமுகாமையாளர் கணபதிப்பிள்ளை, தமிழீழ நிர்வாக சேவைகூட்டுறவு விடய இணைப்பாளர் க.மயூரன், பேரிணையத் தலைவர் க.புவனேந்திரம் ஆகியோர் அடிக்கற்களை நட்டுவைத்தனர்.

(எ-352-202)

***

பரந்தன்,ஏப்.15

முல்லைத்தீவின் கள்ளப்பாடு வடக்கு கிராமத்தில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் முதற்கட்டமாக 25 வீடுகளை அமைக்கவுள்ளது.

இதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த 3ஆம் திகதி கழகத்தின் நீர், சுகாதாரப் பகுதி இணைப்பாளர் அ.நாகேந்திரம் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் வணபிதா.எ.ஜெயக்குமார், வணபிதா.எஸ்.ஈ.ஆர்னல்ட், வணபிதா. பொ.அனுகூலர், வணபிதா.ஜே.தேவஅருட்செல்வம் ஆகியோர் அடிக்கற்களை நட்டுவைத்தனர்.

கழகத்தின் திட்டமிடல் பணிப்பாளர் லோறன்ஸ் கிறிஸ்ரி, கழகத்தின் சுனாமி மீள்கட்டமைப்புத் திட்டப் பணிப்பாளர் வின் சன், தென்னிந்தியத் திருச்சபையின் திட்ட மேலாளர் ஜி.ராஜ்நாயகம் உட்படப் பலர் இதில் கலந்துகொண்டனர்.

தென்னிந்தியத் திருச்சபையின் நிதியுதவியுடன் கள்ளப்பாடு வடக்குக் கிராமத்தில் 100வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

(எ-352-202)

***

புதுக்குடியிருப்பு,ஏப்.15

அளம்பில் கிராமத்தில் முன்பள்ளி ஒன்றிற்கான அடிக்கல்நடும் நிகழ்வு கடந்த 2ஆம் திகதி நடைபெற்றது. அளம்பில் பங்குத் தந்தை அருட்திரு.யூட் அமலதாஸ் அடிகளார் அடிக்கல்லை நட்டுவைத்தார்.

(எ-353-202)

## கிளிநொச்சி - முழங்காவில் பாதையில் சிறிய பஸ்கள் சேவையில்; மக்கள் அவதி!

பரந்தன்,ஏப்.15

மக்கள் கூடுதலாகப் பயணம் செய்யும் பாதைகளில் சிறியரக பஸ்களைப் பயன்படுத்துவதால் பயணிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.

கிளிநொச்சி டிப்போ வீதியூடாகக் கோணாவில் - ஸ்கந்தபுரம் - வன்னேரிக்குளம் - முழங்காவில் பகுதிகளுக்கான பஸ் சேவைகளில் சிறியரக பஸ்கள் பயன்படுத்தப்படுகின்றன.

நீண்டநேரம் காத்திருந்து பயணம் செய்வதாலும் நீண்ட தூரம் பயணம் செய்வதாலும் சிறியரக பஸ்களில் பயணம் செய்வதில் மக்கள் சிரமத்தை அனுபவிக்கின்றனர்.

அதிக பயணிகள் ஏறமுடியாமல் திரும்பிச் செல்லும் நிலையும் உருவாகின்றது.

சம்பந்தப்பட்டவர்கள் இந்த விடயத்தைக் கவனத்தில் எடுத்துச்செயற்படவேண்டும் எனப் பயணிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

(3-352-202)(24)




## இளையோர் கூடல் நிகழ்வுகள்

பரந்தன்,ஏப்.15

புலிகளின் குரல் நிறுவனம் பாடசாலைகள் மட்டத்தில் இளையோர் கூடல் நிகழ்வுகளை நடத்திவருகின்றது.

முதலாவது நிகழ்வு கடந்த 7ஆம் திகதி கிளிநொச்சி பாரதி வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் நிறுவனத்தின் நிர்வாக இணைப்பாளர் இ.இராசேஸ்வரன், கலைத்துறை மேலாளர் கபிலன், தமிழீழ வானொலி இணைப்பாளர் திருமாறன், இசை அமைப்பாளர் சிறிகுகன், வானொலிக் கலைஞர் ஏழிசை, அறிவிப்பாளர் கொற்றவை, தொழில்நுட்பவியலாளர் சதீஸ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

- நிகழ்வில் வானொலி நிகழ்ச்சிகள் பற்றிய விளக்கவுரைகளும் மாணவர் களுக்கிடையிலான போட்டிகளும் இடம் பெற்றன.

(3-352-202)(24)

## ஐ.நாவின் உதவித் திட்டத்தின்கீழ் முல்லையில் அபிவிருத்திப் பணிகள்

புதுக்குடியிருப்பு,ஏப்.15

ஐ.நா. அபிவிருத்தித் திட்ட நிறுவனத்தின் ஒருங்கிணைக்கப்பட்ட மீளமைப்பு மற்றும் மீள் ஒருங்கிணைப்புத் திட்டத்தின் கீழ் முல்லைத்தீவு மாவட்டத்தில் சில கிராமங்கள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

மாவட்டத்தின் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் தலா ஒரு கிராமம் தெரிவு செய்யப்பட்டு அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

கிராமங்களில் பயனாளிகளைத் தெரிவு செய்து அவர்களுக்கான வீடுகளை அமைத்தல், வீதி திருத்தம், விவசாயக் கிணறுகள், பொதுநோக்கு மண்டபங்கள், பாடசாலைக் கட்டடங்கள் போன்றவற்றை அமைத்தல், வாழ்வாதார மேம்பாட்டுத் திட்டம் போன்ற அபிவிருத்தித் திட்டங்கள் செயற்படுத்தப்படவுள்ளன.

புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் பிரிவில் விசுவமடு வள்ளுவர்புரம் கிராமமும் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் முறிப்புக்கிராமமும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் கர்டிப்புலவு கிராமமும் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் கோட்டைகட்டியகுளம் கிராமமும் பாண்டியன்குளம் பிரதேச செயலர் பிரிவில் அம்பாள்புரம் கிராமமும் அபிவிருத்திப் பணிகளுக்காகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

சுமார் 120 நிரந்தர வீடுகளும் 16 கிணறுகள் அமைத்தல் மற்றும் வீதி திருத்தம், பாடசாலைக் கட் டடம் அமைத்தல், மலசலகூடம் அமைத்தல் போன்ற பணிகளும் மேற்கொள்ளப்படவுள்ளன.

(3-353-202)(24)

## பற் சிகிச்சையும் அறிவூட்டல் நிகழ்வும் பல்வேறு இடங்களில் நடைபெற்றன

கிளிநொச்சி,ஏப்.15

தமிழீழ சுகாதார சேவைகளின் நடமாடும் பற்சிகிச்சைப் பிரிவினர் பல்வேறு இடங்களிலும் பற்சிகிச்சை மற்றும் அறிவூட்டல் நிகழ்வுகளை நடத்திவருகின்றனர்.

கடந்த 3ஆம் திகதி முல்லைத்தீவு அரசினர் வைத்தியசாலையில் பற்சிகிச்சை இடம்பெற்றது. இதில் 50 இற்கு மேற்பட்ட மக்கள் கலந்து பயன்பெற்றனர்.

மல்லாவிப் பிரதேசத்தில் அனிஞ்சியன்குளம் அ.த.க. பாடசாலை, மல்லாவி வைத்தியசாலை ஆகிய இடங்களில் கடந்த 4ஆம் திகதி பற்சிகிச்சைகள் நடைபெற்றன.

கடந்த 6ஆம் திகதி பளை அறுத்திபுரம் றோ.க. வித்தியாலயத்தில் பற்சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. இதில் ஆசிரியர்கள், மாணவர்கள் என 65 இற்கு மேற்பட்டோர் கலந்து பயன்பெற்றனர்.

வள்ளிபுனம் பாரதி சிறுவர் பராமரிப்பு இல்லத்தில் கடந்த 8ஆம் திகதி இச்சிகிச்சை நடைபெற்றது. இதில் 150இற்கு மேற்பட்ட சிறார்களுக்கு சிகிச்சைகள் வழங்கப்பட்டன.

இதேவேளை, சுகாதார சேவையினரால் புளியங்குளம் சோதனை நிலையத்தில் ஆயப் பகுதிப் பணியாளர்களால் பொது மருத்துவ சேவையொன்றும் நடத்தப்பட்டுள்ளது.

(3-202)(24)

## அக்கராயன் மகாவித்தியாலயத்தை தரம் உயர்த்துமாறு கோரிக்கை

அக்கராயன்,ஏப்.15

கிளிநொச்சி அக்கராயன் மகாவித்தியாலயத்தைத் தரமுயர்த்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பாடசாலையின் அபிவிருத்திச் சங்கம் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளரிடம் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளது.

அண்மையில் பாடசாலையில் நடைபெற்ற அபிவிருத்திச் சங்கக் கூட்டத்தில் இது தொடர்பான தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அக்கராயன் மகாவித்தியாலயம் ஒரு '1சி' பாடசாலையாகும். ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்புகளில் கலை, வர்த்தக பாடங்கள் மட்டுமே இங்கு கற்பிக்கப்படுகின்றன.

இப்பாடசாலையினை '1ஏபி' பாடசாலையாகத் தரமுயர்த்தி ஜி.சீ.ஈ. உயர்தரத்தில் கணித, விஞ்ஞான வகுப்புகளை ஆரம்பிக்க அனுமதி வழங்குமாறு கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளரிடம் கோருவது என்று பாடசாலையின் அபிவிருத்திச் சங்கக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

அக்கராயன் மகாவித்தியாலயத்தில் தற்போது ஆயிரம் மாணவர்கள் கல்வி பயில்வதுடன் 36 ஆசிரியர்கள் கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபட்டு வருகின்றனர் என்றும் - கூறப்பட்டது.

(எ-420)(24)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

*சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் கல்வித்திட்டப் பணிப்பாளர்*

**திரு. விநாயகமூர்த்தி ஸ்ரீ சக்திவேல்** *அவர்களின் அன்புத்தாய்*

### திருமதி புனிதவதி விநாயகமூர்த்தி

*அவர்கள் காலமான செய்தி கேட்டு துயருறுகின்றோம். அவரின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து, அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

சைவ வித்தியா விருத்திச் சங்கம்,
கலட்டிலை வீதி, திருநெல்வேலி.

பணிப்பாளர்சபை உறுப்பினர்கள்,
பணியாளர்கள், இல்லச்சிறார்கள்.

[சி.48954] [39-45-15]

## மணமகள் தேவை

லண்டனில் வசிக்கும் 7 இல் செவ்வாய், வயது *30* ஆணுக்கு லண்டன் விசா வசதியுள்ள மணமகள் தேவை.

*தொடர்பு:* **செ.இரத்தினம்**
(ஓய்வு பெற்ற ஆசிரியர்)
விக்கினேஸ்வரா வீதி,
அச்சுவேலி தெற்கு,அச்சுவேலி.
*0777592570.*

(சி.48961) [39-45-15]

## துயர் பகிர்கின்றோம்

*10.04.2006 ஆம் திகதி அன்று அகால மரணமடைந்த HUDEC நிறுவன ஊழியர்களான*

**சண்முகரட்ணம் கந்தபத்மநாபன், செல்வேந்திரா பிரதீப்குமார்**

*ஆகியோரின் திடீர் மறைவினால் து யருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.*

*லங்கா மாதா மடம்,*
*அச்சுவேலி.*

குழந்தையேசு முன்பள்ளி,
ஆசிரியர்கள், மாணவர்கள்,அருட்சகோதரிகள்.

## மரண அறிவித்தல்கள்



### திருமதி சுப்பிரமணியம் சிவகாமிப்பிள்ளை

செருக்கைப்புலம், தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் அரசடி, கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சிவகாமிப்பிள்ளை கடந்த (13.04.2006) வியாழக்கிழமை கொக்குவிலில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர் களான செல்லையா-பொன்னு தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சுப்பிரமணியம், செல்வராசா, பார்வதிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும் சுந்தரலிங்கம் (கோண்டாவில்), கமலாதேவி (கொக்குவில்), அமிர்தலிங்கம் (சுவிஸ்), நகுலாதேவி (இணுவில்), கணேசலிங்கம் (சுவிஸ்), கனகமணி (கோண்டாவில்), முத்துலிங்கம் (சுவிஸ்), அமரர் நேசலிங்கம் ஆகியோரின் அன்புத் தாயும் கமலாதேவி, இராசரத்தினம், இராஜேஸ்வரி, புஸ்பநாதன் (செல்வம்), கலாநிதி, யோகராஜா, சாந்தினி, நிர்மலாதேவி ஆகியோரின் பாசமிகு மாமியும் நிரோஜினி, நிசாந்தன், ராஜ்மோகன் (லண்டன்), சுதர்சன் (லண்டன்), சுஜிதா, கோகுலன், ஜெயனி, ஜலந்தா, கீர்த்திகா, சுரேந்திரன், அஜித் (சுவிஸ்), கரிஸ் (சுவிஸ்), தீபிகா (சுவிஸ்), யுதர்சினி, வித்ஜாதீபன், லோஜீபன், நிருபன் (சுவிஸ்), மயூரன் (சுவிஸ்), நிஜந்தன் (சுவிஸ்), நிதுர்ஜா (சுவிஸ்), நிருபா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (15.04.2006) சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அரசடி கொக்குவில் மேற்கிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காக்கைதீவு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அரசடி,*
*கொக்குவில் மேற்கு,*
*கொக்குவில்.*

*தகவல்:*
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(49475) (39-15-45)



### நாகலிங்கம் கந்தையா

கச்சேரி- நல்லூரை பிறப்பிடமாகவும் 40, வைரவர் கோயில், அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் கந்தையா 13.04.2006 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் -செல்லாச்சி தம்பதியரின் மூத்த புதல்வனும் பாக்கியத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற மயில்வாகனம் (மா.ந.ச.முன்னாள் ஊழியர்), சதாசிவம் (இ.மி.ச.), குணரட்ணராஜா (குணம்), புஸ்பராணி (சுவிஸ்), வசந்தகுமாரி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ராசம்மா, பொன்னுத்துரை, அன்னபூரணம் ஆகியோரின் சகோதரனும் றுக்குமணி, செல்வராணி, ராஜேஸ்வரி, ராகுலன் (சுவிஸ்), சிவகாந்தன் (சுவிஸ்) ஆகியோரின் மாமனும் சிவறூபன், சுரேஸ்குமார், றொனிச்செல்வி, லதாஜினி, நிதர்சன், சுதர்சினி, தர்சினி, லவசுதன், லவசுதாஜினி, லவகுஷா, லவன்ராஜ், கார்த்திகா, றொபினா, மிதுனா, அபிராமி, பால்க்கவி, ஷாமது ஆகியோரின் பேரனும் ஆர்த்திகா, கபிலன், ரெக்சினி, மருநிதன், மருதிகா, டகிஷ் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.04.2006) சனிக்கிழமை 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*40, வைரவர் கோயில் வீதி,*
*அரியாலை,யாழ்ப்பாணம்.*

*தகவல்:*
குடும்பத்தினர்.

(49476) (39-15-45)

*324, Palaly Road, Jaffna.*

தகவல் தொழில் நுட்பத்தில் நீங்களும்

MOBILE NET MCS COMPUTER SERVICES

**BIT**



## கொழும்பு பல்கலைக்கழகத்தின்
வெளிவாரிப் பட்டப்படிப்பு
## விஞ்ஞானமாணி-தகவல் தொழில்நுட்பம்

- கற்கை நெறிகள் MCS நிறுவனத்தில் வார, வாரஇறுதி பிரிவுகளாக நடைபெறும்.
- பரீட்சைகள் கொழும்பு பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும்.
- விண்ணப்பிப்போர் O/Lஇல் கணிதபாடத்தில் தேகைமையுடன் A/Lஇல் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
  *(O/Lஇல் C தகைமை பெறாதோர் A/Lஇல் பின்வரும் பாடங்களில் ஏதேனும் ஒன்றில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும். A/L-Bio, A/L-Maths, Economics, Logic, Commerce, Accounts, Business Statistics, Geography)
  *A/L 2006 பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களும் விண்ணப்பிக்கலாம், ஆயினும் பெறுபேறுகளின்போது மேற்குறித்த தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- கற்கை நெறிக்கான மாணவர்கள் தெரிவுப்பரீட்சை ஒன்றின் மூலமே தெரிவு செய்யப்படுவர்.
- தெரிவுப் பரீட்சைக்கான வழிகாட்டல் வகுப்புக்கள் பிரிவு I. 15 ஏப்ரல் 12 மணிக்கு MCS நிறுவனத்தில் ஆரம்பமாகின்றது.
- கற்கை நெறியில் முதல் ஆண்டைப் பூர்த்தி செய்யும் மாணவர்களுக்கு கொழும்பு பல்கலைக்கழகத்தின் சான்றிதழ் வழங்கப்படும். (Certificate in Information Technology)
- கற்கைநெறி முழுவதனையும் பூர்த்தி செய்வதன் மூலம் நீங்களும் ஒரு கணனிப் பட்டதாரியாகலாம்.
- எந்தவொரு பல்கலைக்கழக மாணவர்களும் **BIT** கற்கைநெறியைப் பயில்வதற்கு பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.
- **BIT** கற்கை நெறியினை பயிலும் மாணவர்களுக்கு சுவீடன் பல்கலைக்கழகத்தில் **Diploma** கற்கைநெறியினை பயிலும் சந்தர்ப்பம்.
- **BIT** கற்கை நெறியினை பயிலும் மாணவர்களுக்கு MCS நிறுவனத்தின் **Diploma in Information Techonology** சான்றிதழ் பெறும் சந்தர்ப்பம்.
- **Microsoft** நிறுவனத்தின் **Computer Engineer** கற்கை நெறிக்கு 50% சலுகைக் கட்டணம்.

**விண்ணப்ப முடிவுத் திகதி : 30-04-2006**
**விண்ணப்பப் படிவங்களிற்கும் மேலதிக விபரங்களிற்கும், நேரில் MCS, 324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.**

Supported by United Nation Development Project/Jaffna Rehabilitation & Resettlement Project

## சித்திரப் பயிற்சி

யாழ்ப்பாணம்,ஏப்.15

ஐ.ஏ.ரி. சித்திரப் பயிற்சி நிறுவனம் மாணவர்களின் நலன் கருதி விடுமுறைக் காலத்தில் இலவச சித்திரப் பயிற்சி பட்டறையை நடத்தவுள்ளது.

இப்பட்டறைஎதிர் வரும் 17 ஆம் திகதி தொடக்கம் 3 தினங்கள் காலை 9 மணி முதல் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இதில் தரம் 7 இற்கு மேற்பட்ட மாணவர்கள் வரைதலுக்குரிய உபகரணங்களுடன் வருகை தந்து பயன்பெற முடியும் எனத் தெரிவிக்கப் பட்டது.(204) (39)

## நாடகங்கள் மேடையேற்றம்

தென்மராட்சி,ஏப்.15

சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் 'வளரும் பயிருக்கு முளையில் உதவும் சிறுவர் அரங்கு' நிகழ்வு கடந்த புதனன்று நடைபெற்றது.

தென்மராட்சி கல்வி வலய ஆரம்பப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் த.ஸ்ரீஸ்கந்தராசா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வினை செயற்திறன் அரங்கு இயக்கத்தினர் ஏற்பாடு செய்திருந்தனர்.

நிகழ்வில் வலயக் கல்விப் பணிப்பாளர்திருமதி அ.வேதநாயகம், கலாநிதி குழந்தை ம.சண்முகலிங்கம், தே.தேவானந்த் ஆகியோர் உரையாற்றினர்.

நிகழ்வில்இரண்டு நாடகங்களும் அரங்கேற்றப்பட்டன.

(எ-117)

உ
*சிவமயம்*

## திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் மங்கள கரமான "விய" வருடம் சித்திரைத்திங்கள் 2ஆம் நாள் சனிக்கிழமை (15.04.2006) முற்பகல் 11.50 மணிமுதல் 1.20 மணிவரையுள்ள துதியைத் திதியும் விசாக நட்சத்திரமும் சித்த யோகமும் கூடிய சுபமுகூர்த்த சுபவேளையில்,



திரு.திருமதி சின்னத்தம்பி
தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரன்
திருநிறை செல்வன்
**ஜெனீரதன்**
அவர்களுக்கும்

திரு.திருமதி ஐயாத்துரை.
தம்பதிகளின் கனிஷ்ட புத்திரி
திருநிறை செல்வி
**உதயகலா**
அவர்களுக்கும்

திருவருள் துணை கொண்டு திருமணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து தொடர்ந்து மணமகள் இல்லத்தில் நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

திருமண வைபவ மண்டபம்:
*12, Bis rue Saint -Jean- 75017 Paris*
*(M °:La Fourche Ligne 13)*

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:

*திரு.திருமதி சின்னத்தம்பி*
*& பிள்ளைகள்*
*கராச் வீதி, சண்டிலிப்பாய்.*
*(இலங்கை)*

*திரு. ஐயாத்துரை &*
*பிள்ளைகள்*
*மன்னார் வீதி, வேப்பம் குளம்.*
*வவுனியா (இலங்கை)*

இருவீட்டார் அழைப்பு

*(49174)(51)*

MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS

ஐ.நா அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அரச நிறுவனங்களை கணனி மயப்படுத்துவதில் பெரும்பங்காற்றிய எமது நிறுவனத்தினர் விசேட கணனிப் பயிற்சித் திட்டம் ஒன்றை முன் வைத்துள்ளார்கள்.

**MCS**

பதிவுகள் 18/04/2006 இற்கு முன் நேரில்

## இலவசக்கணனிப்பயிற்சி

324, பலாலிவீதி, யாழ்ப்பாணம் (ஆலடிச்சந்தி அருகே, மேல்மாடியில்)

Supported By UNDP/JRRP Supported By UNDP/JRRP Supported By UNDP/JRRP

JAFFNA COLLEGE CEYLON

## யாழ்ப்பாணக் கல்லூரியினரால் நடத்தப்படும்
## கிறிஸ்து உயிர்ப்பு விழா

**"உயிரோடு இருப்பவரைக் கல்லறையில் தேடுவதேன்"**
(இசை, நாடக நிகழ்வு)

இடம்: *யாழ்ப்பாணக் கல்லூரி*
காலம்: *16.04.2006 பி.ப. 4.30 மணி.*

உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர்,
யாழ்ப்பாணக் கல்லூரி.

(49069)(39-45-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜ்குமார் இறுதி ஊர்வலத்தில் பெரும் வன்முறை பொலிஸார் துப்பாக்கிச் சூடு! வாகனங்கள் எரிப்பு!!

பெங்களூர்,ஏப்.15

மறைந்த நடிகர் ராஜ்குமாரின் இறுதி ஊர்வலத்தின் போது வன்முறை ஏற்பட்டதால் அதை அடக்கப் பொலீஸார் இருமுறை துப்பாக்கிச் சூடு நடத்தினர். அதில் 4 பேர் உயிரிழந்தனர்.



கன்னடத் திரை உலகின் சூப்பர் ஸ்டாராகத் திகழ்ந்த ராஜ்குமார் பெங்களூரில் புதன்கிழமை காலமானார். அவரது உடல் பொது மக்கள் பார்வைக்காக பெங்களூரின் மையப் பகுதியில் உள்ள கண்டீரவா விளையாட்டு மைதானத்தில் வியாழக்கிழமை வைக்கப்பட்டிருந்தது.

நேரில் அஞ்சலி செலுத்த மாநிலம் முழுவதிலிருந்தும் ஆயிரக்கணக்கான மக்கள் வந்திருந்தனர்.

ராஜ்குமார் உடலுக்கு அஞ்சலி செலுத்துவதில், ஒருவரை ஒருவர் முண்டியடித்தபடிச் சென்றனர். அவர்களை கட்டுப்படுத்த பொலீஸார் மேற்கொண்ட முயற்சி பலனளிக்கவில்லை.

பொலீஸாரை நோக்கி தண்ணீர் போத்தல்கள், கற்களை வீசினர். வாகனங்களை அடித்து நொறுக்கித் தீ வைத்தனர்.

அப்போது அந்த வழியாக வந்த 4 அரசு பஸ்களும் தீவைத்து எரிக்கப்பட்டன. மேலும் 10 இற்கும் மேற்பட்ட தனியார் வாகனங்களும் எரிக்கப்பட்டன.

பிற்பகல் ஒரு மணியளவில் கண்டீரவா மைதானத்திலிருந்து ராஜ்குமார் உடல் அடக்கத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டது.

அந்த சமயத்தில் மைதானத்தின் நாலாபுறமும் வன்முறை வெடித்தது. அந்தப் பகுதியிலிருந்த கடைகள், தியேட்டர் அடித்து நொருக்கப்பட்டன. பொலீஸார் மீதும் கற்கள் வீசப்பட்டன. பலமுறை பொலீஸார் தடியடி நடத்தியும் கண்ணீர்ப்புகை குண்டுகளை வெடித்தும் பலனில்லை. சித்தலிங்கய்யா சேர்க்கிளில் ஏற்பட்ட வன்முறை தீவைப்பை ஒடுக்க பொலீஸார் துப்பாக்கியால் சுட்டனர். இதில் ஒருவர் உயிரிழந்தார். கல்வீச்சில் 20 பொலீஸார் உட்பட 30 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

ராஜ்குமார் உடல் எடுத்துச் செல்லப்பட்ட வழிநெடுகலும் வன்முறை தலைவிரித்தாடியது. மொத்தம் 100 இற்கும் மேற்பட்ட வாகனங்கள் தீவைத்து எரிக்கப்பட்டன.

### 90 குண்டுகள் முழங்க உடல் அடக்கம்

இதேவேளை -


90 குண்டுகள் முழங்க அரச மரியாதையுடன் லட்சக்கணக்கான ரசிகர்கள் கண்ணீர் அஞ்சலி செலுத்த நடிகர் ராஜ்குமார் உட்ல் அடக்கம் செய்யப்பட்டது.

அவரது உடல் பொதுமக்கள் அஞ்சலிக்காக பெங்களூர் மத்திய பகுதியில் உள்ள கண்டீரவா விளையாட்டு மைதானத்தில் புதன்கிழமை இரவு வைக்கப்பட்டது. கண்ணாடிப் பெட்டியில் வைக்கப்பட்டிருந்த ராஜ்குமார் உடலுக்கு வியாழக்கிழமை அதிகாலை முதலே அஞ்சலி செலுத்த ரசிகர்கள் திரண்ட்னர்.

அவர்களை ஒழுங்குபடுத்தி அஞ்சலி செலுத்த பொலீஸார் ஏற்பாடு செய்திருந்தனர். ஆண்களும், பெண்களுமாக லட்சக்கணக்கான பேர் வரிசையாக வந்து ராஜ்குமார் உடலுக்கு கண்ணீர் அஞ்சலி செலுத்தினர்.

கண்டீரவா ஸ்ரூடியோவில் ராஜ்குமார் உடலுக்கு மூத்த மகன் சிவராஜ்குமார் இறுதிச் சடங்குகள் செய்தார். அப்போது மற்ற மகன்கள் ராகவேந்திர ராஜ்குமார் மற்றும் புனித்ராஜ்குமார், மனைவி பார்வதம்மா ஆகியோர் உடனிருந்தனர்.

முக்கிய பிரமுகர்கள் பலர் இறுதி அஞ்சலி செலுத்தினர். இதைத் தொடர்ந்து 90 குண்டுகள் முழங்க முழ அரச மரியாதையுடன் ராஜ்குமார் உடல் மாலை 5.45 மணிக்கு அடக்கம் செய்யப்பட்டது.




அப்போது அங்கு கூடியிருந்த ஆயிரக்கணக்கான ஆண்களும் பெண்களும் ராஜ்குமாருக்கு கண்ணீர் அஞ்சலி செலுத்தினர். (ஐ-202)

# 47 நாள்கள் விசைப்படகுகளில் மீன் பிடிக்க தமிழக அரசு தடை

## மீன் இனப்பெருக்க காலத்தை ஒட்டி இந்தக் கட்டுப்பாடு

ராமேஸ்வரம்,ஏப்.15

தமிழகம் முழுவதும் விசைப் படகுகள் கடலில் மீன்பிடிக்க விதிக்கப்பட்டுள்ள அரசின் தடை இன்று முதல் அமுலுக்கு வருவதால் மீன் விலை பன்மடங்கு உயரும் நிலை ஏற்பட்டுள்ளது. மீன்வளத்தை பெருக்குவதற்காக மீன்இனப்பெருக்க காலமான ஏப். 15 முதல் மே. 31 வரை 47நாள்கள் கடல் பகுதியில் விசைப்படகுகளில் மீனவர்கள் மீன்படிக்க தமிழக அரசு தடை விதித்துள்ளது. இதையொட்டி ராமேஸ்வரம், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, சென்னை, கடலூர், கன்னியாகுமரி உட்பட முக்கிய துறைமுகங்களை மையமாகக் கொண்டு மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வரும் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விசைப் படகுகள் இன்று முதல் மீன்பிடிக்க கடலுக்கு செல்லாது.



கடலில் விசைப்படகுகள் மீன் பிடிக்க இன்று முதல் தடை உத்தரவு அமுலுக்கு வருவதால் ராமேஸ்வரம் துறைமுகத்தில் ஏராளமான படகுகள் கரையில் நிறுத்திவைக்கப்பட்டுள்ளன.

படகுகளுக்கு வழங்கப்படும் மீன்பிடி டோக்கன் நேற்று மாலை முதல் நிறுத்தப்பட்டது. இதனால் விசைப்படகுகள் கரையில் நிறுத்தப்பட்டுள்ளன. இத்தடையால் தமிழகம் முழுவதும் விசைப்படகுகளில் வேலை பார்த்து வந்த மீனவர்கள், படகு தள்ளும், மீன்அள்ளும் தொழிலாளர்கள், பெண்கள் என பல தரப்பட்டவர்கள் வருவாய் இழந்து மாற்றுத்தொழில் இல்லாமல் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆயிரக்கணக்கான மீனவர்கள் தங்களது சொந்த ஊர்களுக்கு திரும்புகின்றனர். இறால், நண்டு மற்றும் மீன் ஏற்றுமதித் தொழிலும் பாதிக்கும் நிலை உருவாகியுள்ளது. இந்த 45 நாள்களும் நாட்டுப்படகு, பாய்ச்சுவலை மற்றும் கரைவலை மூலம் மீனவர்களால் பிடிக்கப்படும் மீன்கள் மட்டுமே விற்பனைக்கு வரும் என்பதால் மீன்விலை பன்மடங்கு அதிகரிக்கும். வருவாய் இழந்து தவிக்கும் மீனவர்களின் குடும்பங்களுக்கு அரசு இடைக்கால நிவாரணம் வழங்க வேண்டும் என மீனவ சங்கத் தலைவர்கள் அரசைக் கேட்டுள்ளனர். (ஐ-202)

உலக அரங்கில்

# இந்தியக் கடற்படைக்கு விமானம் விற்க அமெரிக்காவின் போயிங் தீவிர முயற்சி

புதுடில்லி,ஏப்.15

இந்தியக் கடற்படைக்கு 'பி-8 ஏ' ரக விமானங்களை விற்க அமெரிக்க நாட்டின் போயிங் விமான நிறுவனம் தீவிர முயற்சி எடுத்து வருகிறது. இதற்காக இந்தியக் கடற்படையை அது நேரடியாக அணுகியிருக்கிறது.

நீண்ட தூரம் பறந்து செல்லக்கூடிய இந்த விமானம் மிக நவீனமானது.அமெரிக்கக் கடற்படைக்கே 2009 ஆம் ஆண்டுதான் தரப்படவிருக்கிறது. கடற்பரப்பைக் கண்காணிக்கவும் எதிரிகளின் நீர் மூழ்கிக்கப்பல்களை அடையாளம் காணவும் பின் தொடர்ந்து சென்று அழிக்கவும் வல்லது.விமானப்படையுடனும் கடற்படையுடனும் எளிதில் இதை இணைத்துப் பயன்படுத்தலாம்.

தாங்கள் தரும் அம்சங்கள் மட்டுமல்ல. இந்தியக் கடற்படைக்குத் தேவைப்படும் பிற வசதிகளையும் விமானத்தில் சேர்க்கத் தயார் என்று போயிங் நிறுவனம் தெரிவித்துள்ளது. அது மட்டுமல்ல, இந்த வகை போயிங் விமான தயாரிப்பிலும், பராமரிப்பிலும் இந்தியாவைக் கூட்டாளியாகச் சேர்த்துக் கொள்ளவும் தகவல்களைப் பரிமாறிக் கொள்ளவும் தயார் என்றும் முன்வந்துள்ளது. (ஐ-202)

# நேபாளத்தில் பொதுத்தேர்தல்: மன்னர் அறிவிப்பு

காத்மண்டு,ஏப் 15

நாட்டில் பொதுத்தேர்தல் நடத்தப்படும் என்று நேபாள மன்னர் ஞானேந்திரர் வியாழக் கிழமை அறிவித்தார்.

மன்னரின் நேரடி ஆட்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்து வந்த முக்கிய அரசியல் கட்சிகள், நாட்டில் ஜனநாயக ஆட்சியை மீண்டும் கொண்டுவர வேண்டும் என்று கோரி கடந்த 8 நாள்களாகப் போராடிவந்தன.

அதற்குப் பணிந்த மன்னர், நாட்டில் அமைதி ஏற்பட வசதியாக பொதுத்தேர்தலுக்கு உத்தரவிடப்படும் என்று நேபாள புத்தாண்டு தினத்தையொட்டி பேசுகையில் புத்தாண்டுப் பரிசாக இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

பல கட்சி ஜனநாயக முறையை செயற்படுத்த சிறந்தவழி பொதுத்தேர்தல் ஆகும். எல்லா பிரச்சினைகளையுமே பேச்சு மூலம் தீர்த்துக்கொள்ளலாம். பல கட்சி ஜனநாயக நடைமுறை சிறப்பாக நடைபெற அனைத்து கட்சிகளுக்கும் பொறுப்பு உள்ளது என்றார் மன்னர். (ஐ)

# ஆப்பான் தலைநகரில் ராக்கெட் குண்டுவீச்சு!

புதுடில்லி,ஏப்.15

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூல் மீது தலிபான் ஆதரவுப்படைகள் ரொக்கெட் குண்டு வீசித் தாக்குதல் நடத்தினர்.

அதிபர் ஹமீத்கர்சாய் குடியிருக்கும் அரசு இல்லத்தின் மீது குறிவைத்து புதன்கிழமை இரவு இத்தாக்குதல் நடந்தது. அந்த ரொக்கெட் குண்டு அருகில் இருந்த பாதுகாப்பு அமைச்சு வளாகத்தில் விழுந்தது. எனவே, சேதம் அதிகம் இல்லை.

அரச எதிர்ப்பாளர்கள் தங்களுடைய இருப்பை அரசுக்கு உணர்த்தவே தொடர்ந்து இப்படி தாக்கிவருகின்றனர். (ஐ-202)

# தேர்தல் என்றால் இவருக்கு அல்வா!

கின்னஸ் புத்தகத்தில் தனது பெயர் இடம் பெறவேண்டும் என்பதற்காக தொடர்ந்து தேர்தலில் போட்டியிட்டுவரும் 'தேர்தல் மன்னன்' பத்மராஜன், 75ஆவது முறையாக, மேட்டூர் சட்டப்பேரவைத் தொகுதியில் போட்டியிட வியாழக்கிழமை மனுதாக்கல் செய்தார்.

இதுவரை 74 தொகுதிகளில் இவர் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்துள்ளார். சில தொகுதிகளில் அடுத்தடுத்த தேர்தல்களில் தொடர்ந்து மனு செய்துள்ளார். மேட்டூர் அடுத்த குஞ்சாண்டியூரைச் சேர்ந்தவர் கே.பத்மராஜன் (வயது-45) தந்தை கே.குஞ்சம்புநாயர், தாய் ஸ்ரீதேவிநாயர், மனைவி பி.ஸ்ரீஜா நம்பியார், மகன் ஸ்ரீஜேஸ்வராஜராஜன் நம்பியார்.

குஞ்சாண்டியூரில் பழைய லொறி பஸ் டயர்களைப் புதுப்பிக்கும் தொழிற்சாலை நடத்திவருகிறார். 8 ஆம் வகுப்பு வரை படித்துள்ளார்.

இவர் 75ஆவது தொகுதியாக மேட்டூர் சட்டப்பேரவைத் தொகுதி வேட்பாளராக மனுத் தாக்கல் செய்துள்ளார். கின்னஸ் சாதனை படைப்பதற்காக 1988 ஆம் ஆண்டுத் தேர்தலில் மனுத் தாக்கல் செய்யும் முயற்சியை மேற்கொண்டார்.

1996 இல் கேரளம், கர்னாடக, ஆந்திரம், தமிழகம், புதுவை ஆகிய ஐந்து மாநிலங்களிலும் நடந்த மக்களவைத் தேர்தலில்

சட்டப்பேரவைத் தேர்தல் 2006

போட்டியிட ஒரே நேரத்தில் வேட்புமனு தாக்கல் செய்தார். மேலும் பர்கூர், ஆத்தூர், மேட்டூர் சட்டப்பேரவைத் தேர்தல்களிலும் மனுத்தாக்கல் செய்தார்.

நந்தியால் தொகுதியில் முன்னாள் பிரதமர் நரசிம்மராவை எதிர்த்து வேட்புமனு தாக்கல் செய்யத் சென்றபோது, சிலரால் கடத்தப்பட்டார். பின்னர் விடுவிக்கப்பட்டார். குடியரசுத் தலைவர் தேர்தல், துணை குடியரசுத் தலைவர் தேர்தலுக்கும் வேட்பு மனுத்தாக்கல் செய்துள்ளார். இவர் வியாழக் கிழமை மேட்டூர் சட்டப்பேரவைத் தொகுதியில் போட்டியிட வேட்புமனுத் தாக்கல் செய்தார்.

76ஆவது தொகுதியாக சென்னை சேப்பாக்கம் சட்டப்பேரவைத் தொகுதியில் வேட்பு மனு தாக்கல் செய்ய உள்ளதாகத் தெரிவித்தார்.

சுயேச்சைகளைக் கட்டுப்படுத்த தேர்தல் ஆணையகம் கட்டுப்பணத் தொகையை உயர்த்தியபோதும், இவர் தொடர்ந்து தேர்தலில் போட்டியிட்டுவருகிறார். இப்போது ஒருவர் ஒரே சமயத்தில் இரு தொகுதிகளில் மட்டும் போட்டியிடலாம் என தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. இது இவரது சாதனைக்கு பெரும் சோதனையாக அமைந்துள்ளதாகக் கூறினார்.

சாதனையாளர் புத்தகமான 'லிம்கா' புத்தகத்தில் இவரது பெயர் இடம் பெற்றுள்ளது. மேலும் 'கின்னஸ்' புத்தகத்தில் தனது பெயரைச் சேர்க்குமாறு கோரும் இவரது விண்ணப்பம் ஏற்கப்பட்டு, பரிசீலணையில் உள்ளது. ஒரு தேர்தலின்போது வேட்புமனு தாக்கல் செய்யப் பணம் இல்லாததால் தனது மனைவியின் தாலிக்கொடியை அடகு வைத்து வேட்புமனுத்தாக்கல் செய்தவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

பலர் இவரை கேலி செய்தாலும் அதைப் பொருட்படுத்தாமல் தனது சாதனை முயற்சியைத் தொடர்ந்து வருகிறார். (ஐ-202)

(நன்றி : தினமணி)

# நடிகர் ராஜ்குமாரின் கண்கள் தானம்

பெங்களூர்,ஏப்.15

மறைந்த கன்னட சுப்பர் ஸ்டார் ராஜ்குமாரின் கண்கள் வாலிபர் ஒருவர் உட்பட இருவருக்கு பொருத்தப்பட்டன.கன்னட பட உலகின் சுப்பர் ஸ்டார் ராஜ்குமார் தனது கண்களைத் தானம் செய்வதாக முன்பே அறிவித்திருந்தார். அவரது உறுதி மொழியை ஏற்று அவர் மரணமடைந்ததும் அவருடைய கண்களை டாக்டர்கள் எடுத்துக் கொண்டனர். இந்த நிலையில் ராஜ்குமாரின் இரண்டு கண்கள் 15 வயதுள்ள வாலிபர் ஒருவருக்கும், 55 வயது நபர் ஒருவருக்கும் பொருத்தப்பட்டன. வாலிபருக்கு இரண்டு கண்களும் தெரியாது. நடுத்தர வயது நபருக்கு ஒரு கண் மட்டுமே சேதமடைந்திருந்தது. இதனால் ராஜ்குமாரின் ஒரு கண் நடுத்தர வயது நபருக்கும் மற்றொரு கண் அந்த வாலிபருக்கும் பொருத்தப்பட்டன என்று பெங்களூர் நாராயண நேத்ராலாயா மருத்துவமனை டாக்டர் கே.ப. ஷெட்டி தெரிவித்தார். (ஐ-202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தமிழ்ப்புத்தாண்டை ஒட்டி யாழ். சிறைச்சாலையில் நேற்று விசேட நிகழ்வுகள் இடம்பெற்றன. யாழ். சிறைச்சாலை நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் நடந்த இந்நிகழ்வுகளில் சத்யசாயி பஜனைக் குழுவினர் பக்திப் பாடல்களை இசைப்பதையும் நிகழ்வில் பங்கேற்ற கைதிகளில் ஒருபகுதியினரையும் நிகழ்வின் இறுதியில் புதுவருடச் சிற்றுண்டிகள் வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம்.
(படங்கள்: ஒளியதிரன்)

# பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழக ஏற்பாட்டில் ஒலிப்பேழை அறிமுகவிழா

## யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நாளை நடக்கும்

யாழ்ப்பாணம்,ஏப்.15

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத்தின் இசை நாடகம், சிந்து நடனக்கூத்து ஒலிப்பேழை இறுவட்டு அறிமுகவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி முதல் யாழ். இந்து மகளிர் கல்லூரியின் விசாலாட்சி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் வைத்திய கலாநிதி வை.தியாகராஜா தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவில் யாழ்.மாவட்ட அரச அதிபர் க.கணேஷ் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக பேராசிரியர்களான பொ.பாலசுந்தரம்பிள்ளை, அ.சண்முகதாஸ், க.கந்தசாமி, எஸ்.சிவலிங்கராசா மற்றும் முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடாதிபதி க.தேவராசா, யாழ்.மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கம், கலாநிதி க.குணராசா, யாழ். மாநகர ஆணையாளர் சீ.வீ.கே.சிவஞானம், மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொள்வர்.

கௌரவ விருந்தினர்களாக பிரதேச செயலாளர்கள், மாவட்ட செயலக அதிகாரிகள், வணிகப் பிரமுகர்கள் எனப் பலரும் கலந்து கொள்வர்.

ஒலிப்பேழை அறிமுகத்தைத் தொடர்ந்து இசை நாடக, சிந்துநடைக் கூத்துக் கலைஞர்கள் கௌரவிக்கப்படுவர். கலாபூஷணம் செல்லையா மெற்றாஸ்மயில் நிகழ்வுகளை நெறிப்படுத்துவார்.
(எ) (39)

## ஊர்காவற்றுறை மறை மாவட்டத்தில் இல்ல வழிபாடு

குருநகர்,ஏப்.15

தீவகம் வடக்கு - ஊர்காவற்றுறை மறை மாவட்டத்தில் உள்ள கத்தோலிக்க மக்கள், இல்ல வழிபாடுகளில் தற்போது ஈடுபட்டு வருகிறார்கள்.

கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் ஆரம்பமான இந்த இல்ல வழிபாடு தொடர்ந்தும் நடைபெற்றுவருகின்றது.

ஒவ்வொரு இல்லங்களிலும் புனித செபமாலை அன்னையின் சொரூபம் வைக்கப்பட்டு செபமாலை வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

இந்த வழிபாடுகளில் இப்பகுதி கத்தோலிக்க மக்கள் இணைந்து பங்குபற்றிவருகின்றனர்.
(ஐ-51)

## குருநகரில் இன்று திருவிழிப்புத் திருப்பலி

குருநகர்,ஏப்.15

கிறிஸ்தவ மக்களின் பெரிய சனிக்கிழமையாகிய இன்று இரவு 10.45 மணிக்கு குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் திருவிழிப்புத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

தொடர்ந்து உயிர்ப்பு ஞாயிறு தினமான நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 5:30 மணிக்கு குருநகர் புதுமை மாதாஆலயத்திலும் -

காலை 7 மணிக்கு குருநகர் புனித யாகப்பர் ஆலயத்திலும் உயிர்ப்பு ஞாயிறு திருப்பலிகள் நடைபெறும் என்று குருநகர் புனித யாகப்பர் ஆலயப் பங்குத் தந்தை வண. பிதா ஆர்.எச்.சகாயநாயகம் அடிகளார் தெரிவித்தார்.
(எ-51)



கல்வி மேம்பாட்டுக் கழகத்தின் ஆதரவில் நயினாதீவு குடும்ப முன்பள்ளிப் பாடசாலைகளின் மாணவரிடையே நடத்தப்பட்ட பேச்சுத் திறன்காண் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசில் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதேச இணைப்பாளர் எஸ்.சுதாயினி உரையாற்றுவதையும், பரிசில் வென்ற முன்பள்ளிச் சிறார்களையும் படங்களில் காணலாம்.

## நல்லூர் பிரதேச செயலகம் நடத்திய கலை, இலக்கியப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஏப்.15

நல்லூர் பிரதச செயலாளர் பிரிவில் கலை, இலகியப் பெருவிழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட கலை, இலக்கியப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

போட்டி, மாணவர் பெற்றுக்கொண்ட இடங்கள் பற்றிய விவரம் வருமாறு:-

**கட்டுரை ஆக்கம் (மட்டுப்படுத்தப்பட்டது)**

**சிரேஷ்ட பிரிவு -**

விஜயரகுநாதன் ஸ்ரீவித்தகன் (யாழ். இந்துக் கல்லூரி - முதலிடம்), ஸ்ரீகஜலக்சுமி பத்மநாதஐயர் (கொக்குவில் இந்துக் கல்லூரி -இரண்டாம் இடம்).

**கனிஷ்ர பிரிவு -**

கோபிகா நாகேஸ்வரன் (கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாலயம் - முதலாம் இடம்), ப.ஒஸ்ரியா (கோண்டாவில் பரஞ்சோதி வித்தி. - இரண்டாம் இடம்), தீபா சிவராஜா (கொக்குவில் இந்துக் கல்லூரி - மூன்றாம் இடம்).

**கவிதை -**

ஸ்ரீகஜலஷ்சுமி பத்மநாதஐயர் (கொக்குவில் இந்துக் கல்லூரி - முதலாம் இடம்), சங்கீதா தவராசா (கொக்குவில் இந்துக் கல்லூரி), ஜனனி ஜெயக்குமார் (கொக்குவில் இந்துக் கல்லூரி - இருவரும் இரண்டாம் இடம்).

**சிறுகதை ஆக்கம் -**

சங்கீதா தவராசா (கொக்குவில் இந்துக் கல்லூரி - முதலாம் இடம்), கஜந்தா கருணாகரன் (யாழ். இந்து மகளிர் கல்லூரி), மயூரி சகாதேவன் (கோண்டாவில் பரஞ்சோதி வித்தி. - இருவரும் இரண்டாம் இடம்)
(எ)

## லயன்ஸ் கழக நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஏப்.15

சர்வதேச லயன்ஸ் கழகங்களின் மாவட்ட மட்ட 306 பி பிரிவினருக்கான விசேட இராப்போசனச் சந்திப்பு இன்று சனிக்கிழமை மாலை 6 மணிக்கு யாழ். பலநோக்கு கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட உதவி ஆளுநர் லயன்ஸ் நிமல்ராஜபக்ஷகலந்து கொள்ளவுள்ளார்.
(எ-203)


## மரண அறிவித்தல்



**K.V. வேலுப்பிள்ளை** *(தவம்)*
**(ஓய்வுபெற்ற உணவுக் கட்டுப்பாட்டுத் திணைக்கள உத்தியோகத்தர்)**

கோப்பாய் தெற்கு பழைய வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தவம் என்று அழைக்கப்படும் K.V. வேலுப்பிள்ளை அவர்கள் கடந்த 13.04.2006 வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.04.2006) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் மு.ப.11மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பழைய வீதி,
கோப்பாய். (49475)

*தகவல்:*
K.V. இராசதுரை.
*(சகோதரன், சிவம், சுன்னாகம்).*


## கரம்பன் நாரந்தனையில் பாம்புகளினால் அச்சம்

குருநகர்,ஏப்.15

ஊர்காவற்றுறைப் பகுதியிலுள்ள கரம்பன், நாரந்தனைப் பகுதிகளில் மக்கள் மீளக்குடியமராத இடங்களில் பாம்புத் தொல்லை அதிகரித்துள்ளது. குறிப்பாக பெருகியுள்ள பாம்புகள் ஊர் காவற்றுறை மேற்கு வீதிக் குடியிருப்புகளுக்கு படையெடுத்து வந்த பொதுமக்களை கடித்து வருவதகாவும் -

இதனால் மக்கள் அச்சத்துடன் நடமாட வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஊர்காவற்றுறை மேற்கு வீதியில் வசிக்கும் திருமதி லீனஸ் என்பவர் கடந்த வாரம் பாம்புக்கடிக்கு இலக்காகி சிகிச்சைபெற்றுள்ளார்.
(எ-51)

## கணிப்பீட்டுச் செயலமர்வு ஒத்திவைப்பு

யாழ்ப்பணம்,ஏப்.15

பாடசாலை மட்டக் கணிப்பீடு தொடர்பாகத் தரம் 6 தொடக்கம் 11 வரையான கணித பாட ஆசிரியர்களுக்கு எதிர்வரும் 18 ஆம் திகதி தொடக்கம் மூன்று நாள்கள் நடைபெறவிருந்த செயலமர்வுகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன. இந்த செயலமர்வுகள் யாழ். இந்து மகளிர் கல்லூரிலுள்ள ஆசிரியர் நிலையத்தில் எதிர்வரும் 21ஆம் திகதி கோப்பாய்க் கோட்ட ஆசிரியர்களுக்கும் -

எதிர்வரும் 29 ஆம் திகதி யாழ்ப்பாணம் மற்றும் நல்லூர் கோட்ட ஆசிரியர்களுக்கும் நடைபெறுமென்று யாழ். வலயக் கல்வி அலுவலகத்தினர் தெரிவித்துள்ளனர்.
(ஒ-203)

## ஜெனீவாப் பேச்சுக்கு....

(05ஆம் பக்கத் தொடர்ச்சி)

னர் எரிக் சொல்ஹெய்மை தேசியத் தலைவர் சந்தித்து ஒரு இணக்கப்பாட்டைத் தெரிவித்த பின்னரும் தமிழர் தரப்பில் இருந்து முழுமையாக வன்முறைகள் நிறுத்தப்பட்டு ஒரு கட்டுப்பாட்டுக்குள் நிலைமை இருந்தது. சர்வதேச சமூகம் கூட இதனைச் சுட்டிக்காட்டி வரவேற்றிருந்தது.

ஆனால், ஜெனீவாப் பேச்சு முடிந்து ஒரு சில நாள்களுக்குள்ளேயே எமது போராளிகள் மீது அரச படைகள் வன்முறையைத் தொடக்கி விட்டார்கள். போராளிகள் கொல்லப்படும் நிகழ்வுகள் தொடங்கின. அதன் பின்னர் பொதுமக்கள் கொல்லப்படுகின்ற நிலைமையும் தீவிரப்படுத்தப்பட்ட நிலையில் திருகோணமலையில் தமிழ் மக்கள் பேரவைத் தலைவர் கொல்லப்பட்டமை தமிழ் மக்கள் மத்தியில் அதிர்ச்சியையும் கொந்தளிப்பையும் உருவாக்கியிருக்கின்றது. மக்களைச் சீண்டி அவர்களைக் கொந்தளிப்பான நிலைமையை ஏற்படுத்திய பின்பு தான் படைத்தரப்பில் இழப்புகள் ஏற்படும் நிலை உருவானது. இதற்கு முழுக் காரணம் படைத்தரப்பினர் தான்.

*கே:* கிழக்குத் தளபதிகள் வந்து தலைமையுடன் கலந்துரையாடிய பின்னர் எப்போது பேச்சுகள் ஆரம்பமாகும்?

*ப:* எங்களுடைய தளபதிகள் வந்து போனவுடன், அனுசரனையாளர்கள் பேச்சுக்கான திகதி குறித்த தீர்மானத்தை எடுப்பர். அவர்கள் தான் அதைத் தீர்மானிக்க வேண்டும்.

*கே:* அதற்கு உங்களால் ஏதாவது யோசனை முன்வைக்கப்பட்டதா?

*ப:* 15ஆம் திகதி எமது தளபதிகள் வந்து 22ஆம் திகதி திரும்பிச் சென்ற பின்னர் எமது தூதுக்குழு பேச்சுக்குச் செல்லத் தயார் என்பதை நாம் தெரியப்படுத்தியுள்ளோம். அதற்கான திகதியை நிர்ணயிப்பது நோர்வேயினதும், சுவிஸ் அரசினதும் பொறுப்பாகும்.

*கே:* ஜெனீவாப் பேச்சுக்கள் ஆரம்பிப்பது யாருடைய கையில் தங்கியுள்ளது?

*ப:* இன்றைய சந்திப்பின் முடிவில் நாம் கண்காணிப்புக் குழுவினருடன் உரையாடிய பின்பும் நாங்கள் கொடுத்த பரிந்துரைகளின் பின்பும் சர்வதேச சமூகத்தின் கையிலும் குறிப்பாக அனுசரணையாளர்களின் கையிலும் தான் ஜெனீவாப் பேச்சினுடைய முடிவு தங்கியுள்ளது.
(3-8)


**அஸ்ரன் கல்வி நிலையம்**
**நவாலி வீதி, மானிப்பாய்**

தரம் 01 முதல் O/L வரையாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் எமது கல்வி நிலையத்திற்கு தரம் 06 முதல் O/L வரையிலான சகல பாடங்களுக்குமான ஆசிரியர்க்ள் தேவை.

தகைமையுடையோர் 20.04.2006 இற்கு முன்னர் தொடர்பு கொள்ளவும்.
தொ.பே:021 222 6141. (49433) (39)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைதியும், பாதுகாப்பான சூழ்நிலையும் உருவாக அனைத்துத் தரப்பினரும் உழைக்கவேண்டும்

## ஈஸ்டர் செய்தியில் யாழ். ஆயர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம்,ஏப்.15

தமிழ் மக்களின் மனதுகளில் அமைதியும் அவர்களுக்குப் பாதுகாப்பான சூழ்நிலையும் தோன்றுவதற்கு அரச தலைவர்களும் மற்றும் அனைத்துத் தரப்பினரும் உழைக்கவேண்டும் என அழைப்பு விடுக்கிறேன்.

- இவ்வாறு தமது ஈஸ்டர் திருநாள் செய்தி யில் தெரிவித்திருக்கிறார் யாழ். ஆயர் அதி.வண. தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை.

அவரது செய்தி வருமாறு:-

ஆண்டவர் இயேசுவுடைய பாடுகள், மரணம் ஆகிய நிகழ்ச்சிகளை தவக்காலத்தில் சிறப்பான விதமாக தியானித்து அவருடைய உயிர்ப்பின் விழாவினை ஈஸ்ரர் பெருவிழாவாக நாம் கொண்டாடுகிறோம். இயேசுவுடைய பாடுகள், மரணம், உயிர்ப்பு என்கின்ற மறை நிகழ்ச்சி கிறிஸ்தவ மக்களுடைய வாழ்வில் மிக முக்கியமான நிகழ்வாகும். கோதுமை மணி மண்ணில் விழுந்து மடியாவிட்டால் அது அப்படியே இருக்கும். அது மடிந்ததால்தான் மிகுந்த விளைச்சலை அளிக்கும் என்பதற்கு ஒப்ப இயேசு தம்மை அளித்து தமது உயிர்ப்பில் பலருக்கு வாழ்வு கொடுத்தார். உயிர்ப்பின் விழா கடந்த 40 நாள்களின் செப, தவ, தியான அனுபவத்தின் பின்னர் ஒரு மகிழ்வான விழாவாக எம் எல்லோருக்கும் அமைந்துள்ளது. இவ்வேளையில் ஆண்டவர் இயேசுவுடைய உயிர்ப்பு விழா ஈஸ்ரர் வாழ்த்துக்களை எல்லோருக்கும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம்.

யாழ். மண்ணின் மைந்தரும் செபமாலைத் தாசர் நிறுவுநருமாகிய தோமஸ் அடிகளாரின் முத்திப்பேறு பெற்ற பட்டத்திற்கான ஆரம்ப செயற்பாடுகளை முன்னெடுக்கும்படி வத்திக்கான் நகரில் இருந்து எமக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இது ஒரு மகிழ்வான செய்தியாகும். அவருடைய வாழ்வோடும் பணியோடும் தொடர்புடைய அனைவரும் இவருக்கு இப்பட்டம் விரைவாகக்கிடைக்க தமது சாட்சியங்களையும் செபங்களையும் அதிகப்படுத்த வேண்டுமென அழைப்பு விடுக்கிறோம்.

கத்தோலிக்க மக்கள் ஆண்டவர் இயேசுவுடைய உயிர்ப்பு விழாவை வெகு சிறப்பாக கொண்டாடுகின்ற வேளையில் இஸ்லாமிய சமய சகோதரர்கள் முகமது நபியின் பிறப்பு விழாவையும், இந்து சமய சகோதரர்கள் புதுவருட விழாவையும் கொண்டாடுகின்றனர். இவ் விழாக்களைக் கொண்டாடும் இச் சகோதரர்களின் மகிழ்வில் நாமும் கலந்து கொண்டு எமது வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம்.

தமிழ் மக்கள் மனதுகளில் இன்னும் பயமும் குழப்பமுமே நிறைந்துள்ளது. 2ஆவது கட்டப் பேச்சுக்கள் நடைபெறுமா? தமிழ் மக்கள் வாழ்வு அமைதியும் சமாதானமும் பாதுகாப்பும் நிறைந்ததாக அமையுமா? என தமிழ் மக்கள் ஏங்கி இருக்கின்ற வேளையில் அமைதியாயும், பாதுகாப்பாயும் வாழக்கூடிய சூழ்நிலையையும் உருவாக்கித் தரத்தக்கதான ஒரு நல்ல அமைதிநிலை இங்கு தோற்றவேண்டும் என்பதே அனைவரின் ஏக்கமாகும். சம்பந்தப்பட்ட அரச தலைவர்களும் மற்றும் அனைத்துத் தரப்பினரும் சமாதான விரும்பிகள் அனைவரும் இலங்கை வாழ் மக்களின் சுபீட்சமான எதிர்காலத்திற்காக உழைக்க வேண்டுமென அழைப்பு விடுக்கின்றோம்.

உயிர்த்த இயேசு இலங்கை வாழ் மக்களின் அமைதியும், பாதுகாப்பும் நிறைந்த வாழ்விற்கு துணைபுரிய இறைவரம் வேண்டி ஆசிக்கிறோம். (ஐ)(33)


## சொலெக்ஸ் பல், மூக்குக் கண்ணாடி அகம்
## SOLAX DENTAL AND OPTICAL SERVICE

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்களுக்கு எம்மினிய புதுவருட வாழ்த்துக்கள்



- சொலெக்ஸ்சின் புதிய மேலும் இரு சேவைகள்.

1) கொம்பியூட்டர் மூலம் உங்கள் கண்களைப் பரிசோதனை செய்து கண்ணாடிகளை உடன் பெற்றுக் கொள்ளலாம்.
2) வலிகாம எமது வாடிக்கையாளர் நலன் கருதி எமது புதிய கிளையினை சங்கானையிலும் 20ஆம் திகதிமுதல் வழங்கவுள்ளோம்.

**மேலும்:-**

- சிறந்த முறையில் சங்குப்பற்களை கட்டிக் கொள்ளவும், மிதப்பு பற்களிற்கு இலகுமுறையில் கிளிப் செய்து சீர் செய்யவும்.
- கண்களை பரிசோதனை செய்து R.M.Lcss கண்ணாடியினைப் பெற்றுக்கொள்ளலாம்.

சொலெக்ஸ் ஒப்ரிக்கல்ஸ் கிளை: யாழ். சொலெக்ஸ் ஒப்ரிக்கல்ஸ்
516, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (49484) (33-11) சங்கானைச் சந்தி, சங்கானை.


## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 15 - 07 - 1989



மறைவு 16 - 03 - 2006

### செல்வி மைதிலி கணேசமூர்த்தி

கடந்த 16.03.2006 அன்று எம்மைவிட்டுப் பிரிந்த அன்புச் செல்வி கணேசமூர்த்தி மைதிலியின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டோருக்கும், அனுதாபச் செய்திகளை வழங்கியோருக்கும், சகல வழிகளிலும் உதவியும் ஒத்துழைப்பும் நல்கிய உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்வதுடன், இன்று (15.04.2006) சனிக்கிழமை நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கணேசமூர்த்தி,
வண்ணாங்கேணி, பளை. (49486) (33-11) குடும்பத்தினர்.

## சதாவதானி நினைவு விழா ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.15

நாளை ஞாயிற்றுக்கிழமை பருத்தித்துறையில் நடைபெறவிருந்த மேலைப்புலோலி சதாவதானி கதிரவேற்பிள்ளை நினைவு விழா ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

தற்போது ஏற்பட்டிருக்கும் அசாதாரண சூழ்நிலை காரணமாக விழா ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்றும் - விழா நடைபெறும் புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்துள்ளனர். (முன்னர் வந்த செய்தி 6ஆம் பக்கத்தில்) (ஐ-7)(33)


A/L 2006 கருத்தரங்கு ஆரம்பம்: 17 ஏப்பிரல் 2006

கணக்கீடு: திரு. பாலவாசன்

இறுதிச் சந்தர்ப்பம்...

| | பகுதி I | பகுதி II |
|---|---|---|
| கருத்தரங்கு | ஏப்பிரல் 17, 18, 19, 20 | ஏப்பிரல் 24, 25, 26, 27 |
| பரீட்சை | மே 02 | மே 03 |

பிரிவு : 1 7.30–12.30 பிரிவு 2 : 1.00–6.00

அனுமதிப்பத்திரங்களை பெற்றுக் கொள்ளலாம்.

விக்னா யாழ், D.C.M யாழ், நிரு கொமர்ஷல்.

06 கருத்தரங்கு குறிப்புக்கள் வழங்கப்படும்.
ஏப்பிரல் 16 ஆம் திகதிக்கு முன்பாக பதிவுகளினை மேற்கொள்ளவும்.

ராஜா யாழ்ப்பாணம்

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு
பரத், மல்லிகா கபூர் நடித்த
அழகாய் இருக்கிறாய் பயமாய் இருக்கிறது
10.30,2.30,6.30,9.30,(ப.நே.) ரிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

நாகம்ஸ் சுன்னாகம்

புதுவருட வெளியீடாக ஜீவா, சந்தியா மற்றும் பலர் நடித்த
டிஷ்யூம்
காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00, 10.00

நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்

எஸ்.ஜே.சூர்யா, நயன்தாரா, விவேக் நடித்த
கள்வனின் காதலி
காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (ப.நே.)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி கார்த்திகேசு செல்லம்மா



கோப்பாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி கார்த்திகேசு செல்லம்மா அவர்கள் நேற்று (14.04.2006) வெள்ளிக்கிழமையன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசு - பார்வதி தம்பதியரின் அருமை மகளும் அமரர் கார்த்திகேசுவின் அன்பு மனைவியும் சிவராசா (பிரான்ஸ்), சிவசோதிமலர் ஆகியோரின் பாசமிகு தாயும் நமசிவாயம் (ஆசிரியர், கொக்குவில் இந்துக் கல்லூரி), மலர்மாது (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் சஞ்ஜீவன் (சென். ஜோன்ஸ் கல்லூரி), லக்குமி (பிரான்ஸ்), நாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் அருமைப் பேர்த்தியு மாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.04.2006) சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோப்பாய் தெற்கு,
கோப்பாய். தொ.பே. 021 222 3000 (சி/48966) (33-11)
தகவல்: நமசிவாயம் (மருமகன்).

### சரவணை கந்தசாமி



திருநெல்வேலி, பத்திரகாளி கோயிலடியைச் சேர்ந்த சரவணை கந்தசாமி அவர்கள் கடந்த 12.04.2006 புதன்கிழமை கலமானார்.

அன்னார் சற்குணவதியின் அன்புக் கணவரும் கோமேஸ்வரி-துரைசிங்கம், இரத்தினேஸ்வரி - ரகுநாதன் (கொழும்பு), நாகேந்திரம் (கொழும்பு), மகேஸ்வரி - பாலா (கனடா), ரவிந்திரன் (கனடா), நந்தினி - குகேந்திரராசா (லண்டன்), ரவிசங்கர்(சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் துரைசிங்கம், ரகுநாதன், கலாவதி, பாலா (கனடா), கல்பனா, குகேந்திரராசா, விஜிதா ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.04.2006) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் மு.ப. 10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அம்மன் வீதி,
பத்திரகாளி கோயிலடி,
திருநெல்வேலி. (49489) (33-11)
தகவல்: மனைவி, மக்கள், மருமக்கள்.

### திருமதி பாலசிங்கம் கமலம்மா



எழுவைதீவைப் பிறப்பிடமாகவும் வேலணை மேற்கு, வேலணையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாலசிங்கம் கமலம்மா அவர்கள் நேற்றுமுன்தினம் (13.04.2006) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பா பாலசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான வேலாயுதம் - தங்கம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - பிள்ளையாச்சி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சுதாகர், காலஞ்சென்ற மதிவதனி, காலஞ்சென்ற சேகர், ஸ்ரீதர், ரவீந்திரன், ரவிச்சந்திரன், காலஞ்சென்ற ஜெயச்சந்திரன், ஜெயக்குமார் ஆகியோரின் பாசமிகு தாயும் நடராசாவின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற தங்கம்மா, காலஞ்சென்ற சீவரத்தினம், தெய்வேந்திரம், காலஞ்சென்ற கோபாலபிள்ளை ஆகியோரின் மைத்துனியும் உதயராணியின் அன்பு மாமியும் லக்சனா, தர்சனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.04.2006) சனிக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சுருவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வேலணை மேற்கு,
வேலணை - 8 (49488) (33-11)
தகவல்: ஸ்ரீதர் (மகன்).

### தம்பையா இரத்தினசபாபதி

*(ஓய்வுபெற்ற பொலீஸ் பொறுப்பதிகாரி)*

அல்லாரை தெற்கு, மீசாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவரும் தம்பையா - மீனாட்சிப்பிள்ளை தம்பதியரின் புதல்வருமாகிய இரத்தினசபாபதி (ஓய்வு பெற்ற பொலீஸ் பொறுப்பதிகாரி) அவர்கள் நேற்றுமுன்தினம் (13.04.2006) வியாழக்கிழமை அன்று அகாலமரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சீதேவிப்பிள்ளை அவர்களின் அன்புக் கணவரும் செல்வநாயகி (ஜேர்மனி), செல்வராணி (ஆசிரிய ஆலோசகர், வவுனியா), ஸ்ரீபஞ்சாட்சரம் (நோர்வே) ஆகியோரின் அன்புத் தந்தையும் நல்லையா, செல்வறஞ்சன், மேனுகா ஆகியோரின் அன்பு மாமனும் டிலாணி, டிலக்ஷி, ரிவேகா, அலன்ரீனா, சஜீன், றோசா, சோனியா, றூபன் ஆகியோரின் அன்புப் பேரனும் மங்கையர்க்கரசி, காலஞ்சென்ற சபாரட்ணம், நடராஜா, காலஞ்சென்ற பராசக்தி, சர்வலக்ஷ்மி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.04.2006) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொற்புலவு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அல்லாரை தெற்கு,
மீசாலை. (49487) (33-11)
தகவல்: பிள்ளைகள், மருமக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





திருகோணமலையில் கடந்த இரு தினங்களுக்கு முன் இடம்பெற்ற இனக்கலவரத்தில் உயிரிழந்த பெண் ஒருவரின் சடலத்தையும், கதறியழும் உறவினர்களையும் படங்களில் காணலாம்.

# திருமலைப் படுகொலைகளுக்காக இலங்கை அரசை எச்சரியுங்கள்!

## இந்தியப் பிரதமரிடம் பழ. நெடுமாறன் வேண்டுகோள்

சென்னை,ஏப்.15

திருகோணமலையில் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதைக் கண்டித்து சிறிலங்கா அரசாங்கத்தை இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் எச்சரிக்கவேண்டும் - இவ்வாறு தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஓவியர் புகழேந்தியின் 'தமிழீழம்' நூல் வெளியீட்டு விழா சென்னையில் நேற்று நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு தலைமை வகித்த பழ. நெடுமாறன் தனது உரையில் கூறியதாவது:-

திருகோணமலைப் படுகொலைகளை இந்திய அரசு இதுவரை கண்டிக்காமல் இருப்பது தமிழகத் தமிழர்களை இரண்டாம் தரக் குடிமக்களாகக் கருதுகிற போக்கைத் தான் வெளிப்படுத்துகிறது.

திருமலைப் படுகொலைகளைக் கண்டித்து சிறிலங்கா அரசாங்கத்தை இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் எச்சரிக்கவேண்டும்.

கடந்த 2 ஆண்டுகளுக்கு மேலாக இந்தியப் பிரதமரைச் சந்திக்க இலங்கையின் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனுமதி கோரிவருகின்றனர். ஆனால், இந்திய அரசு அனுமதி மறுத்து வருகிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை உடனே இந்தியாவுக்கு அழைத்து இலங்கைத் தமிழரது நிலைமைகளை இந்தியப் பிரதமர் கேட்டறியவேண்டும் என்றார் பழ. நெடுமாறன்.

தமிழீழத்தில் நடைபெற்ற ஓவியக் கண்காட்சிகள் மற்றும் தமிழீழ நிலைமைகளை தனது புத்தகத்தில் ஓவியர் புகழேந்தி பதிவு செய்துள்ளார். இந்நூலை இயக்குநர் மணிவண்ணன் வெளியிட்டார்.

தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சியின் செயலாளர் பெ.மணியரசன், தமிழ் தமிழர் இயக்கப் பொதுச்செயலாளர் தியாகு, இயக்குநர் சீமான் ஆகியோர் நூல் பற்றிக் கருத்துரை யாற்றினர். (ஐ)(33)

# சித்திரைப் புத்தாண்டு நேற்றுக் களை இழந்தது

யாழ்ப்பாணம்,ஏப்.15

சித்திரைப் புத்தாண்டு தினம் நேற்று குடாநாட்டில் களை இழந்தது.

கடந்த சில தினங்களாக மீண்டும் ஆரம்பித்திருக்கும் படுகொலைகள், சூட்டுச் சம்பவங்கள் மக்கள் மத்தியில் பீதியை உருவாக்கியிருப்பதால் மக்கள் புத்தாண்டை மகிழ்வுடன் கொண்டாடும் மனநிலையில் காணப்படவில்லை.

புத்தாண்டுக்கு முதல் நாளான நேற்று முன்தினம் தென்மராட்சிப் பகுதியில் இடம்பெற்ற நான்கு படுகொலைகள் அந்தப்பகுதி மக்களை பீதிக்குள் ஆழ்த்திவிட்டன.

புத்தாண்டு தினமான நேற்று ஆலயங்களில் நடைபெற்ற திருவிழாக்களில் மக்கள் மிகக் குறைவாகவே கலந்துகொண்டனர். வேறு விழாக்கள், களியாட்டங்கள் எதுவும்புத்தாண்டை முன்னிட்டு நடைபெறவில்லை.

நகரப்பகுதிகள் வெறிச்சோடிக் கிடந்தன. அசம்பாவித சம்பவங்கள் இடம்பெறலாம் என்று கருதி மக்கள் மாலையில் இருள் பரவும் முன்பே வீடுகளுக்குள் முடங்கினர். (ஐ-7-15)(33)

## நல்லூரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நல்லூர், மூத்தவிநாயகர் கோயிலடியைச் சேர்ந்த சிவராசா மயூரன் என்ற இளைஞனே உயிரிழந்தவராவார்.

மோட்டார் சைக்கிளின் பின்னால் அமர்ந்து சென்ற சுரேஸ் ராஜா (வயது 20) என்ற இளைஞன் காயங்களுக்கு உள்ளான நிலையில் யாழ். மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கிறார்.

உயிரிழந்த இளைஞனின் சடலம் பிரேத பரிசோதனைக்காக மருத்துமனையில் வைக்கப்பட்டிருக்கிறது.

போக்குவரத்துப் பிரிவு பொலீஸார் சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்று விசாரணை நடத்தினர். விபத்தில் சம்பந்தப்பட்ட வானின் சாரதி கைதுசெய்யப்பட்டிருக்கிறார். (ஐ-7)

## மக்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கைகள் தற்போதைய சமாதான முயற்சிகளில் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தலாம் - என்று எச்சரித்திருக்கின்றார் விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எஸ்.எழிலன்.

திருமலைமாவட்டத்தில் நேற்று தமிழ் மக்களுக்கு எதிராக புதிதாக வன்செயல்கள் கட்டவிழ்த்துவிடப்பட்டதை அடுத்து வெளியிட்ட ஓர் அறிக்கையிலேயே எழிலன் மேற்கண்டவாறு எச்சரித்துள்ளார்.

வடக்கு - கிழக்கில் அரசுப் படைகள் எப்போது தமிழ் மக்களுக்கு எதிராக இன அழிப்பு நடவடிக்கைகளை ஆரம்பித்தனவோ அப்போதே நாங்கள் ஆயுதம் ஏந்தத் தொடங்கினோம்.

தற்போது சமாதான காலத்தில் அரசுப் படைகளும் சிங்களக் குண்டர்களும் மீண்டும் அதேபோன்று தமிழ் மக்களுக்கு எதிரான கட்டுப்பாடற்ற இன அழிப்பு நடவடிக்கைகளை ஆரம்பித்திருக்கிறார்கள் - என்று எழிலன் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (ஐ-7)(22)

## திருமலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அபிவிருத்தி அகம் எனப்படும் தொண்டு நிறுவனத்தின் அலுவலகமும் சிங்களக் குண்டர்களால் தாக்கப்பட்டு அங்கிருந்த பொருள்கள் தீக்கிரையாக்கப்பட்டன என்றும் கூறப்படுகின்றது.

மஹிந்தபுரவில் கலவரங்களைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் பெருந்தொகையான பொலீஸார் திருமலையின் நுழைவாயிலான ஹபரண பகுதியில் கொண்டுவந்து குவிக்கப்பட்டிருந்தனர்.

அந்தப் பகுதியில் உள்ள பாடசாலைகளில் இவர்கள் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என்று ஒரு தகவல் தெரிவித்தது.

நேற்றுமுன்தினம் கொழும்பையும் அதன் சுற்றாடலிலும் உள்ள பிரதேச பொலீஸ் நிலையங்களில் இருந்து அழைக்கப்பட்ட பொலீஸார் நேற்றுமுன்தினம் மாலை ஹபரணைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

நேற்று கலவரம் மூண்ட இடங்களில் கடற்படையினர் தண்ணீர் பவுஸர்களுடன் தயார் நிலையில் காணப்பட்டனர் என்று அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இனக்கலவரம் ஏற்படுத்திய பதற்றம் காரணமாக தமிழ் குடும்பங்கள் இடம்பெயரத் தொடங்கியுள்ளன. நேற்று புத்தாண்டு தினம் திருமலையில் கலகலப்பு ஏதும் இன்றி கழிந்தது.

இந்து ஆலயங்களில் இடம்பெற்ற புத்தாண்டு பூசை வழிபாடுகளில் மிகக் குறைந்த எண்ணிக்கையான மக்களே கலந்துகொண்டிருந்தனர்.

இதேவேளை-

மஹிந்தபுரவில் ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கென அமைத்துக் கொடுக்கப்பட்டிருந்த வீடுகளையும் கும்பல் ஒன்று தீயிட்டுக் கொளுத்தியதுடன் அடித்து நொறுக்கியும் உள்ளது.

- இதன் போது மகேஸ்வரி என்ற பெண்மணி கொல்லப்பட்டார் என்று ஒரு தகவல் தெரிவித்தது. அதனை ஊர்ஜிதம் செய்ய முடியவில்லை. (ஐ-7)(33)

## ஜெனீவா செல்லும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குழுவினர் கட்டுநாயக்கா ஊடாகப் பயணம் மேற்கொள்வதற்குரிய பாதுகாப்பு உத்தரவாதத்தை அரசுத் தரப்பு நோர்வே ஊடாகப் புலிகளுக்கு வழங்கி உள்ளது. எனினும் அரசின் இந்த உத்தரவாதம் தொடர்பாக புலி கள் தரப்பு திருப்தி அடையவில்லை என்று தெரிகின்றது.

ஜெனீவா சமாதானப் பேச்சுக்கள் சர்வதேச சமூகத்தின் ஆதரவோடு நடத்தப்படுவதால் புலிகளின் தலைவர்களது பயணப் பாதுகாப்பு விடயத்திலும் சர்வதேச சமூகத்தின் உத்தரவாதத்தைப் புலிகள் எதிர்பார்க்கின்றனர்.

தங்கள் தலைவர்களின் பாதுகாப்பு விடயத்தில் சர்வதேச சமூகத்தின் உத்தரவாதம் அவசியம் என்ற நிலைப்பாட்டில் விடுதலைப் புலிகளின் தலைமை திடமாக உள்ளது என்றும் இதற்கான உத்தரவாதத்தை நோர்வேயிடமிருந்து அது எதிர்பார்த்திருப்பதாகவும் தமிழ்ச்செல்வன் தெரிவித்தார். (ஐ)(22)

## இராணுவ வாகனம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தோட்டம் பகுதியில் இத்தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது.

திருகோணமலை, நிலாவெளி வீதியில் இராணுவத்தினரது பஸ் சென்று கொண்டிருந்த சமயம் வீதியோரமாக நிறுத்தப்பட்டிருந்த சைக்கிள் ஒன்றில் பொருத்தப்பட்டிருந்த கிளைமோர் கண்ணி வெடிக்கவைக்கப்பட்டிருக்கிறது என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தச் சம்பவத்தில் இரண்டு படையினரும் வாகனத்தைச் செலுத்திச் சென்ற சாரதியான சிவிலியன் ஒருவரும் படுகாயமடைந்தனர். வீதியோரமாக நின்றிருந்த வேறு இரு சிவிலியன்களும் இந்தச் சம்பவத்தில் காயமடைய நேர்ந்தது.

இராணுவத்தினருக்கு உணவு விநியோகிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த வாகனம் மீதே இத்தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது என்றும் -

இது விடுதலைப் புலிகளால் நடத்தப்பட்ட மற்றொரு தாக்குதல் என்றும் -

இராணுவப் பேச்சாளர் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்தை அடுத்து அலஸ் தோட்டம் மற்றும் பகுதிகளில் பதற்ற நிலை காணப்பட்டது. (ஐ-7)(22)

## பேச்சுக்குப் புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிர்ணயிக்கப்பட்ட புதிய திகதிகளில் நடைபெறவிருக்கும் அடுத்த கட்டப் பேச்சுக்களில் கலந்துகொள்ள புலிகள் இணக்கம் தெரிவித்துவிட்டபோதிலும் தமிழர் தாயகத்தில் தோற்றுவிக்கப்பட்டிருக்கும் நெருக்கடியான நிலைமையும் போர்ச்சூழ்நிலையும் தணிக்கப்பட்டால்தான் இந்தப் பேச்சுக்களில் பங்குபற்றுவது சாத்தியமாகும் என்று விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் கூறுகின்றன.

கண்காணிப்புக் குழுவின் ஏற்பாட்டில் ஒழுங்குசெய்யப்படும் கடற்கலங்களில் விடுதலைப் புலிகளின் கிழக்கு மாகாணத் தளபதிகள் வன்னிக்கு வந்து தலைமைப் பீடத்துடன் ஆலோசனை நடத்திவிட்டுத் திரும்புவதற்குச் செய்யப்பட்டிருக்கும் ஏற்பாடு சரிவர நடைமுறைப்படுத்தப்படுதல் -

தமிழர் தாயகப் பகுதிகளில் இராணுவத்துடன் சேர்ந்து இயங்கும் ஒட்டுப்படைகளின் செயற்பாடுகள் ஒடுக்கப்பட்டு அக்குழுக்களை நிராயுதபாணிகளாக்கி வெளியேற்றும் கடப்பாட்டை அரசு நிறைவேற்றுதல் -

தமிழர் தாயகத்தின் தலைநகரில் தமிழ் மக்களுக்கு எதிராக சிங்களக் காடையர்களால் கட்டவிழ்த்துவிடப்பட்டிருக்கும் இன அழிப்பு நடவடிக்கைகள் முற்றாக நிறுத்தப்பட்டு அங்கு இயல்புநிலை தோற்றுவிக்கப்படுதல் ஆகியனவற்றையும் ஏற்கனவே ஜெனீவா பேச்சுக்களில்இணக்கம் காணப்பட்ட விடயங்களையும் அரசுத் தரப்பு நிறைவேற்றி கள நிலைமையில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டால் மட்டுமே அடுத்த கட்டப் பேச்சுக்கள் நடப்பது சாத்தியம் என்று விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் கருதுகின்றன. (ஐ)(22)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15.04.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org